அடமானக் என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Lic# 10894
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Broker
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com

# வைகறை

பொழுது-05, இதழ் 171, தை 23, 2010 January 23, 2010

பல் வைத்திய நிலையம்
Dr. Iru Vijayanathan
3151 Markham Rd #129
Scarborough
(Markham & Steels)
416-609-2022
3150 Eglinton Ave. E
Markham & Eglinton
416.264.3232
WALK IN DENTAL CLINIC

# சர்வாதிகாரத்தை நோக்கி நாடு வழி நடத்தப்படுகின்றது

நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்வதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமை காரணமாக நாட்டின் பாராளுமன்ற முறைமை வலுவிழந்து காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் காலியில் நடைபெற்ற விசேட தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தை ஜனாதிபதி அடக்குமுறைக்கு உட்படுத்துவதன் மூலம் நாடு நேரடியாக சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதாகத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் பாராளுமன்றம் பூரண அதிகாரத்துடன் காணப்பட்டதாகவும், தற்போது அதிகாரமிழந்து காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழமையாக டிசம்பர் மாதத்தில் 20 நாட்கள் பாராளுமன்றம் கூடும் எனவும், வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெறும் எனவம் அவர் தெரிவித்துள்ளார். எனினும், நிறைவேற்று அதிகார ஆட்சி முறைமையினால் இம்முறை வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை எனஅவர் குறிப்பிட்டுள்ளார். 2009ம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டு தடவைகள் மட்டுமே பாராளுமன்ற அமர்வுகள் நடைபெற்றதாக அவர் தெரிவித்துள்ளார். டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் ஒவ்வொரு தினம் மட்டுமே பாராளுமன்றம் கூடியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முற்று முழுதாக ஓரங்கட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் தேர்தல்கள் ஆணையாளரின் செய்தியாளர் மாநாடு தேர்தல்கள் செயலகத்தில் இன்று பிற்பகல் நடைபெற்றது. இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட தேர்தல்கள் ஆணையாளரின் முகத்தை பார்க்கும் போது அவர், நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலினால் எந்தளவில் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது நன்கு புலனாகியது. இன்றைய செய்தியாளர் மாநாட்டின் இறுதியில் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்பதற்கு எத்தனித்த வேளை கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், தான் இன்று யாருடைய கேள்விக்கும் பதிலளிக்க தயாரில்லை என குறிப்பிட்டார். அத்துடன், நீங்கள் அனைவரும் உங்களுடைய நிறுவனத்தின் சார்பில், நிறுவன உரிமையாளர் சார்பில், உங்களுக்கு ஆதரவானர்கள் சார்பில் உங்களுக்கே உரித்தான பாணியில் பல சொற்பிரயோகங்களைப் பயன்படுத்திக் கேள்விகளைக் கேட்பீர்கள். ஆனால் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கும் நிலையிலும், தருணத்திலும் தான் இல்லை எனவும் மிகவும் மனவருத்தத்துடன் கூறியதைக் காணக் கூடியாதாக இருந்தது. இன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஆரம்பத்தில் கருத்துரைத்த அவர், எந்த முறையும் இல்லாத வகையில் இந்தத் தடவை தேர்தல் சட்டங்கள், விதிகள் அதிகளவு மீறப்பட்டுள்ளதாகவும், தனது கட்டளைகள் பலவும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இதனாலேயே அரச ஊடகங்களை கண்காணிப்பதற்காக தன்னால் நியமிக்கப்பட்ட அதிகாரியையும் தான் திருப்பி அழைத்துக்கொண்டதாக தெரிவித்த அவர், அந்த அதிகாரி வெறுமனே அதிகாரி என்ற பெயரில் மாத்திரம் குறித்த கடமையைப் புரிவது அழகல்ல எனவும் குறிப்பிட்டார்.

இந்த முறை யாராலும் கள்ளவாக்குகள் போட முடியாது எனக் குறிப்பிட்ட அவர், கள்ள வாக்குகள் போடுவதைத் தடுப்பதற்காக விஷேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.




Canadian Red Cross
TEXT REDCROSS TO
30333
TO DONATE $5 TO
HAITI RELIEF



அவநம்பிக்கையில் நம்பிக்கை
பக்கம் - 04



வீழ்ந்துபோனதொரு தேசம்
பக்கம் - 08



ஒருபுறம் வேடன்! மறுபுறம் நாகம்!
பக்கம் - 15

$2.00

வைகறை $2.00
பக்கம் - 03

# புலம்பெயர்வும் இடம்பெயர்வும்

*கடந்த 14ந்திகதி நவம்பர் மாதம் ஸ்கார்பரோ canadian for peace அமைப்பினரால் உபாலி கூரே அவர்களது நினைவு தினக் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் சிங்கள எழுத்தாளர்களும் முற்போக்குவாதிகளும் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.*

*ராஜன் பிலிப்ஸ், அஜித் ஜனதாச, பண்டார, ஆகியோருடன் தலித் விடுதலைப் போராளி தங்கவடிவேல் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புப் பேருரை நிகழ்த்தினார்கள். தங்கவடிவேல் அவர்கள் 'இடப்பெயர்வு புலம்பெயர்வு' என்ற தலைப்பில் பேசினார். வைகறை வாசகர்களுக்காக அவரின் உரையை கீழே தருகின்றோம்.*

அன்பர்களே நண்பர்களே அனைவருக்கும் வணக்கம். நான் சமாதானத்திற்கான கனடியர் அமைப்பினர் நடாத்தும் இந்தக் கூட்டத்தில் பேசுவதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.. எனக்குத் தரப்பட்ட தலைப்பு இடம்பெயர்ந்தவர்களும் புலம்பெயர்ந்தவர்களும். இது ஒரு அருமையான தலைப்பு. அன்பர்களே முதலில் இடம்பெயர்வு என்ற பதத்தை எடுப்போமாக இருந்தால் இலங்கையில் தமிழர்களாக இருந்த தமிழர்களோடு இருந்த ஒருசாரார் அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள்தான் முதன் முதலில் இடம்பெயர்வுக்கு உள்ளானார்கள். நண்பர்களுக்கு நான் இதை ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். முற்றுமுழுதாக தமிழர்கள் வாழுகின்ற யாழ்ப்பாண மண்ணிலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழை மக்கள் உயர் சாதி என்று சொல்லப்படுபவர்களால் பல தடவை இடம்பெயர்வுக்கு வற்புறுத்தப்பட்டார்கள். பலர் மனபங்கப்படுத்தப்பட்டார்கள். பல இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டார்கள். விசேடமாகப் பெண்கள். பலரது குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. அதேபோல ஓரிடத்தில் நிரந்தரமாக வாழுகின்ற தங்களது அடிப்படை உரிமையை இழந்து யாழ்ப்பாண மண்ணிலே இருந்த தாழ்த்தபட்ட மக்கள் திருகொணமலைக்கும் வன்னிப் பகுதிக்கும் இடம்பெயர்ந்த வரலாறு ஏராளம் ஏராளம். இது ஒன்றும் கற்பனைக் கதையல்ல. நிதர்சனமான வரலாற்று உண்மைகள். இந்தச் சாதித் துவேசம் என்கின்ற அடிப்படையான கேவலமான மிருகத்தனமான மிலேச்சத்தனமான இந்தக் கட்டமைப்பிலிருந்து எங்களுடைய இலங்கை அரசியலில் இனவாதமும் சரி மதவாதமும் சரி முளைத்திருக்கின்றன. முளைக்கின்றன.

தமிழ் மொழியைவிட வேறுமொழி தெரியாது. வேறு மொழிகளைப் படிப்பதற்கு வாய்ப்பளிக்ப்படாத மக்கள். பாடசாலைகளிலே படிக்க்கூடாது என்று தடுக்கப்பட்ட மக்கள்.தாங்கள் நினைத்தது போல் உடைதரிக்க முடியாது போன மக்களை மிகவும் கீழ்த்தரமான வாழ்நிலைக்குத் தள்ளி மிக மோசமான மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் இலங்கை வரலாற்றிலே மேட்டுக் குடியினர் என்று சொல்லப்படும் சாதிமான்களான யாழ்ப்பாணத்துக் கனவான்களே என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். யாழ்ப்பாணத்துத் தமிழ்த் தலைவர்கள் யாழ்ப்பாணமண்ணிலே வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களது உரிமையை கொ-டுக்க மறுத்து செய்த கொடுமைகள் ஏராளம். இப்படியான தலைவர்கள் இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு அதாவது 1948ம் ஆண்டுக்கு முன்னும் பின்னும் எப்படிச் சிங்களத் தலைவர்களோடு உறவாடினார்கள் என்பதைநாங்கள் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லலாம், டி.எஸ் சேனநாயக்கா குடும்பம் பின் பண்டாரநாயக்கா குடும்பம் அதன்பின் வந்தவர்கள் என அனைவரோடும் மிகநெருங்கிய உறவை வைத்துக் கொண்டிருந்தவர்கள் இராமநாதன், அருணாசலம், ஜி.ஜி. பொன்னம்பலம் அதன்பின் வந்த சுந்தரலிங்கம், திருச்செல்வம் போன்றவர்கள். இந்த இரண்டு இனவாதிகளும் இந்த இரண்டு சாதிவாதிகளும் தான் இலங்கையில் நடைபெற்ற அனைத்து அட்டூழியங்களுக்கும் மோதல்களுக்கும் அடாத்துக்களுக்கும் விதை விதைத்தார்கள் என்று சொல்வது ஒன்றும் பொய்யல்ல. கட்டுக்கதையல்ல.

நண்பர்களே... சிங்கள அரசியல் தலைவர்கள் முழு இலங்கையையும் ஆண்ட காலத்திலே அதாவது உதாரணத்திற்கு டி.எஸ். சேனநாயக்கா காலத்திலே அவர் பிரதமராக இருந்த காலத்திலே அவருக்கு சகல விதமான உதவிகளையும் ஒத்தாசையையும் செய்தவர்கள் ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றவர்கள். ஏனெனில் அவர்கள் ஒரு வர்க்கத்தைச் ரேுவருக்கொருவர் உதவியாகவும் பாதகாப்பாகவும்தான் இருந்திருக்கிறார்கள். சேனநாயக்கா அவர்கள் குடியேற்றத் திட்டம் ஒன்னைக் கொண்டுவந்த பொழுது சிங்களக் குடியேற்றம் என்று சொன்னார்கள். அன்றைய தமிழ்த் தலைவர்கள் அவர்களுக்கு உடன்பாடாய்த்தான் இருந்தார்கள். ஒத்தாசையாகத்தான் இருந்தார்கள். அப்போது இதனைத் தவறு என்றும் பிரச்சனைக்குரியவை என்றும் இடதுசாரிகள் சொன்னபொழுது இந்தத் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு சேர்ந்து நின்று தமது கைங்கரியங்களை எவ்வித தமிழ் மக்களில் ஒரு சாராருக்கு உரிமைகள் கொடுக்கக் கூடாது என்று பேசியவர்கள் சிங்களத் தலைவர்கள் அல்ல. முதல் பேசியவர்கள் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள். பின்னர் அந்த அடக்கப்பட்ட மக்கள் அடக்குமுறைக்கெதிராக வீறு கொண்டெழுந்துதெளிந்த மனதோடு மார்கிய லெனினிச சோசலிச கொள்கையோடு சேர்ந்து எடுத்த நடவடிக்கைக்கு எதிராக நின்றவர் வவுனியா சி.சுந்தரலிங்கம் அவர்கள். இவர்களுக்கு எதிராக சிங்கள அரசு எந்த நடவடிக்கையும் எடக்கவில்லை. தட்டிக் கேட்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள்தான் கேட்டார்கள்.

நண்பர்களே சாதிவாதம் மொழிவாதம் இனவாதம் வர்க்க வாதம் எல்லாமே கிட்டத்தட்ட ஓரிடத்தில் இருந்துதான் பிறக்கின்றது. சாதி அடக்குமுறை எவ்வளவு பயங்கரமானதோ அதேயளவு பயங்கரமானதுதான் இனவாதம். வர்க்க வாதமும் அப்படித்தான். வர்க்கமுரண்பாடு உலகம் முழுமைக்கும் பொதுவானது.

அடுத்து, பண்டார நாயக்கா ஆட்சிக்கு வருகிறபொழுது இரண்டே இரண்டு கட்சிகள்தான் சிங்களவர்களிடம் இருந்தது. ஒன்று ஐக்கியதேசியக்கட்சி மற்றது சிறீலங்கா சுதந்திரக் கட்சி. பண்டாரநாயக்கா 1947இலேயே தமிழ்த் தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றவர்களிடம் இலங்கையில் ஒரு இனப்பிரச்சனை இருக்கிறது இது பிற்காலத்தில் வளர்ந்து பெருத்து வெடித்து பேராபத்தை உண்டுபண்ணக்கூடியது. ஆனபடியால் இரண்டுபகுதித் தலைவர்களும் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வருவதன் மூலம் இதை விஸ்பரூபம் எடுக்காமல் தடுக்கமுடியும் என்று சொல்லியிருக்கிறார். இது எஸ்.டி-பிள்யூ.ஆர்.டி. பண்டபரநாயக்காவின் மனதில் எழுந்த எண்ணம். இது எங்கள் தமிழ்த் தலைவர்களது மனதில் தோன்றியதல்ல. பின்னர் பண்டாரநாயக்காவும் தந்தை செல்வநாயகமும் சேர்ந்து ஒப்பந்தம் ஒன்றை எழுதினார்கள். இது பூரணமானதாக இல்லாவிடினும் பின்னர் எழுந்த மிகப்பெரிய பிரச்சனைகளை தவிர்க்க அது காத்திரமான பங்களிப்பைச் செய்தது.



**இனவாதம் என்பது தமிழர்களிடமும் இருந்தது.**
**அது தமிழ் இனவாதம்.**
**சிங்களவர்களிடமும் இருந்தது சிங்கள இனவாதம்.**
**இந்த இனவாதத்தை**
**மக்களுடைய தொகையைக் கொண்டு**
**நாங்கள் தீர்மானிக்க இயலாது.**
**தமிழ் இனவாதம் என்பது இந்த வெறி என்பது,**
**இந்த மிலேச்சத்தனமென்பது சிங்கள இனவாதத்தை**
**விட எந்தளவிலும் குறைந்ததல்ல.**

ஜே.ஆர். ஜெயவர்த்தனா என்ன செய்தார் என்று உங்களுக்குத் தெரியும். ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் பண்டாரநாயக்காவும் செல்வநாயகமும் செய்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து கண்டி யாத்திரை செய்தார். கண்டி யாத்திரை செய்ததன் மூலம் சிங்கள இனவாதத்தை தூண்டினார். நான் சிங்களப் பேரினவாதம் என்று சொல்ல மாட்டேன். நண்பர்களே நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியாது. இனவாதம் என்பது தமிழர்களிடமும் இருந்தது. அது தமிழ் இனவாதம். சிங்களவர்களிடமும் இருந்தது சிங்கள இனவாதம். இந்த இனவாதத்தை மக்களுடைய தொகையைக் கொண்டு நாங்கள் தீர்மானிக்க இயலாது. தமிழ் இனவாதம் என்பது இந்த வெறி என்பது, இந்த மிலேச்சத்தனமென்பது சிங்கள இனவாத்தை விட எந்தளவிலும் குறைந்ததல்ல. ஜே.ஆர்.அவர்களது கண்டியாத்திரையின் பிற்பாடு யூ. என்.பி கட்சி சிங்கள மக்களிடத்தில் கணிசமான ஆதரவைப் பெற்று வளருகிறது. அதற்கான ஆதாரம், மூலதனம் இனவாதமே.

இன்றுவரை அனைத்துப்பிரச்சனைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் மூலகாரணம் பொருளாதாரம் தான் அந்த ஏற்றத்தாழ்வு தான் என்று சொன்னவர்கள் இடதுசாரிகள் தான். இடதுசாரிகள் ஒன்றையே நினைத்து நேரான பாதையில் சென்றதனால்தான் ஒரு போதும் இடறவில்லை. ரஸ்சியா என்றும் மொஸ்கோ என்றும் ரொஸ்கியம் என்றும் பிளவுபட்டு நின்றதும் இவர்கள் ஒற்றுமைப் படாததும் தவறுதான். இந்த மூவரும் ஒற்றுமைப்பட்டு நின்றிருந்தால் இலங்கையில் நடைபெற்ற அரசியல் அனர்த்தங்கள் நிட்சயம் தவிர்க்கப்பட்டிருக்கும். தவிர்க்கப்படுவது மாத்திரமல்ல ஒரு பெரிய ஐக்கியம் இந்த மக்களிடையே வந்திருக்கும். நான் 1956ம் ஆண்டு கல்லோயா அபிவிருத்தி சபையிலே பணிபுரிந்தேன். இலங்கை வரலாற்றிலே முதலாவது இனக்கலவரம் அங்கேதான் வெடித்தது. இனக்கலவரம் அம்பாறையில் வெடித்தபொழுது எனக்கு அப்போது 23 வயது. அந்தநேரம் எங்களை ஒரு துன்பமும் இல்லாது பாதுகாத்தவர்கள் எங்களது சிங்கள நண்பர்கள்.

நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். பிரேமரட்ணா என்று அம்பாந்தோட்டையில் இருக்கின்ற எனது நண்பன் என்னையும் இன்னும் மூன்று தமிழ் இளைஞர்களையும் ஒரு பேக்கரியிலேயே கொண்டு போய் பத்திரமாக இருக்கச் சொல்லி விட்டார். அது முதலாவது அனுபவம். அங்கே பார்த்தால் ஒவ்வொருவரும் வெவ்வேறு கோலங்களில் இருக்கின்ற தொழிலாளிகள். பார்க்க எங்களுக்கு மிகவும் அச்சமாக இருந்தது. தமிழன்ர குணம் என்ன பார்த்தவுடன் எல்லோரையும் சந்தேகிப்பது. அங்கிருந்த கத்திகள் கோடாலிகளைப் பார்க்க எனது நண்பர்களுக்குப் பயம் வந்துவிட்டது. ஆனால் தனது தம்பியினது பேக்கரிதான் இது. நீங்கள் இங்கிருந்து வெளியில் போக யோசிக்க வேண்டாம். வெளியில் நிலைமை படுமோசமாகவுள்ளது. என்பதை பிரேமரட்ண விளக்கினார். தனது தம்பியும் என்னைப் போல்தான் ஆதலினால் பயப்படவேண்டாம் என்றார். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அடிமட்டத்து மனிதர்கள் தொழிலாளிகள் உறவு கொள்வது என்பது திடீரென ஏற்படும் சிக்கல்களிலும் அல்லது அளவு கடந்த அன்பிலும்தான்.

1987களில் பலாலி இராணுவமுகாமைச் சுற்றியுள்ள கிராமத்து குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி இடம்பெயர வேண்டிவந்தது. அனைவரும் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்தார்கள். அந்தநேரம் இரண்டுநாள் தங்குவதற்கு அரசாங்க அதிபரும் பொலிசும் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டபொழுது, சாதியிலே ஒடுக்கப்பட்ட மக்கள் ஒருபகுதியிலேயே விடப்பட்டு சாதிமான்கள் வேறுபகுதியிலே போய்ச் சேர்ந்தார்கள். பின்பு நடந்த உள்நாட்டு யுத்தத்திலே எங்களுடைய மக்கள் உயிருக்குப் பயந்து அநாதைகளாக ஓடி ஒழிந்து கொண்ட இடங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணியள்ளிக்குடிக்க முடியாமல் தடைசெய்யப்பட்டார்கள்.

நண்பர்களே அன்பர்களே நான் உங்களுக்குச் சொல்லுவது, இந்த அடிப்படை இன்றுவரை இருக்கிறது. அது செத்து விட்டது என்று சிலர் சொல்கிறார்கள். வெளிநாடுகளில் புலம்பெயர்ந்தவர்களைப் பார்க்கிறேன். இங்கே மிகக் கவனமாக அது பாதுகாக்கப்படுகிறது. குடியிருக்க வீடு வாங்கப் போகும் போது அயலிலே யார் இருக்கிறார்கள் என்றுதான் பார்க்கிறார்கள். என்ன சாதிக்காரர் இருக்கிறார் என்றுதான் பார்க்கிறார்கள். இதுதான் தமிழர்களது மனோபாவமாக இருக்கிறது.

*(14ம் பக்கம் பார்க்கவும்)*

வைகறை

பொழுது-05 ’ இதழ் 171 ’ தை 23, 2010

சொற்கோட்டம் இல்லாது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மைபெறின்

# ஜனாதிபதித் தேர்தலும் கூட்டமைப்பும்

இன்னும் சில நாட்களில் சிறீலங்காவின் ஆறவது ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற உள்ளது. கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக சிறீலங்காவில் மட்டுமல்ல இந்தியாவின் தமிழ் மாநிலத் தேர்தல்களின் பெறு பேறுகள் மீதும் கூட ஒரு காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வல்லமை கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அதன் தலைமை முற்றாக அழிக்கப் பட்டு சிறீலங்காவின் சமகால அரசியல் சமன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ள சூழலில் இத்தேர்தல் இடம் பெறுவதனால் ஒரு விசேடத்தன்மையைக் கொண்டுள்ளது. இருப்பினும் யார் சிறீலங்காவின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்பதை நிர்ணயிக்கும் சக்தியாக முன்னைய தேர்தல்களைப் போன்று, தமிழ் மக்களின் வாக்குப் பலமே தொடர்ந்தும் உள்ளது என்பதே இன்றய தேர்தல்கள யதார்த்தம்.

இந்நிலையில் ஆயுத வன்முறை தமிழ் அரசியலில் இருந்து ஒதுக்கப்ட்ட நிலையில் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பார்கள் எனத் தமிழ்மக்கள் பெரிதும் எதிர்பார்க்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன் இத்தேர்தல் கடினமான சவால்களை வைத்துள்ளது. நீண்ட விவாதங்கள் கலந்துரையாடல்கள் கணிப்பீடுகளின் பின் சிறிலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என அவர்களைக் கோருவது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இரு பிரதான வேட்பாளர்களுமே இலங்கையின் இனப்பிரச்சியையின் மூல காரணமாகிய சிங்கள பௌ த்த பேரினவாதத்தை, மகாவம்ச மாயையை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் மட்டு மல்லாது இவற்றின் மீத அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள். இவர்களால் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளத் திருப்தி செய்யும் எந்தத் தீர்வையும் முன்வைக்க முடியாது என்றே கருதுகின்றனர். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருக்கும் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. அத்துடன் அண்மையில் நடாத்தி முடிக்கப்பட்ட மிலேச்சத்தனமான இராணுவத் தாக்கதல்களுக்கும் இன்றுவரையில் தொடரும் எமது மக்களின் அவலங்களக்கும் இவ்விருவருமே பொறுப்பானவர்கள் சர்வதேச மனித உரிமை விழுமியங்களின் அளவு கோலின்படி தண்டிககப்பட வேண்டிய போர்க்குற்ற வாளிகள். இதிலும் அவர்களுக்கு கருத்து வேறுபாடு இருக்க முடியாது. உணர்வு ரீதியாக இப்பிரச்சினையை அணுகினால் தமிழ் மக்கள் இத்தேர்தலைப் புறக்கணிப்பதே சரியானதாக இருக்கும்.

ஆயினும் வெறும் உணர்ச்சிகளின் அடிப்டையில் எடுக்கப்படும் அரசியல் முடிவுகள் எப்பொழுதுமே சரியானதாக இருப்பதில்லை. தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்தாலும் கூட வருகின்ற 26 ம் திகதி சிறீலங்காவுக்கு பதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுவார். இப்பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சாவுக்கு தமிழ் மக்களை வாக்களிக்கக் கோருவது என எடுத்த முடிவுக்கு பின்னால் உள்ள அறிவுசார் தர்க்கம் தான் என்ன என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் வெற்றி பெற்றால் 20 வருடங்களுக்கு மஹிந்த சிந்தனையின் ஆட்சியை அகற்ற முடியாது. கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் 20 வருட மஹிந்த சிந்தனையின் ஆட்சி எவ்வாறு இருக்கும் என்பதை தெளிவாகக் காட் டுகின்றது. ஈழத்தமிழ் மக்களின் அடையாளத்தை இருப்பை அது நிச்சயமாக இல்லாது ஒழித்து விடும். இரு வேட்பாளர்களுமே தமிழ் மக்கள் தொடர்பில் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளவர்கள் தான் ஆயினும் மஹிந்தவின் பின்னால் 60 வருடங்களாக ஸ்தாபன மயப்படுத்தப் பட்ட சிங்களப் பேரினவாதம் உள்ளது. சரத் பொன்சேக்காவுக்குப் பின்னால் தற்சமயம் உதிரிகளான பேரினவாதம் தான் உள்ளது.

அவர் வெற்றி பெற்றால் ஸ்தாபனமயப்படுத்தப் பட்ட பேரினவாதம் துரிதமாக அவர் பின்னால் அணிதிரள முயற்சிக்கும் என்பதில் ஐயமில்லை இருப்பினும் சரத் பொன்சேக்காவின் வெற்றி சிங்கள அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். அம்மாற்றம் புதிய சந்தர்ப்பங்களைவ வாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் மூடப்பட்ட சில வாசல்கள் மீண்டும் திறப்பதற்கு வாய்புகள் ஏற்படும். இவையே கூட்டமைப்பின் முடிவுக்குப் பின்ால் உள்ள தர்க்கம். இவ் எதிர்பார்ப்புகள் எதுவுமே சாத்தியமாகமல் கூட போகலாம். சாத்திய மாக வேண்டும் எனப் பிரார்த்திப்பதைத் தவிர தற்சமயம் தமிழ் மக்களுக்கு வேறு வழியும் இல்லை.

**Vaikarai**
**2680 Matheson Blvd. East, Suite 102**
**Mississauga, ON L4W 0A5**
**e- mail: editor@vaikarai.com**
**www.vaikarai.com**

**905-919-1176**

வைகறைப் பத்திரிகை ‘அகத்தியா பப்ளிக்கேசன்ஸ் இங். (Ahathaiyah Publications Inc.)னால் தொறன்ரோ நகரில் இருந்து வெளியிப்படுகின்றது.

# வைகறை வாசகர் கவனத்திற்கு!

**வைகறை எப்போது வரும் என்ற ஆவலுடன் காத்திருந்த வாகர்கள் நீங்கள். அந்நிலை தளர்ந்து வைகறை எப்போதாவது வரும் என்ற ஒரு நம்பிக்கைக் காத்திருப்பில் வைகறையைக் கண்ட திருப்தியுடன் இருந்தீர்கள். தற்போது வைகறை எப்போதாவது வராதா என்ற ஏக்கத்துடன் காத்திருப்பது நாங்கள் அறியாததல்ல. ஆனால் வைகறை இனி எப்போதும் வெளிவராததாக ஆகிவிடுமா என்ற கவலை தற்போது உங்களுக்கு தோன்றியுள்ளதும் நாங் கள் அறிந்ததுதான். அந்நிலை வந்துவிடக்கூடாது என்ற கவலை எங்களுக்கும் இல்லாமல்லில்லை.**

**வைகறை வெளியீட்டை ஆரம்பித்த காலத்திலிருந்தே அதனை ஒரு இலவசப் பத்திரிகையாக வெளிவிடுவதில் எமக்குச் சம்மதமிருக்கவில்லை. அந்நிலையால் உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளிப்டுத்தவேண்டும் என்ற எமது நிலைப்பாடு மழுங்கடிக்கப்பட்டுவிடும் என்பதால் சகல மக்களுக்கும் போய்ச் சேரும் விதத்தில் வைகறைப் பத்திரிகையை இலவசமாக வெளியிட்டு எமக்கு ஆதரவாக இருந்த விளம்பரதாரர்களின் தயவால் பணச் சுமையை ஈடுகட்டுவதாக முடிவெடுத்தோம்.**




**இந்நிலையில் அன்று எமக்குத் தேள்கொடுத்த விளம்பரதார்கள், நண்பர்கள், எமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைக்கின்றோம். இந்நிலையில் நல்லுள்ளங்கொண்ட வைகறை எழுத்தாளர்கள் சிலரதும், வைகறை அபிமானிகள் சிலரதும் நிதியுதவியால்தான் வைகறை நீண்ட காலத்தின் பின் மீண்டும் வெளியானது. இம்முறையும் அவ்வாறே வெளியாகுகிறது.**

**இந்நிலையில் நல்லுள்ளங்கொண்ட அவர்களுக்கு வைகறை நன்றிக் கடன்பட்டிருக்கிறது. ஆனால் தொடர்ந்தும் இதையே வழக்கப்படுத்தாது வைகறை இப்போது உங்கள் முன் மாற்று யோசனையை முன்வைத்துள்ளது. இதன்படி வைகறை இனிமேல் இலவசப்பத்திரிகையாக இல்லாமல் இரண்டு டொலர்களுக்கு விற்கப்படும் விற்பனைப் பத்திரிகையாக வெளிவரவிருக்கிறது. வைகறை போன்ற ஒரு சுயாதீனமான பத்திரிகையின் யின் தேவையைக் கருத்திலெடுத்து விற்பனைப்பத்திரிகையாக வெளிவரவிருக்கும் எமது நிலைப்பாட்டுக்கு நீங்கள் ஆதரவு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.**

அடுத்த வைகறை இதழ் கிடைக்கும் இடங்கள் பற்றிய விபரங்கள்
அறிந்து கொள்ள மாசி மாதம் 23ந் திகதிக்கு பின்னர் 905-919-1176
இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.
அடுத்த இதழ் மாசி 26ந்திகதி வெளிவரும்.

வைகறை இதழை தமது வியாபார நிலையங்களில் வைத்து தமது
வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய விரும்புவோர் 905-919-1176
இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அடுத்த வைகறையில் தமது ஆக்கங்களை பிரசுரிக்க விரும்புவோர்,
மற்றும் வைகறை எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை மாசி 16ந்
திகதிக்கு முதல் அனுப்பிவைக்குமாறு தன்மையுடன் வேண்டிக்
கொள்கின்றோம்.

-நன்றி

-வைகறை ஆசிரியர் குழு!

905-919-1176

# அவநம்பிக்கையில் நம்பிக்கை



ராகவன்
ragavan@vaikarai.com

*ஒரு சமூகம் தனது வடிவிலும் அமைப்பிலும் ஜனநாயக முறையில் இல்லை என்றால், அந்த சமூகத்திற்காக செயல்படும் அரசு ஜனநாயக அரசாக இருக்க முடியாது. - அம்பேத்கர்*


ஜனாதிபதி தேர்தல் களை கட்டுகிறது. உலகம் பயந்த வியந்த பலம் வாய்ந்த விடுதலை புலிகள் அமைப்பை ராணுவ ரீதியாக ஒட்டுமொத்தமாக துடைத்தொழித்த வரலாற்று பெருமை அரசுக்கும் இலங்கை ராணுவத்திற்குமே என கொண்டாடி வந்த மகிந்த அரசு போர் முடிந்து 6 மாதங்களுக்குள் பலத்த நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது.

புலிகளுடனான இறுதியுத்த காலப்பகுதியில் வழமைக்கு மாறாக ராணுவ தளபதிகள் ஊடகங்ளுக்கு பேட்டி கொடுப்பதும் அரசியல் கருத்துக்கள் கூறுவதும் அனுமதிக்கப்பட்டது. ராணுவ வீரர்கள் ரம்போக்களாக நாடு காப்போராக விளிக்கப்பட்டனர். சரத் பொன்சேகா நாடு காத்த ஜெனரலாக அரசின் அதியுயர்ந்த விருதினை அடைந்தார். ராணுவம் அரசியல் மயப்படுத்தப்பட்ட இந்த வளர்ச்சிப்போக்கில் ராணுவமானது பல்வேறு சலுகைகளை அனுபவித்தது மட்டுமல்ல அதற்கான ஒரு அரசியல் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டது. யுத்தம் முடிந்தவுடன் ராணுவ தலைமையின் அரசியல் அதிகாரத்திற்கான அங்கீகாரம் அரசிடமிருந்து முழுமையாக கிடைக்காத நிலையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் வடிவே இன்றைய தேர்தல் நிலை

அரசு ராணுவமயமாக்கப்பட்டும் ராணுவம் அரசியல் மயமாக்கப்பட்டும் வந்த இந்த வளர்ச்சிப்போக்கில் வந்த முரண்பாடுகள் இன்று வெடித்து சரத் பொன்சேகாவை பொது வாக்காளாராக தெரிவு செய்யும் நிலைக்கு இட்டு சென்றுள்ளது. யுத்தம் முடியும் வரை தங்களை பயன் படுத்தி வெற்றி புகழை மகிந்த சகோதரர்கள் தமக்கு மட்டும் சொந்தமாக்குகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுகள் ராணுவ வட்டாரங்களில் இருந்து வருவது இயற்கையே. எனவே இந்த பிளவானது அடிப்படையில் அதிகாரத்திற்கான போட்டியே..

ஐக்கிய தேசியகட்சியும் மற்றைய எதிர்க்கட்சிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி சரத் பொன்சேகாவை பொது வாக்காளராக ஜனாதிபதி தேர்தலில் நியமித்திருக்கிறார்கள். அய்க்கிய தேசியகட்சிக்கான ஜேவீபிக்கான பாரம்பரிய வாக்குகள் அவர்களுக்கே பெரும்பாலும் சேரும். யுத்த வெற்றியால் விழும் வாக்குகள் மகிந்த சரத் இருவருக்கும் பிரிந்து போகும் வாய்ப்பு இங்கு இருக்கிறது. எனவே சிறு பான்மை இனங்களின் வாக்குகள் வெற்றியை தீர்மானிக்கும் நிலை ஒன்று உருவாகியிருக்கிறது. இதுவரைகாலமும் யுத்தத்தின் பேரால் தெற்கிலங்கை மக்கள் விலைவாசி ஏற்றம் வறுமை போன்றவற்றை சகித்துக்கொண்டனர். யுத்தம் முடிந்தவுடன் தங்களது நாளாந்த பிரச்சனைகளை அரசு தீர்க்கவில்லை என அதிருப்திபட தொடங்கியுள்ளார்கள். இந்த நெருக்கடிகள் இன்னும் மோசமாக போகமுன்பு ஜனாதிபதி தேர்தலை அவசர அவசரமாக அரசு நடத்த தீர்மானித்து தேர்தலுக்கும் நாள் குறித்தது. ராணுவ வெற்றி பற்றிய பேச்சுகள் அடங்கி முகாம்களில் வாழும் மக்கள் பற்றியும் சரணடைந்த புலியுறுப்பினர்களின் கொலை பற்றியும் பத்திரிகை சுதந்திரம் பற்றியும் ஜனனாயகம் பற்றியும் சரத் பொன் சேகாவும் ராஜ பக்சவும் பேசத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் ஜனனாயகத்தின் மேல் நம்பிக்கை வைத்திருக்கின்றார்களா இல்லையா என்பதல்ல இங்கு பிரச்சனை. ஆனால் இவற்றை பேசுவதற்கான ஒரு குறைந்த பட்ச இடைவெளி ஒன்று ஏற்பட்டிருக்கின்றதென்பது யதார்த்தமே.

இந்த இடைவெளியை தமது அரசியல் ஜனனாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு எவ்வாறு சிறுபான்மை இனங்களை பிரதி நிதுத் வப்படுத்தும் கட்சிகள் பயன்படுத்த போகின்றன என்பதிலேயே சிறுபான்மை இனங்களின் அரசியல் வெற்றி தங்கியிருக்கின்றது. இந்த இடைவெளியை





**பின்காலனித்துவ அரச உருவாக்கத்தில் அனைத்து இலங்கை மக்களையும் ஒன்று படுத்தும் ஒரு தேசிய அரசியல் கருத்தாக்கம் மிளிரவில்லை. மாறாக சிங்கள பவுத்த அரசியல் கருத்தியலே இலங்கையின் அரசியலை நிர்ணயம் செய்தது.**

எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய நிலைப்பாடு தான் இங்கு அவசியம். எந்த வேட்பாளர் பதவிக்கு வந்து பிரச்சனையை தீர்ப்பார் என்ற அடிப்படையில் பிரச்சனைகளை அணுகுவது அர்த்தமற்றதே..

இலங்கை இந்தியாவுடன் கிரிக்கட் போட்டி விளையாடும் இச்சமயம் கிரிக்கட்டை வழக்கமாக முதன்மைப்டுத்தும் இலங்கை மக்கள் தேர்தலை பற்றி பேசுவதிலேயே அதிக நேரம் செலவு செய்கிறார்கள் என நண்பர் ஒருவர் இலங்கையிலிருந்து தெரிவித்தார்.

பல் இனங்கள் வாழும் இலங்கையில் கிரிக்கட் அணி போன்று அரசும் அமைந்து விட்டால் சிறு பான்மை இனங்களின் அரசியல் அதிகாரப்பகிர்வு பற்றிய பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு வரலாம் என நான் சில சமயம் யோசிப்பதுண்டு. பல்லின அடையாளங்ளை கொண்ட கிரிக்கட் அணி வேற்றுமைகளை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை அணியில் இருப்பவர்களுடன் இன பாரபட்சமில்லாமல் அவர்களுக்குரிய இடத்தை கொடுக்கும் மனப்பக்குவம் கொண்டதாக இருக்கிறது. அதேவேளை இலங்கையின் அரசியலானது சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்க மறுத்து பவுத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்து கொண்டு எல்லா இனங்களும் சமமென சொல்வது முரளி நல்ல பந்து வீச்சாளர் அவர் அணியில் இருக்கலாம் ஆனால் அவருக்கு ஒரு ஓவர் தான் கொடுக்கலாம் என்பது போலவே.

இலங்கை அரசியல் யாப்பும் நடைமுறையும் சிறுபான்மை இன மக்களின் அடிப்படை ஜனனாயக அரசியல் உரிமைகளை மறுப்பதாகவே அமைந்திருக்கிறது. இந்த வேறுபாடுகள் வெளிப்படையாகவும் நுண்ணியமாகவும் ஸ்தாபனமயமாகப்பட்டுள்ளது.

இரண்டாவது குடியரசு உருவாக்கத்தின் பின் ஜனாதிபதிக்கான நிறைவேற்றதிகாரங்கள் குவிந்திருப்பது ஜனனாயகத்தின் பேரில் சர்வாதிகார ஆட்சிக்கான நிகழ்தகவை கொண்டிருக்கின்றதெனவும் பலர் அஞ்சுவது ஆச்சரியமல்ல. ஊடக உரிமை போன்ற அடிப்படை ஜனனாயக உரிமைகள் நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரால் நசுக்கப்படுகின்றன. மே 18 பின் புலிகளை முற்று முழுதாக ராணுவ ரீதியாக ஒழித்துவிட்டோம் என்று அரசு மார்தட்டும் அதேவேளை தேசத்தை பிரிக்கும் சக்திகள் இன்னும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இயங்கிக் கொண்டிருப்பதாக இது வரையும் அரசு பூச்சாண்டி காட்டி வந்தது. இன்று மகிந்த அரசுக்கெதிராக பொது வேட்பாளராக போட்டியிடும் சரத் பொன்சேகா பிரிவினை விசக்கிருமிகள் இன்னும் அழியவில்லை ராணுவ விஸ்தரிப்பு அவசிய்ம என மே 18 இன் பின்பு சொல்லிக்கொண்டிருந்தவர். இன்னொரு புறம் மகிந்த அரசானது இதுவரையும் சிறு பான்மை இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கான அரசியல் தீர்வொன்றினை முன்மொழிவதற்கான முயற்சிகள் எதுவும் எடுப்பதாக தெரியவில்லை. அபிவிருத்தி என்ற கோசமே மகிந்த அரசு சிறு பான்மையினங்களின் அரசியல் அதிகார பகிர்வுக்கான தீர்வாக வைக்கபடுகிறது. மறுபுறம் சம்பிக்க ரனவக்க தமிழரின் ஆதிக்கத்தை 1000 வருடங்களுக்கு முன்னர் நாம் முறியடித்தோம். இன்றும் அதனை செய்து காட்டி இருக்கிறோம். தமிழர் திரும்ப தம்மை மீள் கட்டமைக்க இன்னும் 2000 வருடமாவது காத்திருக்கவேண்டுமென இனவாதம் பேச அரசின் பிரதிநிதிகள் கலந்து கூட்டத்தை சிறப்பிக்கிறார்கள். இன்னிலையில் ஜனாதிபதி தேர்தலை சிறு பான்மையினங்கள் எவ்வாறு எதிர்கொள்வதென்பது கேள்வியாகிறது.˙.

ஜனாதி பதி ˙முறையும் மத்தியத்துவப்பட்ட அரசியுல் அமைப்பும் தமிழர் சிங்களவர் மலையக மக்கள் முஸ்லிம்கள் பரங்கியர் வேடர் போன்ற அனைத்து மக்களின் ஜனனாயக உரிமைகளுக்கான சவாலாக இருப்பது ஒரு புறம். ஆனால் அரசானது இனவாத கருத்தியலை தனது அங்கமாக வரித்திருக்கும் போது சிறுபான்மை இனங்களின் ஜனனாயக உரிமைகள் பெரும்பான்மை இனத்தை விட அதிகம் பாதிக்கப்படுகின்றதென்பது யதார்த்தமே. சிறு பான்மை இனங்கள் தாங்களும் இலங்கை பிரஜைகள் என அடையாளம் கண்டுகொள்வதற்கான உரிமை அரசியல்யாப்பு நடை முறை இரண்டாலும் தடுத்து வைக்கபட்டுள்ளது.

பின்காலனித்துவ அரச உருவாக்கத்தில் அனைத்து இலங்கை மக்களையும் ஒன்றுபடுத்தும் ஒரு தேசிய அரசியல் கருத்தாக்கம் மிளிரவில்லை. மாறாக சிங்கள பவுத்த அரசியல் கருத்தியலே இலங்கையின் அரசியலை நிர்ணயம் செய்தது. கருத்தியலானது வெறும் மனரீதியானதல்ல. கருத்தியல் மக்களை பற்றிக்கொண்டால் அது நடைமுறையாகிறது. இலங்கை சிங்களவரின் நாடு என்ற எண்ணப்பாடு அரசியல் கலாச்சார பொருளியல் தளங்களில் பிரதிபலிக்கிறது. இந்த மாற்றமானது ஒரு சமூக மாற்றமாகிறது. எனவே ஒரு குறிப்பிட்ட சமூகம் மற்றய சமூகங்களின் ஜனனாயக உரிமைகளை மறுக்க முயல்கிறது. அவர்களது அரசியல் உரிமைகளை உதாசீனம் செய்கிறது. எனவே சமூகம் ஜனனாயகமற்ற தன்மைக்கு செல்கிறது.

பல்லினங்கள் கொண்ட ஒரு நாட்டில் பெரும்பான்மை வாத ஜனனாயகம் என்பது ஜனனாயகத்தை மறுக்கும் செயலாகும். பெரும்பான்மைவாத ஜனனாயகமானது மற்றைய இனக்குழுக்களுக்கான அரசியல் பிரதிநிதிதுத்வத்தை மறுக்கிறது. அவர்களை ஓரம் கட்டுகிறது. இந்த ஓரம் கட்டுதலானது மற்றைய இனங்களை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கலாச்சாரரீதியாகவும் புறக்கணிக்கிறது. எனவே இது ஜனனாயகப்பண்பை இழந்து விடுகிறது. இலங்கையை பொறுத்தவரை ஒற்றை ஆட்சி சிங்கள பெரும்பான்மை வாத கருத்தியலால் கட்டப்பட்டிருக்கிறது. இதன் உச்ச கட்டமாக சகல நிறைவேற்றதிகாரமும் கொண்ட ஜனாதிபதி. இவரும் சிங்கள பெரும்பான்மை வாத அரசியலினூடாகவே ஆட்சிக்கு வருகிறார். எனவே அடிப்படையில் அரசியல் அமைப்பானது ஜனனாயகத்தை மீறும் அரசமைப்பே. ஒருவகையில் சிறுபான்மை இன மக்களை ஓரம் கட்டும் இந்த ஜனனாயகமின்மையானது அதன் வளர்ச்சிப்போக்கில் அனைத்து இலங்கை மக்களினதும் ஜனனாயக உரிமைகளை நசுக்கும் என்பது கடந்த கால நிகழ்வுகளிலிருந்து வெளிப்படை. பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவை போலீஸின் அதிகாரத்தை அளவுக்கதிகமாக குவித்து அதனால் பல சிங்களவர்கள் அற்ப காரணங்களுக்காக அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாகியிருக்கின்றனர். பத்திரிகையாளர் பலர் மிரட்டலுக்கும் கொலைக்கும் ஆளாகியிருக்கின்றனர்.

எனவே இலங்கையர் என்ற வகையில் ஒட்டுமொத்தமான ஜனனாயக போராட்டங்ளில் அனைத்து மக்களுடன் இணைந்து குரல் கொடுப்பதும் சிறு பான்மை இனங்கள் என்றவகையில் தமது தனித்துவமான அரசியல் உரிமை சம்பந்தமான போராட்டங்களையும் அழுத்தம்களையும் கொடுப்பதும் சிறுபான்மை இனங்களை பிரதினிதுத்துவப்படுத்தும் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் இன்றிருக்கும் இரட்டை சுமைகளாகும்.

ஆனால் இவ்வகையான அரசியல் சிந்தனை முறையோ நடைமுறையோ சிறுபான்மை இனங்களின் கட்சிகளுக்கு இருப்பதாக தெரியவில்லை. கடந்த 30 வருட யுத்தமும் புலிகளின் சுத்த ராணுவ கண்ணோட்டமும் ஏகப்பிரதிநிதுத்துவ சிந்தனை முறையும் தமிழ் அரசியல் பரப்பில் ஒரு வெற்றிடத்தை தோற்றுவித்தது. புலிகளின் ராணுவ வெற்றிகளை தமக்கு சாதகமாக்கலாம் என தமிழ் தேசிய கூட்டமைப்பு அங்கலாய்த்தது. தனது சுயத்தை இழந்து சுயாதீனமாக ஒரு கருத்தைக்கூட கூறுவதற்கு கூட்டமைப்புக்கு வக்கிருக்கவில்லை. அவர்களுக்கு புலிகளில் எவ்வித நம்பிக்கையோ அல்லது அபிமானமோ இருக்கவில்லை என்பது இன்று அவர்களின் நடவடிக்கைகளி

(23ம் பக்கம் பார்க்கவும்)

# மார்க்ஸியர், இடதுசாரிகள், தேசியவாதம்

## தமிழ்த் தேசியம்பற்றிய ஒரு கண்ணோட்டம்



தேவகாந்தன்
devakanthan@vaikarai.com

எப்போதும் கேட்பதற்குப் புதிது புதிதாக கேள்விகள் பிறந்துகொண்டே இருக்கின்றன. இது சுவாரஸ்யமானதும், அதேவேளை முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். புதிய கண்டுபிடிப்புக்களும், புதிய சிந்தனைகளின் தோற்றமும் இந்தக் கேள்விகளின் அவசியத்தை மனிதர்கள் மீது சுமத்திக்கொண்டிருக்கின்றன என்பதாக இதற்கான விடையை நாம் கண்டடைய முடியும். தேசியவாதம் அல்லது தமிழ்த் தேசியவாதம் குறித்து இன்றெழுந்திருக்கும் கேள்விகளும் புதிய சூழ்நிலைமைகளின் தாக்கத்தினால் விளைந்தவையே என்பது தெளிவு.

தேசியவாதம் என்ற கருத்தாக்கம் ஓரளவு முதலாளித்துவ அமைப்பின் ஆதிக்கம் அரசியலில் வலுப்பெறத் தொடங்கிய காலகட்டத்தில் உருவானதென்றாலும், அது குறித்த சிந்தனை பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு மேலேயே அரசியற் புலத்தில் காலூன்றிவிட்டது. சரியாகச் சொன்னால் பதினெட்டாம் நூற்றாண்டின் எழுபதுகளில். இந்தச் சொல்லை ஒரு கருத்துருவத்தின் வெளிப்பாட்டுக்காக செதுக்கியெடுத்தவர் ஜோஹன் கொட்பிறைட் ஹெடர் என்பவர். எவ்வாறு போஸ்ட் மாடனிஸம் என்ற சொல், வரலாற்றாசிரியர் ஆர்னால்ட் ரொயின்பீ என்பவர் அக்கால அரசியற் சூழமைவைக் குறிக்கப் பயன்படுத்திய Post modern era என்ற சொல்லிலிருந்து பிறப்பெடுத்ததோ, அதுபோல இது நடந்தது. இதுபோன்ற கருதுகோள் முன்னெடுப்புக்கள் காலங்காலமாக வரலாற்றில் நிகழ்ந்தே வந்துள்ளன என்பதை நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

எல்லைகளும், இறைமைகளும் யுத்தம் காரணமாகவோ, மணவினைகள் காரணமாகவோ மாறிமாறி அமைந்துகொண்டிருந்த சூழ்நிலையில், பதினெட்டாம் நூற்றாண்டு வரை தேசியவாதம் என்ற கருத்தாடல் வலுப்பெற்றிராத நிலைமையே அய்ரோப்பாவில் இருந்துவந்தது. ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா ஆகிய இந்த நான்கு நாடுகளுக்குமிடையில் இருந்த மணவினைத் தொடர்பாடலின் கதைகளாகவே மறுமலர்ச்சிக் காலத்துக்குப் பின்னான மூன்று நான்கு நூற்றாண்டுகளின் வரலாறுகளும் விளங்கின.

இந்த நிலைமையில் பிரான்சிய, மற்றும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த அமெரிக்கப் புரட்சிகள் நாடுகள்பற்றிய கருத்துமானங்களை வெகுவாக மாற்றிவைக்கின்றன. ஒரு தேசம் என்பது புவியியற் கட்டமைப்புக் கொண்டதான, இனத்துவம் சார்ந்ததான, இறைமை கொண்டதான விதிகள் வலுப்பெறத் தொடங்குகின்றன. புறவிதிகளாக ஒரு நாடு சிதைந்து பலவாதலும், பல நாடுகள் இணைந்து ஒன்றாதலுமான நிகழ்வுகளும் நடக்கவே செய்கின்றன. வரைபடத்தில் புதிய எல்லைகளோடு தோன்றிய ஜேர்மனியும், இத்தாலியும் இதற்கொரு தக்க சான்று. இக் கருத்தாடல் நிலைபெறத் தொடங்கி ஒரு நூற்றாண்டுக்குள்ளாகவே இதன் கொடூர முகத்தை உலகம் ஜேர்மனியில் கண்டது. அதன் பெயர் நாஜிசம்.

நாஜிசம் என்பது National Socialism ஆகவே கருதப்பட்டது. நாடு தழுவிய வரையறையை வகுக்க இந்த தேசியவாதம் உதவியபோதும், நாடுகள் சார்ந்தளவில் இது தேசப்பற்று என்ற உணர்வோட்டமுள்ள கருதுகோளாக முதலாம் உலக மகா யுத்த காலத்தில் இருந்தது. தேசியவாதத்தை அதன் தன்மைகள் சார்ந்து ஏழு என்றும், இன்னும் அதிகமாகவும்கூட சில அரசியலாய்வாளர் வகைப்படுத்தியுள்ளனர். முதலாம் இரண்டாம் மகாயுத்தங்களுக்குப் பிறகு தேசியவாதத்தின் தன்மை பெரிதும் மாற்றமடைந்துள்ளது. இதற்கு உலகமயமாதல் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. இன்னும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இனக் குழுமங்களுக்கு மேலான அடக்குமுறைகளின் எதிர் எழுச்சியாகவும் இந்தத் தேசியவாதம் முன்னெழுந்தது. அந்த வகையில் இனம்சார் தேசியவாதங்கள் இன்று முக்கியமானவையாகப் பேசப்படுகின்றன. வெறுக்கப்படும் தேசிய வாதங்களாக இந்துத்துவ தேசியவாதம், புத்தத்துவ தேசியவாதங்களைக் கொள்ளலாம். பல்கலாச்சார நாடொன்றில் இருக்கக்கூடிய அல்லது இருக்கவேண்டிய தேசியவாதத்ததை civic nationalism என்று கூற முடியும். அதற்கு உதாரணமாக கனடாவைக் காட்டலாம். தமிழ்த் தேசியவாதம் இந்தவகைப்பாடுகளில் ஒரு கூறு. அது பெருந்தேசியவாதத்துக்கு எதிராக சிறுதேசியவாதம் எடுத்த இருத்தலுக்கான எடுகோள் மட்டுமே.

இவ்வளவையும் ஓர் அறிகைக்காக இங்கே கூறிக்கொண்டு, ‘வியூகம்’ சஞ்சிகையின் முதலாவது கட்டுரையான ‘தேசியவாதம் குறித்த சில கருத்துக்கள்’ என்ற கட்டுரைக்கு வரலாம். அது நீண்ட ஒரு கட்டுரை. முப்பத்து மூன்று பக்கங்கள். தேசபக்தன் எழுதியது. அந்தக் கட்டுரையை மய்யமாக வைத்துக்கொண்டே எனது கட்டுரை விரியும்.

இலங்கையில் நடைபெற்ற விடுதலை யுத்தமும், அதன் தோல்வியும், தமிழரின் இன்றைய நிலையும் குறித்த பிரச்னைகளைப் பின்புலமாகக்கொண்டு ‘இனியொரு’ இணைய தளத்தில் சபா நாவலன் எழுதிய ‘ஈழத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தனித் தேசிய இனம்?’ என்ற கட்டுரையின் எதிர்வினையாக தேசபக்தனால் எழுதப்பட்டுள்ள கட்டுரை இது.



தமிழ்த் தேசியத்தின் தோற்றத்தை

பேரினவாதத்தின் அடக்குமுறைக்கெதிரான

விழிப்புணர்வாகக் கொள்ளப்பட முடியமா?

முடியுமென்றுதான் தெரிகிறது.

தேசியம், சுயநிர்ணய உரிமை, உலகமயமாதல், தமிழ்த் தேசியம் என்ற தளங்களில் இது வியாபித்து நாவலனது கட்டுரைக்கான தன் எதிர்வினையை முன்வைக்கிறது. நாவலனது கட்டுரையைப் பெரும்பாலும் அங்கீகரித்து அதன் சில கூறுகளுக்கே கட்டுரை தன் மறுப்பினை, மறுவியாக்கியானங்களைக் கூறுவதாகக் கொள்ளவேண்டும். அதிர்‘டவசமாக நான் சபா நாவலனது கட்டுரையை வாசிக்க நேரவில்லை. தேசபக்தனின் கட்டுரையைக்கொண்டே சபா நாவலன் தன் கட்டுரையில் என்ன கூறியிருக்க முடியுமெனத்தான் அனுமானிக்க முடிகிறது. என்றாலும் அது இங்கே எனக்கு முக்கியமில்லை. ‘பல்தேசிய நிறுவனங்கள் உருவாக தேசிய அரசுகள் அழிந்துவிடும், அதாவது தேசியவாதங்கள் மறைந்துவிடுமென்று சபா நாவலன் கூறுவதனை, ‘பல்தேசிய நிறுவன அரசுகள் தோன்றும்போது தேசியம் அழிந்துவிடுமெனில், ஏன் கடவுச்சீட்டு முறை இன்னும் இருக்கிறது?’ என தேசபக்தன் கேட்டு மறுப்பது சிறுபிள்ளைத்தனமானது.

அய்ரோப்பிய ஒன்றியம் ஆரம்பமான பொழுதில் அதில் சில விரல்விட்டு எண்ணக்கூடிய நாடுகளே இருந்தன. இன்னும் இஸ்பெயினைச் சேர்த்துக்கொள்வதற்கும் தயக்கங்கள் இருந்தன. பிரிட்டன் பின்னால் இணைவதற்கு வெகுதயக்கம் காட்டியதென்பதும் இரகசியமானதல்ல. ஆனால் இன்று இருபத்தேழு நாடுகள் அதில் அங்கம் வகிக்கின்றன. இந்த இருபத்தேழு நாடுகளுக்கும் ஒன்றியத்திலிருக்கும் ஒரு பிரஜை விசா இன்றிப் பயணித்துவிட முடியும். இந்த இடத்தில் கடவுச்சீட்டு என்பது ஒரு அடையாளம் மட்டும்தான். இனிவரும் காலங்களில் கடவுச்சீட்டு முறைகூட இல்லாது போய்விடலாம்.

பல்நிறுவன அரசுகளிடையே இது சாத்தியப்படும் வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. உலகமயமாதல் மூலமோ அல்லது வேறு காரணிகள் மூலமோ அரசுகள் அற்றுவிடா என்பதுதான் அறியக்கிடப்பது. அதிலும் முதலாளித்துவ முறைமை ஒரு வளையத்தை இட்டுக்கொண்டே செல்லும். அது கட்டமைப்புக்குள் அடங்கும்வரையே அதனை அனுமதிக்கும் என்பதுதான் முக்கியமான விஷயம். அய்ரோப்பிய ஒன்றியத்தில் துருக்கியை இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் இன்னும் இழுபறியிலேயே இருப்பதை இதற்கு ஆதாரமாகச் சொல்லமுடியும். ஆனால் தேசபக்தன் செய்கிற வாதமே பிழையென்றில்லை. அரசுகள் இருக்கவும், அரசுகளின் தேசியங்கள் இருக்கவும்தான் இந்த வகையான அரசியலில் இடமிருக்கிறது என்பது மூலதனத்தின் வலுவைப் பார்த்தால் புரிந்துவிடும் சங்கதி.

தேசபக்கதனை மறுக்கிற இன்னொரு இடம் இருக்கிறது. இது கட்டுரையின் கடைசிப் பகுதியில் வருவதெனினும், பொருள் குறித்து அதை இங்கே சொல்லிவிடுதல் சிறப்பு.

‘மார்க்சியம் பற்றிய எமது புரிதல்களையும் நாம் கேள்விக்குள்ளக்கும் நேரத்தை அடைகிறோம். மார்க்சியம் என்பது ஒரு விஞ்ஞானம் என்கிறோம். சமூகம் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறோம். அப்படியானால் அரசியல், பொருளாதாரம், வரலாறு, தத்துவம், மற்றும் அறிவுத்துறையின் ஏனைய கிளைகளில் ஏற்படும் கோட்பாட்டு வளர்ச்சிகளுக்கு இணையாக நாமும் எமது கோட்பாட்டுச் சாதனங்களை தொடர்ந்தும் புதிதாக உருவாக்கிக்கொள்ளவும், வரலாறு புத்தம் புதிதாக முன்வைக்கும் வளமான பிரச்னைகளில் அவற்றை பரீட்சித்துப் பார்க்கவும், எமக்குப் போதியளவு திறமையும் துணிவும் இருக்கவேண்டும்’ என்கிறார் தேசபக்தன். மார்க்சியம் தேங்கிவிட்டது என்பதற்கு ஒப்பானது இது. மார்க்சியம் ஏன் வளரவேண்டும்? அதை நிறுவனமயமானதாக ஆக்குவதன் நோக்கம் என்ன? அதையே அதிகாரத்தின் மையமாக ஆக்கிவிடுவதில் மேலதிகமாக சுதந்திரத்தை இழப்பதற்கான வாய்ப்புத்தானே அதிகமாகிறது? அதை அரசியலைப் புரிந்துகொள்ளும், சமூக நிலைமைகளை வரையறைப்படுத்திக்கொள்ளும் ஒரு சித்தாந்தமாகப் பார்க்கவேண்டுமே தவிர, நிறுவனங்களை உருவாக்குவதற்கான கொள்கைச் சித்தாந்தமாக அல்ல. இந்தத் தளத்தில் மார்க்ஸியம் எவருக்கும்தான் ஒரு சிந்தனைத் தளத்ததை அளித்துநிற்கிறது.

குமாரி ஜெயவர்த்தனா தனது Feminism and Natioonalism in the Third World நூலில் கூறுவார், ‘மேற்குலக பெண்ணிய தேசியவாத முறைமைகளுக்கும் மூன்றாமுலக நாடுகளிலுள்ள பெண்ணிய தேசியங்களுக்குமிடையே நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன’ என. அதுபோல் மேற்குலகத்தின் தேசிய வரையறைப்புகளுக்கும், மூன்றாம் உலக நாடுகளான இலங்கை போன்றனவற்றின் தேசியம் பற்றிய கருதுகோள்

(11ம் பக்கம் பார்க்கவும்)

# தேர்தல் களத்தில் எழும் கேள்விகள்



**மகிந்தாவுக்கும், விக்கிரமபாகுவுக்கும், சிவாயிலிங்கத்திற்கும்**

**ஏறத்தாழ சம வீதமாகப் பிரிந்துபோனால்?**

**தமிழர் இலங்கை அரசியல் மாற்றத்தை நிர்ணயிக்கப்போவதில்லை.**

*இலங்கையின் மக்களாட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தமிழர் தரப்பு நிலைப்பாடு இன்னும் கேள்விகளுடனேயே முழித்துக் கொண்டிருக்கிறது.*

*செய்திகளில் இருந்து தொடங்குவோம்:*

தமிழ்க் கட்சிகள் ஆகக்குறைந்த அடிப்படை வரையறைகளுடன் ஒற்றுமைப்படுவதற்கான மாநாடு ஒன்று சுவிற்சலாந்தில் இடம்பெற்று குழப்பம் ஏற்பட்டுத் தோல்வியில் முடிந்தது.

*-(23-11-2009)*

இலங்கை யனாதிபதித் தேர்தல் யனவரி 26இல் நடைபெறும் என இலங்கைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

*-(27-11-2009)*

ஐக்கிய தேசிய முன்னணிப் பொதுவேட்பாளராக சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அறிவித்தது.

*-(27-11-2009)*

தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தமிழர் கூட்டமைப்பு எவரைத் தேர்தலில் நிறுத்துவது எனக் கலந்தாலோசிக்க கூட்டம் கூடினர்.

*-(03-12-2009)*

முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனை வேட்பாளராக நியமிக்க ஆலோசிக்கப்பட்டது.

*-(04-12-2009)*

யனாதிபதி வேட்பாளராக தமிழர் தரப்பில் எவரையும் நிறுத்துவதில்லையெனத் தமித் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

*-(09-12-2009)*

இலங்கையின் இடதுசாரி முன்னணியின் தலைவரும் தமிழருக்கு சமவுரிமை வழங்க வேண்டுமென 1974 முதல் குரல்கொடுத்து வருபவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன யனாதிபதித் தோர்தலுக்கான வேட்பு மனுவைச் சமர்ப்பித்தார்.

*-(10-12-2009)*

தமிழர் சுயநிர்ணயவுரிமையை நிலைநாட்ட சுயேட்சையாகப் போட்டியிடுவதாகக் கூறி ரெலோ சிவாயிலிங்கம் வேட்புமனுக் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

*-(16-12-2009)*

தமிழர் தரப்பின் பொது வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை நிறுத்தவென மேற்கொள்ளப்பட்ட சிபாரிசினை நீதியரசர் விக்னேஸ்வரன் மறுத்ததுடன் தமிழர்தரப்பில் ஒருவரை நிறுத்துவதைவிட ஆட்சித் தலைவராக வரத்தக்க சாத்தி யமுள்ளவருக்கு ஆதரவு வழங்குவதே புத்திசாலித்தனமானது எனவும் தெரிவித்திருந்தார்.

*-(29-12-2009)*

யனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீரானித்துள்ளது.

*-(04-01-2010)*

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சரியான சாணக்கியமாக தமிழர்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கவேண்டுமென தமிழர் தேசியக் கூட்டமைப்பு எடுத்தமுடிவில் தாமும் உடன்படுவதாகவும் ஒரு எதிரியை வீழ்த்த இன்னொரு எதிரியுடன் கூட்டுச் சேர்வது சரியானதுதான் என கனடிய தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் அறிக்கை விடுத்துள்ளது.

*-(04-01-2010)*

2010 யனாதிபதித் தேர்தலில் தாம் சரத் பொன்சேகவுக்கு அதரவளிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

*-(06-01-2010)*

சரத் பொன்சேகாவிடமிருந்து கைச்சாதிடப்பட்ட ஒப்பந்தமொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருப்பதாக த. வி. கூட்டணி சம்மந்தர் அறிவித்தார்.

*-(07-01-2010)*

இலங்கையில் யனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என எதிர்பார்த்துக்கொள்ளப்பட்ட 2009 நொவம்பர் முதல் வாரப் பகுதியில் சிறிலங்காவின் ஒன்றிணைந்த எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணி அக் கூட்டமைப்பின் கீழ் பொது வேட்பாளராக அப்போதைய முப்படைத் தளபதி சரத் பொன்சேகாவை நியமிக்கும் ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. இக் கூட்டமைப்பில் ஐக்கிய தேசியக் கட்சி, முசுலிம் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு, தேசிய சனநாயக முன்னணி என்பன இணைந்துள்ளன. இவை ஏகமனதாக சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராகத் தெரிவுசெய்தபோது அரசின் ஆதரவுக் கட்சியாகவிருந்த யே.வி.பி. தனது ஆதரவையும் பொன்சேகாவுக்கு வழங்க முன்வந்தது. அத்தருணத்தில் யனாதிபதி மகிந்த ராயபக்சவை பிரதியீடு செய்யத்தகுந்தவர் முப்படைத் தளபதி சரத் பொன்சேகாதான் என்ற தோற்றப்பாடு அரசியல் மட்டத்தில் எழுந்தது. அவ்வேளையில் “இலங்கையின் புதிய யனாதிபதியாக மகிந்தாவுக்குப் பதில் சரத் பொன்சேகாவைத் தெரிவு செய்வதென்பது உலையிலிருந்து அடுப்பினுள் விழுந்த கதையாகத்தான் முடியும்” என டெய்லிமிரர் விமர்சித்தது. அது உண்மையாய்ப் போகுமா? என்ற கேள்வி அப்போது தமிழர் மத்தியில் எழுந்து.

சரத் பொன்சேகா முழு இலங்கையராக இருக்கலாம், ஆனால் முழு அரசியல்வாதியல்ல. தன் வாழ்நாளின் பெரும்பகுதியை இராணுவத்திலேயே கழித்திருக்கிறார். அதுவும் பெரும்பான்மையான இறுதிக்காலங்களில் கொடூரமான இராணுவ சிந்தனையுள்ள போர்த் தளபதியாகத்தான் இருந்திருக்கிறார். அரசியலுக்கு இவர் புத்தம் புதியவர் என்பதுடன் அரசியல் நுணுக்கம் எதுவும் தெரியாதவருங்கூட. இராணுவ சிந்தனை என்பதும் அரசியல் சிந்தனை என்பதும் வேறு வேறானவை. இரண்டும் ஒன்றாக இருக்குமானால் இராணுவ ஆட்சியாளர்கள் கீழிருந்த பாக்கிஸ்தான் போலோ, இடியமினின் ஆட்சிக்கால உகண்டா போலவோ, சதாமின் ஈராக் போலவோ, கடாபியின் லிபியா போலவோ நீ வின்னின் பர்மா போலவோதான் இருக்கும். அதிலும் இராணுவத்திலிருந்து நேரடியாகவும் புதிதாகவும் அரசியலுக்கு வருபவரிடம் சனநாயக வழிமுறையுள்ள அரசியலை எதிர்பார்க்க முடியுமா? - இது இலங்கை மக்கள் ஒரு சாராரின் கேள்வி.

சரத் பொன்சேகா ஐக்கிய தேசிய முன்னணியின் பொது வேட்பாளராகப் போட்டியிடத் தயாரெனில் யே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பவற்றின் பிரதி நிதிகளுக்கு மந்திரிபதவிகள் கொடுக்கச் சம்மதிப்பதுடன் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையையும் ஒழிக்கச் சம்மதிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்தான் பொதுவேட்பாளராகலாம் என்ற ரனில் விக்கிரமசிங்காவின் நிபந்தனைகளுடனேயே சரத் யனாதிபதி வேட்பாளராகியிருக்கிறார் என்பதை நோக்கும்போது மந்திரிப் பதவிகள் என்ற ஆசையில்தான் தமிழ் அமைப்பு குடைசாய்ந்ததோ? என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழாமல் இல்லை.

எதிரியின் எதிரி நண்பன் என்பதற்கமைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மகிந்தாவின் எதிரியாகிப் போயுள்ள சரத்திற்கு ஆதரவு தெரிவித்திருப்பது சரிதான் எனக் கூறியிருக்கும் (கனடிய) படைப்பாளிகள் கழகம் (என்ன படைத்தார்கள் என்பது அவர்களுக்கே விளக்கமில்லை, அதுநிற்க,) என்ன சொல்கிறார்கள்? மகிந்தாவும் சரத்தும் இப்போது ஆளுக்கு ஆள் எதிரிதான். ஆனால் எமக்கு? இருவரும் எதிரிகள்தானே! அப்படிப் பார்த்தால் மகிந்தாவைக் கூடத்தான் நண்பராக்க வேண்டும்! ஏனெனில் அவர் இப்போது சரத்தின் எதிரியல்லவா! ஏன் செய்யவில்லை. மகிந்தாவை விட்டு சரத்திடம் மட்டும் ஏன் நட்பு நாடவேண்டும்? சரத் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை ஆதரிப்பவரா? இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுந்தான் சொந்தமானது எனச் சொன்னவர் தானே அவர். அப்படி தான் ஒருபோதும் சொல்லவில்லையென்றும் பத்திரிகைகள் தவறாக விளங்கிக்கொண்டு பிரசுரம் செய்துவிட்டன என்றும் தேர்தல் யுத்தியாக தற்போது குத்துக்கரணம் அடிக்கிறாரே அவரையா நண்பன் என்கிறீர்கள்? அதற்கான பதில் இந்தப் படைப்பாளிகளிடமில்லை. விளக்கமில்லாமல் குழுறுபடியான அறிக்கையில் வார்த்தையாலம் காட்டுகிறார்கள் இந்தப் படைப்பாளிகள் கழகத்தினர். இவர்கள்மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை கண்மூடிக்கொண்டு ஆதரிக்கும் பலரும் இவ்வாறுதான் சரியான விளக்கமில்லாமலே கூட்டமைப்புக்கு ஆதரவான அறிக்கைகளை விட்டபடியிருக்கிறார்கள். ஏன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அறிக்கைகூட ஏன் தாம் சரத் பொன்சேகாவை ஆதரிக்கிறோமென்ற விளக்கத்துடன் வெளிவரவில்லை. ஏனென்றால் அவர்களிடமே அதற்கான விளக்கமில்லை. இவர்கள் எல்லோருக்குமே தற்போதைய அவசரத்தேவை ஒரு ஆட்சி மாற்றம் மட்டுமே! ஆட்சி மாற்றம் வந்தால் மட்டும் தமிழர்களின் சுயநிரணய உரிமை கிடைத்துவிடுமா? இலங்கை சுதந்திரமடைந்து எத்தனையோ ஆட்சி மாற்றங்கள் வந்துவிட்டன. அவர் இல்லாவிடில் இவர் என மாறிமாறி வந்த அத்தனை ஆட்சிமாற்றத்திற்கும் தமிழர்களின் வாக்குபலம் கணிசமான அளவில் காரணமாக இருந்திருக்கிறது. அப்போதெல்லாம் கிடைக்காத தமிழ் உரிமைகள் இனிமேலும் ஒரு ஆட்சி மாற்றத்தால் கிடைத்திடுமா? இதுவும் தமிழ் மக்களின் கேள்வி!

எவரோ ஒரு சிங்களவர்தான் அடுத்த ஆட்சியாளராக வரப்போகிறார். அதில் கருத்துபேதமில்லை. ஆனால் அவரும் ஏன் வெகு இலகுவாக வரவேண்டும்? 50 வீதமான வாக்குகளுக்கு மேல் பெறுபவரே வெற்றியாளர் என்பது யனாதிபதி வெற்றியாளரைத் தீர்மானிக்கும் யாப்பு. எவரும் 50 வீதம் பெறாவிடில் வாக்கு எண்ணிக்கையில் முன்னணியில் வந்த முதல் மூவருக்குள் மீண்டும் தேர்தல் நடைபெற்று வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவார் என்பதும் யாப்பு. இப்படி இரண்டாம் தேர்தல் நடைபெறும் தருணத்தில்தான் தமிழர்களின் வாக்குகளுக்குப் பலம் அதிகமாக இருக்கும். அத்தகைய தருணம் வரும்போது முன்னணி வேட்பாளர்கள் தமிழர் பிரதிநிதிகளைத்தேடி வலியவே வருவார்கள். அப்போது பெறப்படும் ஒப்பந்தங்களும் நிபந்தனைகளுந்தான் பலமானவை. அதைவிடுத்து எடுத்த எடுப்பிலேயே பிரதான வேட்பாளர்களை தமிழ் அரசியல்வாதிகள் அவர்கள் வாசல்த்தலத்திற்கே வலிய நாடிச்சென்று ஒப்பந்தங்கள் செய்வதால் எதுவும் நடைபெறப்போவதில்லை. இம்முறையும் இதுவேதான் நடந்துவருகிறது. சம்மந்தர் சரத்தைத்தேடி அவரது அலுவலத்திற்குச் சென்று ரனில் விக்கிமசிங்கா முன்னிலையில் கையொப்பிட்ட ஒப்பந்தம் பெற்றிருக்கிறார். ஆனால் அவர் ஆட்சிபீடம் ஏறியபின் அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? அறுவது வருடத்தில் தமிழர்-சிங்களவர் ஒப்பந்தங்கள் எவைதான் கிழித்தெறியப்படாதிருந்திருக்கிறது? இந்தியா, நோர்வே போன்ற பிறநாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்கூட குப்பைக்குள் போனதுதானே எமது சரித்திரம். இப்படியிருக்கையில் சரத் - சம்மந்தர் பிரத்தியேக ஒப்பந்தம் நிறைவேறும் என்பதற்கு என்ன உத்திரவாதம்? சரத் பொன்சேகா என்ன நம்பத் தகுந்தவரா? இதைக் கருத்திலெடுத்து மகிந்தா, சரத் எவரும் 50 வீத வாக்குகள் பெறமுடியாத இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இரண்டாம் தேர்தலில் இவர்கள் தமிழர் தயவை நாடும் நிலைமையை ஏன் தமிழர் தரப்பு ஏற்படுத்தமுடியாது? ஏன்ற கோசத்துடன் சுயேட்சையாகக் களமிறங்கியுள்ள சிவாயிலிங்கத்தின் கூற்றில் உண்மையிருப்பதை ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுதலிக்கிறது? இதுவும் தமிழ் மக்களின் கேள்வியே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராயபக்சாவுக்கு ஆதரவு தராது என்பது பாமரருக்கும் தெரிந்ததுதான். மகிந்தா தமி

*(7ம் பக்கம் பார்க்கவும்)*

**தேர்தல்..**
*6ம் பக்கத் தொடர்ச்சி)*

ழ்த் தேசியக் கூட்டமைப்பை எப்போதும் நட்புடன் நோக்கியதுமில்லை. சர்வகட்சிக் குழு நியமனத்தில் எப்போதுமே இவர்களை மகிந்தா புறக்கணித்தே வந்துமிருக்கிறார். இவர்கள் புலிகளின் பினாமிகளென காரணம் சொல்லிக்கொண்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பொருட்டாகவும் மகிந்தா மதிக்கவில்லை என்பதுதான் உண்மையான காரணம். துரோகிகள் என புலிகளால் முத்திரைகுத்தப்பட்ட டக்ளஸ், கருணா போன்றோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் விரோதிகளாகவும் துரோகிகளாகவும் தெரிவதால் அவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்ட மகிந்தாவுடன் கூட்டுச்சேர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவுமில்லை என்பதும் எல்லோருக்குமே தெரிந்ததுதான். ஆனால் சரத் பொன்சேகாவை ஏன் ஆதரிக்கிறார்கள்? இந்தியாவுக்கு எதிர்ப்புக்காட்டவா? அமெரிக்காவின் செல்லப்பிள்ளைகளாக இருக்கும் ரனிலுக்கும் சரத்திற்கும் ஆதரவளிப்பதன்மூலம் அமரிக்காவையும் அதன் நட்பாளர்களான ஏனைய மேல்நாடு

**இதுவரை காலமும் வாக்கிடும் அல்லது வாக்கிடலைத் தவிர்க்கும் முடிவை தமிழர்களுக்காக புலிகள்தானே எடுத்திருந்தார்கள்.**

களையும் குசிப்படுத்தவா? இதுவும் ஒரு முக்கியமான கேள்வியாகவே மக்களிடம், அதுவும் புலம்பெயர் மக்களிடம் எழுகிறது. இதன் பின்னணியும் இக் கேள்வி எழுவதற்கான காரணத்தை வலுவாக்குகிறது. போர் உச்சகட்டத்தில் இருந்தவேளையில் புலம்பெயர் புலிகள் சார்பு அமைப்புகள் ஏதோ அமிரிக்காதான் புலிகளுடன் போர்தொடுக்கிறது என்பதாக அமிரிக்கத் தூதரகங்களையெல்லாம் முற்றுகையிட்டு கோசம் எழுப்பின. ஆனால் அமரிக்காவோ மௌனமாகவும் நிதானமாகவும் இருந்து புலிகள் மீதான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மேலும் ஐந்துவருடத்திற்கு நீடித்து இவர்களுக்கு அதிர்ச்சியூட்டியது. ஆனால் அதன் பின்பும் சொரணையின்றிச் சிலர் இன்னும் அமரிக்கத் தூதரகங்களுக்குமுன் தாம் கொடியேந்தி நின்ற நாட்களின் எண்ணிக்கையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அமரிக்காவும் சளைக்காது புலிகளுக்கு ஆயுதம் வாங்க முனைந்தவர்கள, புலிகளுக்கு பணம்சேகரித்தவர்கள் என்று கனடியத் தமிழர்களுக்கு சிறைவாசம் கொடுக்க முனைந்து கொண்டிருக்கிறது. இதற்குப் பதில் புலம்பெயர்தமிழர்கள் இந்திய, சீனத் தூதரகங்களுக்கு முன் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நாட்கணக்கில் செய்திருந்தால் புலிகள் காப்பாற்றப்பட்டிருப்பார்களோ என்னவோ? ஆனாலும் இவர்கள் அமரிக்கத் தூதரகங்களுக்கு முன் நின்றதற்கும் புலிகளுக்கும் ஏதோ சம்மந்தம் இருக்கிறது என்பதுதான் புலி விசுவாசிகளதும், புலி எதிர்ப்பாளர்களதும் ஏகோபித்த கருத்து. அமரிக்கா காப்பாற்றும் என்று அவர்களும் அமரிக்கா புலிகளை விலைக்குவாங்கிவிட்டதென இவர்களுமாக ஈழப் போராட்டத்துடன் அமரிக்காவை முடிந்துகொண்டன. இதன் தொடர்ச்சிதானா தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சரத் சார்பு முடிவும் அதை ஆதரிக்கும் புலிகளின் புலம்பெயர் பினாமி அமைப்புகளினது ஆதரவும்? என்பதும் மக்களின் கேள்வி.

தேர்தல் என்று வந்ததும் இம்முறைதனும் தேர்தலைப் பகிஸ்கரிக்கும்படி எவரும் சொல்லாதது ஆறுதலானதுடன் யனநாயக மற்றும் சுதந்திரமானதமான முடிவை தமிழ் மக்கள் அனுபவிக்கப்போகிறார்கள் என்பதும் சந்தோசத்தைத் தருகிறது. தமக்கான முடிவை தாமே எடுப்பதுதானே சுதந்திரம். அதை நீண்ட காலத்தின்பின் தமிழர்கள் முதன்முதலாக அனுபவிக்கப் போகிறார்கள். இதுவரை காலமும் வாக்கிடும் அல்லது வாக்கிடலைத் தவிர்க்கும் முடிவை தமிழர்களுக்காக புலிகள்தானே எடுத்திருந்தார்கள். ஆட்சியை மாற்றினார்கள். கொழும்புக்கும், பிற நாடுகளுக்கும் பிரதிநிதிகளை அனுப்பும் சுமூக உறவை ஏற்படுத்தினார்கள். கடைசியில், மக்கள் தாமே முடிவெடுப்பதை மறுத்து அவர்களுக்காக புலிகள் தாமே எடுத்த நிர்ப்பந்த முடிவினால் ஆட்சிபிடமேற்றிய மகிந்த ராயபக்சவாலேயே புதையுண்டு போனார்கள். தமக்கான குழியை தாமே வெட்டிக்கொண்டார்கள் என்பதை தமிழ் மக்கள் மறக்கப்போவதில்லை. இதனால் இம்முறைதான் தமிழ் மக்கள் பூரண சுதந்திரத்துடன் வாக்களிக்கச் செல்லப்போகிறார்கள். இதையே, 'தமிழர்கள் தேர்தலைப் பகிஸ்கரிப்பதால் அவர்கட்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. அதேபோல் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை நியமித்து யனாதிபதியாக ஆக்கிடவும் முடியாது. அதனால் வெல்லத்தகுந்தவருக்கு ஆதரவு கொடுத்து ஏதும் ஆதாயம் தேடிக்கொள்வதுதான் தமிழர் புத்திசாலித்தனம்" என்று ஓய்வுபெற்ற நிதவான் சி.வி. விக்னேஸ்வரன் சொல்லியிருக்கிறார். அந்த வெல்லத்தகுந்தவர் யார்? அது மகிந்தாவாக இருந்தால் அவருக்கு வாக்களிக்கலாமா? இவையும் தமிழர்களின் கேள்விகள்.

இப்படியே கேள்விகள் பல இருந்தாலும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் மனக்கணக்கு என்று ஒன்று இருக்கிறதல்லவா. அதற்கு அவர்களது தற்போதைய எதார்த்தந்தான் விடைபகரும். அறுவது வருடப் போராட்டத்தினூடு அவர்கள் வாழ்ந்து.. வாழ்ந்து என்பது தவறு. நோந்து நூலாகிப் போயிருக்கிறார்கள். அவர்கள் சாத்வீகப் போர், ஒப்பந்தங்கள், கலவரங்கள், ஆயுதப் போராட்டம் என எல்லாவற்றிலும் தோற்றவர்களாக களைத்துப்போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆசுவாசமும் நிம்மதிக்குக் கொஞ்ச அவகாசமுந்தான் இப்போது தேவையாகவிருக்கிறது. இந்நேரத்தில் வந்த தேர்தலை ஒரு துருப்புச் சீட்டாகப் பாவிக்கும் பிரக்ஞை அவர்களிடமில்லை. மீண்டும் தமிழர் இறைமையைப்பற்றிச் சிந்தித்து மீண்டும் முட்டி மோதிக்கொள்ளும் தெம்பும் அவர்களுக்கில்லை. பற்றிக்கொள்ளக்கூட அவர்களுக்கு ஏதும் துரும்புமில்லை. நடப்பது நடக்கட்டும் என்று ஏனோதானோவென்றே காலங்கழிக்கிறார்கள். இதனால் அவர்கள் தேர்தல் பற்றி எந்த அசட்டையும் இல்லாமலே இருக்கிறார்கள். இதனால் எல்லோருமே எதிர்பார்ப்பதுபோல் அல்லாமல் இம்முறை தமிழர் வாக்குவளம் குறைவானதாகத்தான் இருக்கப்போகிறது. தமிழ், தமிழர் உரிமை, இறைமை என்பதையெல்லாம் கருத்திலெடுக்கும் மனநிலையில் அவர்களில்லை. அவர்கள் இப்போது வேண்டுவதெல்லாம் அமைதி. அமைதிமட்டுந்தான். உள்ளதைத்தனும் காப்பாற்றுவதே அவர்களது தற்போதைய வேட்கை. அவர்கள் தேர்தலில் ஆர்வங்காட்டுவதாக நிலைமை இல்லை. கிழக்கு மாகாணம் கொஞ்சம் தேறியிருந்தாலும் வடக்கு முற்றாக மௌனித்தே கிடக்கிறது. இந்நிலமையை அப்படியே பேணுவதிலேயே மகிந்த ராயபக்ச விருப்பங்கொண்டுள்ளார். மகிந்தா கிழக்கு வெளிக்கும் என்று கருணாவை நம்பி இருக்கிறார். ஆனால் கருணாவோ இன்னமும் பேயறைந்ததுபோலவேதான் உலாவுகின்றார். ஏனென்றால் அது வெளுக்குமா வெளுக்காதா என்பது கருணாவுக்கே இன்னும் வெளிக்கவில்லை. இந்நிலையில் மொத்தத் தமிழர்களும் என்ன முடிவை எடுக்கப்போகிறார்கள்? என்பதுதான் இலங்கையின் அரசியல்வாதிகளதும் தமிழ் போசும் புலம்பெயர்ந்த பார்வையாளர்களதும் கேள்வி. வாக்குகள் சரத்திற்கும், மகிந்தாவுக்கும், விக்கிரமபாகுவுக்கும், சிவாயிலிங்கத்திற்கும் ஏறத்தாழ சம வீதமாகப் பிரிந்துபோனால்? (இதுவே எனது கேள்வி) தமிழர் இலங்கை அரசியல் மாற்றத்தை நிர்ணயிக்கப்போவதில்லை. ஆதலால் எதுவெனினும் தேவை தமிழர் தமக்குள்ளான ஒற்றுமையே!

*-நிமலன்,*
*Waterloo*

# சிறு துளையின் ஊடே ஒடுங்கி நுளைந்து விரியும் ஒளியிழை!

*(ஒரு விடயம் மட்டும் எப்போதும் உண்மை. சிங்கள பேரினவாதக் கட்சிகள் எப்போது இரண்டாகப் பிளவுப்பட்டுக் கிடக்கின்றதோ அப்போது தான் சிறுபான்மை இனங்களுக்கு ஏதாவது கிடைக்கும்)*

2010 இலங்கை ஜனநாதிபதி தேர்தல் இலங்கையில் ஒரு அரசியல் புயலைக் கிளப்பியுள்ளது.

இந்தத் தேர்தலில் பெரும்பான்மையினத்தை சேர்ந்த யார் ஜனாதிபதி ஆகப்போகின்றார் என்ற முடிவு மீண்டும் ஒரு முறை சிறுபான்மை இனங்களான தமிழர், முஸ்லீம்கள் மற்றும் மலையக மக்களின் கைகளில் விடப்பட்டுள்ளது.

**செழியன்**
chezhian@vaikarai.com

அது மகிந்த ராஜபக்சவா அல்லது சரத் பொன்சேகாவா ஜனாதிபதியாகப் போகின்றார்? என்ற கேள்விக்குள் அடங்கி நிற்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒருவர் வெற்றி பெறுவது என்பது சிறுபான்மை இனங்களின் வாக்குகளிலே தங்கியுள்ளது என்ற உண்மையை இம்முறைதான் சிறுபான்மை இனங்கள் மட்டுமல்ல, இனவாத பெரும்பான்மை இனக் கட்சிகளும் உணர்ந்து கொ-ண்டது போல் ஒரு தோற்றம் தெரிகின்றது.

அது உண்மையல்ல என்பது காலம் காலமாக சிங்கள பேரினவாத தலைமைகளுக்கு வெள்ளிடை மலையாகத் தெரியும். இந்த உண்மையை சிறுபான்மை இனங்கள் கண்டுபிடித்து விடாமல் சதுரங்க ஆட்டங்கள் ஆடி, பிரித்தாளும் தந்திரகங்களை பயன்படுத்தி இதுவரை நாடகங்கள் நடத்தின.

ஆனால் இதை இலங்கையின் சிறுபான்மை இனங்கள் இப்போது இந்த 2010 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மிகத் துள்ளியமாக கண்டுபிடித்து விட்டது போன்ற ஒரு தோற்றம் தெரிகின்றது.

இந்த மந்திரக் கோலின் மகத்துவத்தை மட்டும் தமிழர்கள், முஸ்லீம்கள், மலையக மக்கள் புரிந்து கொண்டார்கள் என்றால், அவர்கள் தமது சக்தியையும், மெல்ல மெல்லமாகத் தமது உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற அதிசயத்தையும் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டுவிடுவார்கள்.

இந்த 2010 ஜனாதிபதி தேர்தலில் மகிந்தா வெற்றிவெற்றிபெற்றால் என்ன, அல்லது சரத் வெற்றிபெற்றால் என்ன சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகள் கிடைக்காது என்பதுதான் உண்மை.

யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறுபான்மையினரின் அடிப்படை, அரசியல் விருப்புக்களை நிறைவேற்றப் போவதில்லை. இவர்கள் ஒரே கொள்கை உடையவர்கள். பேரினவாத அரசியல் சித்தாந்தங்களுக்குள் சிக்குண்டு கிடப்பவர்கள்.

இவர்களில் யாருக்கு வாக்களிக்கலாம் என்று கேட்டால், இவருக்குத் தான் வாக்களியுங்கள் என்று எந்தத் தமிழிழருமே சொல்லமுடியாது. கைகாட்டி சொல்வதற்கு எவருக்குமே வெட்கமாகவே இருக்கும். இது ஒவ்வொரு தமிழர்களின் உள்ளார்ந்த உளவியல் பிரச்சனை. வாக்குச் சீட்டை கையில் வைத்துக் கொண்டு வாக்குப் பெட்டிக்கு முன் நிற்கும் தமிழருமே குழம்பித்தான் தவிப்பார்கள்.

ஒருவிடயம் மட்டும் எல்லாத் தமிழருக்கும் புரியும் என்று நினைக்கின்றேன்.

இந்த தேர்தலில் சிங்களப் பேரின வாதக் கட்சிகள் இரண்டாகப் பிளவுபடுவாதல் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், பத்திரிகையாளர்களின் படுகொலைகளின் சூத்திரதாரிகளின் விபரங்கள் என்று பல விடயங்கள் வெளிவர வாய்ப்புகள் உள்ளன. அத்தோடு ஏதாவது சிறு சலுகைகள் கிடைக்கவும் வாய்ப்புண்டு. இது தேர்தலுக்கு முன்பாகவே கிடைக்கின்றது.




இந்தத் தேர்தலில் யார் வெல்கின்றார்? யார் தோற்கின்றார் என்பது சிறுபான்மை இனங்களின் பிரச்சனை இல்லை. இந்தத் தேர்தலின் முடிவில் ஒரு உண்மை மட்டும் தெரியவரும்,

வருங்காலத்தில் இலங்கையின் எல்லா சிறுபான்மை இனங்களும் ஒன்றுபடுவதின் வலு என்ன என்பதை சிறுபான்மை இனங்கள் புரிந்து கொள்ளும். அது ஒரு பெரும் சக்தியாக உருவெடுக்கட்டும்.

# வீழ்ந்துபோனதொரு தேசம்

நிவேதா
nivetha@vaikarai.com

வரலாறு எம்மைச்சுற்றி தன்னை நிகழ்த்திக் கொண்டேயிருக்கிறது. அலையலையாய்ப் படிவுண்ட அதன் பக்கங்களுக்குள் ஒரு மீள முடியாத் துயரத்தின் சாட்சியாய் நாம் விசனித்திருக்கிறோம். ஒரு தேசம் தூர்ந்துகொண்டிருக்கிறது எமதனைவரின் கனவுகளினூடு.. தொடர்ந்தும், வரலாறு இந்தத் தருணத்தை எழுதிக் கொண்டிருக்கிறது. நாமனைவரும் எழுதிக் கொண்டிருக்கிறோம்.. இணையத்தின் மின்னதிர்வுகளின் வழி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானலைகள், தொலைக்காட்சிகளினூடு சரி - பிழைகள் அலசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏமாற்றம்இ தோல்வி, கோபம், சந்தோஷம், கெக்கலிப்பு எல்லாவிதமான உணர்வுகளும் அரசியல் ஆய்வுகளினூடு வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்வதற்கு ஏதேனும் மீதமிருக்கிறதா என்ன? அரசியற் கட்டுரைகள் ஒரு மர்மத்தைத் துப்பறியும் ஆர்வத்துடனும், சுவாரசியத்துடனும் இந்த வீழ்ச்சியை ஆராய்கின்றன, சம்பவங்களை பட்டியலிடுகின்றன, இறந்து - தொலைந்து போனவர்கள் - காயப்பட்டவர்கள் - முகாம்களிலிருப்பவர்களைக் கணக்கிடுகின்றன. துப்பறியும் தொடரொன்றின் தவிர்க்க முடியா வாசகர்கள் போல பிறிதனைவரும் படபடப்புடன் பின்தொடர்கின்றனர். இதொரு தீவிர நம்பிக்கையின் வீழ்ச்சி எங்களுக்கானதொரு தேசம் பற்றிய கனவொன்று எங்கள் முன் கலைந்துகொண்டிருக்கிறது. வரலாறு அதன் மர்மங்களுடன் எப்போதும் போல கடந்துகொண்டிருக்கிறது மிக மிக அமைதியாக.., எந்த ஆர்ப்பாட்டமுமில்லாமல்..

இலங்கையில் மட்டுமல்லாமல் உலகின் பல பாகங்களில் - மிக முக்கியமாக ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இன முரண்பாடுகள் அனைத்தும் பின்காலனீயத்தின் விளைவுகளென்பது சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. சாதாரண உட்பூசல்களையும் வளர்த்தெடுத்து பெரும் போரெனக் கொண்டுவந்து நிறுத்துவதில் மேற்குலக நாடுகளின்/பிராந்திய வல்லரசுகளின் பங்கும் இனியுமெதுவுமில்லையென்றளவு அலசியாராயப்பட்டாயிற்று. இவையனைத்துக்கும் மேலாக ஊடகங்களின் அரசியல் - அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களின் நிலைப்பாடு இன்றைய உலகின் ஒட்டுமொத்த பொதுசன மனப்பாங்கையும் தன் கட்டில் வைத்திருக்கிறது. பொதுசன மனப்பாங்கின் மீதான ஊடகங்களின் ஆதிக்கத்தின் மிக வெளிப்படையான எதிர்வினைதான் ஊடகவியலாளர்கள் அதிகாரத்திலிருப்பவர்களால் கொல்லப்படுவதும், எச்சரிக்கப்படுவதும். நடந்துமுடிந்த யுத்தமும், அதன் தொடர்ச்சியான வீழ்ச்சியும் வெறுமனவே ஆயுத முனையிலான முறியடிப்பல்ல் மாறாக, “தமிழீழம்” என்ற ஒரு கருத்தமைவின் தோல்வி ஊடகங்கள், சர்வதேச உறவுகள்இ 9/11க்குப் பிறகான மேற்குலக நாடுகளின் உள்ளார்ந்த அச்சம் இவையனைத்தினாலும் ஏலவே தீர்மானிக்கப்பட்டுவிட்டிருநதது.

கோட்பாட்டினடிப்படையில், ஒரு அரசு அல்லது தேசத்தின் நிலைபேற்றுக்கு மிக முக்கியமான மூலக்கூறுகளாக நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை மற்றும் பிற நாடுகளின் அங்கீகாரம் போன்றவை வரையறுக்கப்படுகின்றன. அரிஸ்டோட்டில் போன்ற ஆரம்பகால அறிஞர்கள் முதல் நான்கு மூலக்கூறுகளையே பிரதானமாகக் கருதியிருந்தாலும், பிற நாடுகளின் அங்கீகாரம் என்ற இயல்பு நவீன அரசறிவியலாளர்களால் முன்வைக்கப்பட்டு வருகிறது. ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு, அந்நிலப்பரப்பில் வாழும் குறிப்பிட்டளவு மக்கள், அவர்களை ஆள்வதற்கானதொரு அரசாங்கம், அவ்வரசாங்கத்துக்குக் கீழ்ப்படியும் மக்களின் மனப்பான்மை/விருப்பு, பிற சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் இவையனைத்திலும் ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட மூலக்கூறுகளோ குறையுமானால் அவ்வரசு நிலைத்திருக்கச் சாத்தியமில்லையென்பது கோட்பாட்டுரீதியில் மட்டுமல்லாது யதார்த்தத்திலும் நிரூபிக்கப்பட்டுவிட்டதெனத் தெரிகிறது. தமிழீழம் என்ற தேசம் ஒரு அரசுக்கான பிறிதனைத்து இயல்புகளையும் கொண்டிருந்தாலும் பிற நாடுகளின் அங்கீகாரம் அதற்குக் கிடைத்திருக்காத ஒரே காரணத்தால் இன்று வீழ்ந்துவிட நேர்ந்திருக்கிறதென்றே தோன்றுகிறது. ஆகக்குறைந்தது ஒரு குறித்த சில நாடுகளின் அங்கீகாரம் இருந்திருந்தாலே தமிழீழம் நிலைத்திருக்கக்கூடுமென்ற தவிப்பு தவிர்க்க முடியாதது. புலிகள் அரசியல் சார்ந்த நோக்குடன் செயற்படாமை குறித்த விமர்சனங்கள் இந்தவிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தான் வேண்டும்.



**.....வன்முறைதான் இத்தனை அழிவுக்கும் காரணமென்ற ரீதியில் வெளிவரும் கட்டுரைகள் விசனத்தைத் தூண்டுகின்றன. 60களில், 1977ல் தமிழர்கள் மீதான இனப்படுகொலை இடம்பெற்றபோது எந்தவித ஆயுதந்தாங்கிய பெரிய அமைப்புகளும் தமிழர்கள் மத்தியில் இருக்கவில்லையெனும் மிகச்சிறிய தரவு கூட படைப்பாளிகளுக்குத் தெரிந்திருக்காதா என்ன..**

ஆனாலும், நடந்துமுடிந்த போரின் பின்னரான அரசியலாய்வுகள், புலிகளுக்கெதிரான விமர்சனங்கள், ஒப்பீடுகளனைத்தும் இந்த இனப்பிரச்சனையின் அடித்தளத்தை விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டனவெனவே தோன்றுகிறது. காந்தியின், மாவோயிஸ்டுகளின், சேயின் போராட்டங்களை உதாரணங்காட்டி எழுதப்பட்ட கட்டுரைகளையும், வன்முறைக்கெதிரான விமர்சனங்களையும் வாசிக்க நேர்கையில் இனமுரண்பாட்டின் தோற்றம் குறித்த உண்மையான தெளிவு கட்டுரையாளர்களுக்கு இருந்திருக்க முடியுமாவென்ற சந்தேகமெழுந்தது. தமிழர்கள் வன்முறையைக் கையிலெடுத்தது இனப்பிரச்சனையின் மிக மிகப்பிந்தைய காலகட்டத்தில்.. அதற்கு முன்னர் தந்தை செல்வநாயகம் அமைதிவழிப் போராட்டங்கள் பலதை முன்னெடுத்திருந்தார். எத்தனையோ அரசியல் சீர்திருத்தப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுமிருந்தன. அனைத்தும் தோல்வியுற்ற நிலையில் ஏறக்குறைய அறுபதாண்டு காலத்துக்குப் பிறகு ஆயுதந்தாங்கிய போராட்டம் ஆரம்பித்திருக்க வன்முறைதான் இத்தனை அழிவுக்கும் காரணமென்ற ரீதியில் வெளிவரும் கட்டுரைகள் விசனத்தைத் தூண்டுகின்றன. 60களில், 1977ல் தமிழர்கள் மீதான இனப்படுகொலை இடம்பெற்றபோது எந்தவித ஆயுதந்தாங்கிய பெரிய அமைப்புகளும் தமிழர்கள் மத்தியில் இருக்கவில்லையெனும் மிகச்சிறிய தரவு கூட படைப்பாளிகளுக்குத் தெரிந்திருக்காதா என்ன..


இனப்பிரச்சனையின் அடிவேரை நோக்கிய தேடல் எங்களை காலனித்துவ காலங்களுக்கு வழிநடத்திச் செல்லும். காலனீய காலகட்டம் இனங்களுக்கிடையிலான விரிசலை மிகத் தந்திரமான முறையில் மேம்படுத்தியதன் மூலம் அதிகாரத்தை ஆதிக்க சக்திகளின் கையில் திணித்திருந்தது. 1921ல் மனிங் தற்காலிக யாப்பு சீர்திருத்தம் மனிங் தேசாதிபதியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த யாப்புச் சீர்திருத்தத்தின் முக்கியக் கூறுகளை விளங்கிக் கொள்ள அதற்கு முன்னரான இலங்கையின் அரசியல் நிலைவரம் குறித்த தெளிவு முக்கியமாகப்படுகிறது. 1912லிருந்து 1921 வரையிலான காலகட்டத்தின்போது சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் இணைந்தே சுதந்திரப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அப்போதைய அரசியல் சூழ்நிலை இன ரீதியான பாகுபாடன்றி, தீவிர தேசியவாதம் - மிதவாதமென்ற பாகுபாடுகளையே கொண்டிருந்தது. முன்னைய குறூ-மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தினூடாக அரசியலரங்குக்கு வந்த கற்றோர் குழாமினர் மகஜர் அனுப்புதல், பேச்சுவார்த்தைகளின் ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகளினூடாக தீர்வுகாண முற்பட்ட அதேவேளை, ஏ.ஈ.குணசிங்க, விக்டர் கொரயா தலைமையில் இயங்கிய தீவிர தேசியவாதிகள் பகிஷ்கரிப்பு, வேலைநிறுத்தம், ஆர்ப்பார்ட்டங்கள் போன்ற நடவடிக்கைகளினூடாக பூரண சுதந்திரத்தை வலியுறுத்தி நின்றனர். இந்தப் படித்த மிதவாத அரசியலுக்கும், தீவிரவாத அரசியலுக்குமிடையிலான வேறுபாடும் பிளவும், அதன் தாக்கங்களும் இலங்கையரசியல் வரலாறு முழுவதும் விரவிக் கிடக்கின்றன. தீவிர தேசியவாதிகள் “சூரிய மல்” போன்ற இயக்கங்களினூடாக அடித்தட்டு மக்களின் நலன்களைக் கவனித்தும், மலேரியாவினால் ஆயிரக்கணக்கானோர் இறந்துகொண்டிருந்த காலகட்டத்தில் அவர்களுக்கு சேவைசெய்தும் வந்திருந்த அதே தருணத்தில்தான் மிதவாதிகள் இங்கிலாந்தில் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டும், வாக்குரிமை கற்றோருக்கும், சொத்துள்ளோருக்கும் மட்டும் வரையறுக்கப்படவேண்டுமென விவாதித்துக்கொண்டுமிருந்தனர். இலங்கையின் அரசியல் வரலாற்றினடிப்படையில் மிதவாத அரசியல் எப்போதும் அடித்தட்டு மக்களின் நலனைப் புறக்கணித்தபடியே நகர்ந்துகொண்டிருப்பதை தெளிவாகவே அவதானிக்கலாம். இதில் குறிப்பிடத்தகுந்த விடயம், சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் மிதவாத அரசியலை முன்னின்று நடத்திக் கொண்டிருந்தவர்கள் தமிழ்த்தலைவர்கள். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் தமிழ்த் தீவிரவாத அரசியலுக்கு சார்பாயிருந்தாலும் சேர்.பொன்.அருணாசலம்இ சேர்.பொன்.இராமநாதன் ஆகியோரின் மிதவாதம் அவற்றையெல்லாம் விழுங்கித் தீர்த்துக்கொண்டு தன்னை அரசியலரங்கில் நிலைநாட்டத் தொடங்கியிருந்தது.

1915ல் கண்டியில் ஆரம்பித்த சிங்கள - முஸ்லீம் கலவரம் இலங்கை முழுவதும் பரவத் தொடங்கியதன் விளைவாக பல சிங்களத் தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், சிறையிலும் அடைக்கப்பட்டனர். இவர்களை விடுவிக்க தமிழ்த்தலைவர்கள் இங்கிலாந்து வரை சென்று கடும் முயற்சி செய்தனர். இவ்வரசியல் சம்பவங்களை ஆராய்கையில் வெளித்தெரியும் சுவாரசியமான அவதானிப்பு, தமிழர்கள் எந்தக் காலத்திலும் தங்களை சிறுபான்மையினராகக் கருதியிருக்கவில்லையென்பது. அவர்கள் தங்களை சிங்களவருக்குச் சரிசமமாகக் கருதி, சரி சமமான அதிகாரங்களை எதிர்பார்த்திருந்தனர். அதற்கேற்றாற்போல, 1919ல் இலங்கையில் தீவிர, மிதவாதிகள் அனைவருமிணைந்து “இலங்கைத் தேசிய காங்கிரஸ்” உருவானபோது அதன் தலைவராக - முழு இலங்கைக்குமென - ஏகமனதாகத் தெரிவானவர் சேர். பொன்.அருணாசலம். சிங்கள-முஸ்லிம் கலவரத்தின்போது கூட தமிழ்த்தலைவர்கள் மற்றுமொரு சிறுபான்மையினமான முஸ்லிம்களைப் புறக்கணித்து சிங்களவர்களையே சார்ந்திருந்தனர். அரசியல் சீர்திருத்தங்களின் போது தமக்குச் சரி சமமான அதிகாரங்களைக் கோரியிருந்தனர். இலங்கையெனும் நாட்டில் சிங்களவருக்கு எந்தளவு உரிமையிருக்கிறதோ, அதே உரிமை (அல்லது அதற்கும் மேலால்) தமக்குமிருக்கிறதெனக் கருதியிருந்தனர். இந்த ஒற்றுமையினையும், இலங்கைத் தேசிய காங்கிரஸினையும் குலைப்பதற்கான மனிங் தேசாதிபதியின் தந்திரமான முயற்சியின் வெளிப்பாடாக மனிங் தற்காலிக அரசியல் சீர்திருத்தம் உருவாக்கப்பட்டிருந்தது. இந்தச் சீர்திருத்தத்தின் வழி அதுவரைகாலமிருந்த இனவாரியிலான பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறைக்கு வந்த பின்னர்தான் தமிழ்த்தலைவர்கள் தாங்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினரென்ற விழிப்புணர்வை எய்தினரெனலாம். பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் பெரும்பான்மையினருக்கு அதிகளவிலான சட்டசபை அங்கத்துவம் கிடைக்க வாய்ப்பளித்திருந்ததுடன் தமிழர்களை முற்றுமுழுதாகப் புறக்கணித்திருந்தது. சேர்.பொன்.அருணாசலம் மிக வெளிப்படையாகவே இந்த அரசியல் சீர்திருத்தம் இலங்கையில் இனப்பிரிவினையைத் தூண்டுவதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். மேலும் சிங்களத் தலைவர்கள் வாக்குறுதியளித்திருந்த மேல்மாகாணத் தமிழருக்கான ஒரு அங்கத்துவம் பின்னர் நிராகரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்த விரிசலுடன் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உடைந்து, தமிழ்த்தலைவர்கள் வெளியேறினர்.

1921ல் ஏற்பட்ட இந்த முரண்பாட்டைச் சரிசெய்ய பிறகான காலங்களில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. டொனமூர் அரசியல் யாப்பு (1931), சோல்பரி அரசியல் யாப்பு (1947), பண்டா-செல்வா ஒப்பந்தம் (1965), மாவட்ட அபிவிருத்திச் சபைகள் (1981), இலங்கை

(10ம் பக்கம் பார்க்கவும்)

# மீண்டும் தொடங்கட்டும் மிடுக்கு!



அருண்
arun@vaikarai.com

போர் முடிந்துவிட்டது அமைதி திரும்பிவிட்டது என சிறிலங்கா அரசு அறிவித்திருக்கிறது. தாண்டிக் குளம் வரையும் யாழ்தேவி சென்று திரும்பினால் மட்டும் அமைதி திரும்பிவிடுமா என்ன? ஏ-9 பாதை திறந்து வாகனங்கள் போய்வந்தால் மட்டும் போய் விட்ட அமைதி திரும்பிடுமா என்ன? 20 வருடங்களின் பின்னர் தாண்டிக்குளம் வரையும் யாழ்தேவி சென்றதாகச் சொன்னாலும் கொழும்பிலுள்ள தமிழர்களின் மனது அந்த 20 வருடங்களின் பின்பு யாழ் தேவியிலும் வேகமாகத் துடிக்கத் தொடங்கியிருக்கிறதே! 20 வருடங்கள் வரையில் கொழும்புச் சிங்களவர்கள் எவருக்கோ(?) பயந்திருந்த உணர்வு இப்போது இல்லாது போனதால் ஒவ்வொரு சிங்களவரையும் காணும்போதும் தமிழர் மனம் பயப்படும்படியாக கொழும்பு நிலமை மாறியிருக்கிறது! தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு வாகனங்கள் போய்வருகின்றன. ஆனால் இப்பாதையின் இருமருங்கிலும் காணப்பட்ட பழைய பசுமையையும் வழமையையும் காணமுடியவில்லையே! போரே நடக்காததுபோல், மக்களே வாழாத இடம் போல் எல்லாமே நசித்துத் தரைமட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது எனப் பயணம் போய் வந்தோர் சொல்லுகின்றனர். இவை மீண்டும் பழைய நிலைக்கு வரத்தான் முடியுமா அல்லது வரத்தான் சிங்கள ஆட்சியாளர்கள் விடப் போகிறார்களா? அவை சிங்களக் குடியேற்றங்களாக மாறப்போகின்றன என்றே எதிர்வுகூறவேண்டியிருக்கிறது. விடுதலைப் புலிகளின் சொத்துகள் அரசுடமையாக ஆக்கப்பட ஆட்சியவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டாகிவிட்ட நிலையில் இதையன்றி வேறெதை நினைக்கமுடியும்? இதையெல்லாம் நினைத்துக்கூடப் பார்க்காத தமிழ் அரசியல்வாதிகள் எதையெதையோவெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இடையில் சனாதிபதித் தேர்தல் என்ற அம்புக்கு இரையாகி அவருடன் சேர்வதா இல்லை இவருடன் சேர்வதா என்று இழுபறிப்படுவதிலும், கூட்டங்கூடிக் தகராறுடன் பிரிவதிலுமே கரிசனமாக இருக்கிறார்கள். அவருடனோ இவருடனோ சேராது ஒற்றுமையாக ஒன்றிணைந்து தாமே தம்முள் ஒரு தமிழரை நியமிக்க முடியாத போக்கினம்கெட்ட தமிழர்களாக இருக்கிறார்களே இவர்கள்!

மாடுகளை தனித்தனியாகப் பிரித்து ஒவ்வொன்றையாய் கொன்று புசித்திட்ட சிங்கத்தின் கதையாக தமிழர் சிங்கத்தின் தந்திரத்திற்கு பலியான மாடுகளாய்ப் போயிருப்பது பரிதாபமாகவிருக்கிறது. ஒவ்வொரு தமிழ்த் தலைமையும் ஒவ்வொருவராக சிங்களக் கட்சியில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். இத்துணை அழிவுக்கும் வித்திட்ட இந்தியாவின் சைகைகளுக்குத் தலையாட்டும் பூம்பூம் மாடுகளாயும், மக்கள் நலனை விட தங்கள் தங்கள் நலன்களில் கரிசனமுள்ளவர்களாய் இவர்கள் ஆகிவிட்டது தமிழினத்தின் சாபக்கேடாகப் போய்விட்டது! தமிழருக்கு எதிராக சிங்கள அரசு எதைச் செய்தாலும் இவர்கள் குரலெழுப்பப் போவதில்லை என்பதுதான் மிகத் துயரமான உண்மை! விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டுவிட்டதாக சிறிலங்கா அதிபர் ராசபட்ச அறிவித்தபோது சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, கெல-உறுமய, யே.வீ.பி., சமவுடமைக் கட்சி என சகல சிங்களக் கட்சிகளும் ஒருமித்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்ததை தமிழர் நாங்கள் கண்டு கேட்ட பின்பும் எமக்கு சுரனை வராதது வேதனையானது! தமிழரை அழிக்க வேண்டும் என்று சிங்களவர் காட்டும் பேதமற்ற ஒற்றுமையை தமிழர் எமக்கு சுயநிர்ணய உரிமை கிடைக்கவேண்டுமென அடி மனதிலெனினும் நினைத்துக் கொண்டிருக்கும் தமிழர் நாம் ஒற்றுமையாகக் குரல் எழுப்பாதது வெட்கப்படவேண்டியது! சிங்களவர்கள் எமக்கு சமவுரிமை தரப்போவதுமில்லை எம்மை சக பிரசைகளாக மதிக்கப் போவதுமில்லை என்பது தமிழர் எல்லோருக்குமே தெரியும். இருந்தும் சிங்களத் தலைவர்களின் நினைப்புக்கு, செயலுக்கு உறுதுணையாக இருப்பதுபோல் நாங்கள் கூறுபட்டுப்போய் இருக்கிறோம். அதுமட்டுமல்ல அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதுந்தான் மிகவும் வேதனையானது. எம் கூறுகட்டி எமக்குள்ளே அடித்துக்கொண்டு, ஆளையாள் கொலைசெய்து, விரியமில்லதவன் பொது எதிரியின் வீரியமுள்ளள ஆள்காட்டியாகி மொத்தமாய் தோற்றுப் போனோம். இன்றல்ல எமக்குள்ளே கூறுகட்டி எமக்குள்ளே பகைத்துக்கொண்ட போதே நாம் தோற்க்கத்தொடங்கிவிட்டோம். முள்ளி வாய்க்காலில் கிடைத்த தோல்வி இன்னொருகட்டத் தோல்வி அவ்வளவே. தமிழர் எம் சிலரால் இன்னும் தோற்றுக் கொண்டிருக்கிறோம். அதுதான் நிர்வாணமான உண்மை! சுய விமர்சனம் ஆரோக்கியமானதுதான் ஆனால் சுயத்தைக் காட்டிக்கொடுப்பது அயோக்கியத்தனமானது. காலத்துக்குத் தகுந்ததைச் செய்வதைவிட்டு



போர் முடிந்துவிட்டது
அமைதி திரும்பிவிட்டது என
சிறிலங்கா அரசு அறிவித்திருக்கிறது.
தாண்டிக் குளம் வரையும்
யாழ் தேவி சென்று திரும்பினால் மட்டும்
அமைதி திரும்பிவிடுமா என்ன?
ஏ-9 பாதை திறந்து வாகனங்கள் போய்வந்தால்
மட்டும் போய் விட்ட அமைதி திரும்பிடுமா என்ன?

பல்லைக்குத்தி அவர்களுக்கு மணக்கக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

போர் முடிந்துவிட்தாக சிங்கள அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் சிறிலங்காவில் எப்போது போர் நடந்தது என்பதே என்றுமே கேள்வியாக இருக்கிறது. இரு நாடுகளுக்கிடையே அல்லது இரு குழுக்க்குக்கிடையே நடக்கும் சண்டைதான் போர். அப்போது ஒரு பகுதி மறு பகுதியைத் தாக்கும். அப்போது இரு பகுதியிலும் சண்டை நடக்கும். இரு பகுதியிலும் உயிர்களும் உடமைகளும் எதிரெதிர்த் தரப்பால் அழிக்கப்படும். சிறிலங்காவில் அப்படி இதுவரை எப்போதாவது நடந்ததா? தமிழ்ப் பகுதியில்தானே சகல அழிவுகளும்! அவ்வாறெனில் அது போரா? இல்லை! அது ஆக்கிரமிப்பு அல்லது இன அழிப்பு! தமிழர் இதுவரை செய்துகொண்டது தற்காப்பு அல்லது விடுதலைப் போரே! அதில் தோற்றுப் போனோம். ஒற்றுமை இல்லாததால் தோற்றுப்போனோம். இலட்சியம் ஒன்றிருக்க தலையாரி ஆசைக்கு ஆசைப்பட்டு ஆளுக்கு ஆள் பிணத்தை அடிப்பதில் காலங்கழித்துக் கொண்டிருப்பது வீரமானதுமல்ல விவேகமானதுமல்ல. இதன்மூலம் எங்கள் மக்களுக்கு எதிரான கூட்டத்திடம் துணையாகிப் போய் விடுகிறோம். இது முன்னும் நடந்தது. காலனித்தவ ஆட்சியாளர்கள் என்ன தம்தம் நாட்டிலிருந்து பெரும் படைகளைக் கொண்டு வந்தா போர் தொடுத்தார்கள்? கட்டளைத் தளபதிகள் மட்டுமே அவர்கள். காலாட் படைகலெல்லாம் அடிமைகளாக அவர்கள் விலைகொடுத்து வாங்கிய நாங்களாகதான் இருந்திருக்கிறோம்! நாங்கள்தான் அந்நியர் அடிமைகளாகி எம் மக்களையே கொன்று அந்நியர்களுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்திருக்கிறோம். இதுதான் இந்தியாவிலும் நடந்தது இந்தத் தந்திரத்தால்தான் சின்னஞ் சிறு நாடுகளான பிரித்தானியாவும், கொலந்தும், போத்துகல்லும் பென்னாம் பெரிய இந்தியாவையும் ஆபிரிக்காவையும் அடிமையாக்கியது! பல நாட்டுத் தொகுதிகள் கொண்டிருந்த பெரும் நிலப்பரப்பை ஒன்றிணைத்து பிரித்தானியர் இந்திய தேசமென ஆக்கிக்கொள்ளமுன் அங்கே குறுநில மன்னர்களின் ஆட்சி பெற்றுக்கொண்டிருந்திருப்பினும் மன்னர்கள் தமக்குள் ஒன்றுபட்டிருந்திருப்பின் அந்நியன் காலூன்றியிருக்கவே முடிந்திருக்காது. பரந்து விரிந்திருந்த பல்தேசத்துப் படைகள் வெறும் வணிகரிடமும் கடற்கொள்ளையரிடமும் போரில் தோற்றதற்கு தம்முள் இருந்த நாட்டுப் பற்றின்மையும், ஒற்றுமையின்மையும், அரச அதிருப்தியுந்தான் காரணமாக இருந்திருக்கிறது. அதேதான் இப்போதும் எம்முள்ளும் தொடர்வது வேதனையிலும் வேதனையானது! விடுதலைப் புலிகளை எதிர்த்தும், தமிழ் மக்களை எதிர்த்தும் நடந்த இன வழிபபுப் போரில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் அரசிடம் விலைபோன தமிழ்ப் படைகளும் பங்குபற்றியிருந்ததென்பதைக் கேள்வியுறும்போது மனம் நோகிறது! அது போதாதென்று தமிழ் அமைச்சர்கள் ராசபட்சவைப் புகழ்ந்து தமிழில் பேசினர். யூன் மாதம் மூன்றாந் திகதி காலிமுகத் திடலில் நடந்த வெற்றி விழாவில் அமைச்சர்களான தமிழர்கள் டக்ளஸ், முரளிதரன், ராவ்கக்கீம், ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துச் சொன்னதுதான் வேதனையானது. புலிகள் வெல்லப்பட்டுவிட்டார்கள் என்பதுதான் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதன்போது இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் உயிரிழந்திருந்தது, ஊனமுற்றது, அகதிகளாக அடைபட்டுக்கிடந்தது இவர்களுக்குத் தெரியாமலா போயிற்று? தமிழர்களின் அழிவில் பால்ச்சோறு கொடுத்துக் கொண்டாடிய துவேசச் சிங்களவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் என்ன? அதில் வேடிக்கையென்னவெனில் அமைச்சாராக்கப்பட்ட முரளிதரன் ‘பயங்கரவாதத்தை ஒழித்த மேன்மைமிகு சனாதிபதிக்கு வாழ்த்து’ என்று சொன்னதுதான். வாழ்க! அவர் பயங்கரவாதமென்று எதைச் சொன்னாரோ தன் அதே பழைய பயங்கரவாத வாழ்க்கையை மறந்துவிட்டதற்கு நல் வாழ்த்துகள்! தனது பழைய தலைவனின் உடலை அடையாளங் காட்டுவதற்காக முள்ளி வாய்க்காலுக்குச் சென்றபோது தன்னுடன் கூடித் திரிந்த சக(பழைய) போராளிகளின் உடல்களை, அவர்களின் உடற் துண்டங்களை, முன்பு பழகிக்கொண்ட மக்களின் உடல்களை, பச்சிளம் தமிழ்க் குழந்தைகளின் உடல்களைக் கடந்து செல்வதற்கு எத்தகைய மனத்துணிவு இருந்திருக்கவேண்டும். அதற்காகவும் அவருக்கு இன்னொரு வாழ்த்து.

சிங்கள அரசு தான் செய்திட்ட தமிழின அழிப்பை இதுவரை நான்குமுறை கொண்டாடிவிட்டது. ஒவ்வொன்றிலும் மகிந்த ராசபக்ச தமிழில் பேச முயன்றிருந்தார். சனாதிபதி தமிழில் பேசினால் மட்டும் தமிழருக்கு விடிவு கிடைத்திடுமா என்ன? அதில் அவர் சொன்ன விடயம் என்னவென்றால். நாம் எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்பது. அதில் அவர் சொல்லாது சொன்னது சேதி என்ன வென்றால். தமிழரும் சிங்களவரும் ஒரே தகப்பனின் மக்கள் அல்லர் என்பதுதான்! அடுத்து அவர் சொன்னது என்னவென்றால் சகல மக்களும் நாட்டின் சகல இடங்களிலும் சென்று வாழக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது! அதாவது தமிழர் பிரதேசங்களில் சிங்களவர் சென்று வாழ வேண்டும் என்பதே அவர் சொல்லாது சொன்ன சேதி! அதற்கு அங்கு கூடியிருந்த பல்லாயிர மக்களில் தமிழரதும் குறிப்பாக தமிழ் அமைச்சர்களினம் கரவொலிதான் அங்கீகாரம்! அதுதான் இலங்கை அரசின் அடுத்த நடவடிக்கை என்பது அடுத்தடுத்த வாரங்களில் புலனாகியது. முதலாவதாக மாதகலில் புத்த விகாரையைத் திறந்துவைக்க சாதிபதியின் பாரியாரும், மகனும் சென்றனர். விகாரையைச் சுற்றி இராணுவ முகாம். அதற்குள் பல்லாயிரம் இராணுமும் அவர்கள் குடும்பங்களும் குடியேறுவார்கள். அங்கு விரைவில் சிங்களப் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்க சனாதிபதி செல்லக்கூடும். கூடவே தமிழ் மந்திரியும் சென்று நாடா வெட்டி சோடா குடித்துத் திரும்பக்கூடும்.

(23ம் பக்கம் பார்க்கவும்)

# பெண் சமத்துவம் என்றால் என்ன?

பெண்களுக்கு சுதந்திரம் கூடி விட்டது என்று கூச்சலிடுவோர் ஒரு புறம், நாங்கள் பெண்கள் என்று அடையாளப்படுத்தப்பட வேண்டியோர் என வலோற்காரமான அடையாளத்தைத் தேடுவோர் மறு புறம் என இரு முனையிலும் உச்சத்துக்கு நிற்போரைப் பார்க்கும் போது பெண் சுதந்திரம் என்றால் என்ன என்ற கேள்வி எல்லோரின் மனதிலும் அடிக்கடி எழுந்து கொண்டுதானிருக்கிறது.

பெண் சமத்துவத்தில் அதிக அக்கறை கொண்டவரும் அவர்களுக்கான உரிமை, சுதந்திரம் பற்றி ஆரோக்கியமான செயற்பாடுகளைச் செய்து வருபவருமான இந்தியக் கவிஞர் மாலதி மைதிரியிடம் எது பெண் சுதந்திரம் என நீங்கள் கருதுகிறீர்கள் எனக் கேட்ட போது அது அந்தந்த பெண்களைப் பொறுத்த விடயம்இ ஒரு பெண் தான் சந்தோசமாக இருக்கிறேன் என உண்மையிலேயே நினைப்பாளாயின் அவளுக்கு சுதந்திரம் உண்டு எனலாம் என்றார்.

**ரஞ்சனி**
ranjani@vaikarai.com


அதைக் கேட்டபோது அது சரி என்பது போலத் தான் தோன்றியது. பின்னர் ஈழத்தில் புகழ் பெற்ற ஒரு எழுத்தாளரின் ஒரு சிறு கதையை வாசிக்க நேர்ந்த போது, பெண்கள் தங்களின் சந்தோசம் எனக் கருதுவது அவர்களின் வளர்ப்பு முறையுடன், அவர்களின் வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்பான விடயமா என்ற கேள்வி என் மனதினுள் எழுந்தது. கலாச்சாரம் என்பதற்கு பெண்கள் என்ன வரைவிலக்கணம் கொடுக்கிறார்கள் என்பதிலும் அவர்களின் சுற்றுச் சூழலிலும் அவர்களின் சுதந்திரமும் சந்தோஷமும் தங்கியுள்ளதா என்று கூட நினைக்கத் தோன்றியது.

அந்தச் சிறுகதையில் தனது கணவனிடம் வாங்கிய அடிகளினால் ஏற்பட்ட பெரிய தழும்பை தன் முகத்தில் தனது தாம்பத்தியத்தின் பரிசாக வைத்திருக்கும் ஒரு கதாபாத்திரம் தன் கணவன் தன்னுடன் இப்போது இல்லையே என்பதை எண்ணி மனம் வருந்துவதைப் பாரத்த இன்னொரு கதாபாத்திரம், இனித் தன் கணவன் என்ன செய்தாலும் தானும் சகித்துக் கொள்ளவேண்டும் என முடிவு எடுத்துக் கொள்கிறது. கதையில் இப்படியான பாத்திரங்களைக் உலவ விடுவதன் மூலம் ஆசிரியர் வாசகர்களுக்கு எதைச் சொல்ல வருகிறார் என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை.

அந்தக் கதையின் ஊடாக ஆண்கள் இப்படியான வன்முறைகளில் ஈடுபடுவது வழக்கமான வாழ்வியலின் கூறு எனச் சொல்கிறாரா அல்லது அப்படி வாழ்ந்தாலும் கணவனுடன் வாழ்வது, கணவன் அற்ற வாழ்வை விட உயர்ந்தது, பொருள் நிறைந்தது எனச் சொல்ல வருகிறாரா, இல்லை இப்படிக் கணவனால் துன்புறுத்தப்படுவதை ஏற்றுக்கொண்டு வாழும் சில பெண்கள் இந்த 21ம் நூற்றாண்டில் கூட இருப்பதை சமுதாயத்திற்கு காட்ட முயற்சிக்கின்றாரா?

பெண்களிடையே கூட பெண் சுதந்திரம், பெண் சமத்துவம் என்பன பற்றிய பார்வை மிகவும் பரந்த அளவில் வேறுபடுகிறது என்பதும் ஒரு உண்மைதான். அண்மையில் இங்கு நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் பேசிய ஒரு பெண் பேச்சாளரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு ஆண் அவரிடம் போய் “மிகவும் நன்றாகப் பேசினீர்கள், பேச்சில் உங்களின் அப்பாவின் சாயல் தெரிந்தது” எனப்பாராட்டுச் சொன்னார். ஆனால் அப்படி அவர் சொன்னது அந்தப் பெண்ணுக்கு பிடிக்கவில்லை. “ஏன் என்னை அப்பாவுடன் ஒப்பிட வேண்டும். பெண்ணை ஒரு ஆணின் அடையாளமாகப் பார்ப்பது ஆண் ஆதிக்கம்” என்றார். மகளில் அப்பாவின் சாயலைப் பார்ப்பது எப்படி ஆண் ஆதிக்கமாகும் என்பது எனக்குப் புரியவில்லை.

சமூக சமத்துவம், பெண் சுதந்திரம் போன்றன மதிக்கப்படும் ஒரு நாடான கனடாவில் கூட இளைய தலைமுறை ஆண்களில் பலர் புத்திசாலிப் பெண்களைத் திருமணம் செய்யத் தயங்குகிறார்கள். தமிழ் ஆண்கள் மட்டுமன்றி மற்றைய இன ஆண்கள் கூட புத்திக்கூர்மை கூடிய, தமக்கென அபிப்பிராயம் கொண்ட, தீர்க்க சிந்தனை உடைய பெண்களுடன் சினேகிதமாகப் பழக மட்டும் தான் விரும்புகிறார்கள். பெண்களின் சுதந்திர மனப்பான்மை, அறிவுத்திறன் என்பன ஏதோ ஒரு வகையில் ஆண்களைப் பயமுறுத்துகிறது அல்லது அவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையைக் கொடுக்கிறது. அதனால் ஒரு புத்திசாலிப் பெண்ணை மனைவியாக்க ஆணுக்கு ஒரு வகைத் துணிச்சல் தேவையாக இருக்கிறது.



**வெளிப்படையாக நியாயத்தை எடுத்துச் சொல்லும் அல்லது துணிந்து ஒரு சபையில் தன் கருத்தைத் தெரிவிக்கும் தமிழ்ப் பெண் பற்றிய எங்களுடைய சமுதாயத்தின் பார்வை எப்போதுமே விசித்திரமானதாகத் தானிருக்கிறது.**

வெளிப்படையாக நியாயத்தை எடுத்துச் சொல்லும் அல்லது துணிந்து ஒரு சபையில் தன் கருத்தைத் தெரிவிக்கும் தமிழ்ப் பெண் பற்றிய எங்களுடைய சமுதாயத்தின் பார்வை எப்போதுமே விசித்திரமானதாகத் தானிருக்கிறது. அவள் திருமணமானவளாக இருந்தால், ஐயோ பாவம் அவள் புருஷன் என்ற கேலி தான் அவர்களின் பார்வையில் இருக்கும். விவாகரத்துப் பெற்ற பெண் ஆனால் சொல்லவே தேவையில்லை. அந்தக் குடும்பத்தின் நான்கு சுவர்களுக்குள் என்ன பிரச்சனை நடந்ததோ என யோசியாமல் அவளால் தான் குடும்பம் உடைந்திருக்கிறது எனக் கூசாமல் முடிவெடுத்து விடுவார்கள். கன்னியாக இருந்தால் அவளுக்கு கலியாணம் பேசிச் செய்வது என்பது ஒரு பெரிய சலன்ஷ் ஆகத் தானிருக்கும். இப்படிப் பார்க்கையில் பாரதி கண்ட சுதந்திரப் பெண்ணை நாங்கள் காண இன்னும் பலவருடக் காத்திருப்புத் தேவையா என அங்கலாய்க்கவே தோன்றுகிறது இல்லையா?

வெறுமன பெண் வேலைக்குப் போவதும் கார் ஓடுவதும் தான் சுதந்திரத்தின் அடையாளங்கள் அல்ல. வேலைக்கு போய் வந்து பின் வீட்டு வேலை முழுவதையும் தானே பார்த்து கணவனினதோ அல்லது இன்னொரு ஆணினதோ சொல் கேட்டு அவனுக்கு அடங்கித் தான் வாழவேண்டும் என்றால், அவள் தனிய தனக்கு விருப்பமான ஒரு இடத்துக்குப் போக முடியாது, தான் விரும்பியதைச் செய்யமுடியாது என்றால் பெண் சுதந்திரம் எங்கிருக்கிறது? பெண் சமத்துவம் அந்தக் குடும்பத்தில் இருக்கிறது எனச் சொல்லமுடியுமா?

அதே வேளையில் பிள்ளைகளைக் கவனியாமல் எனக்குச் சுதந்திரம் இருக்கிறது என்று தான் தோன்றித்தனமாக நடப்பதோ கணவனுடன் ஏட்டிக்குப் போட்டியாக இருப்பதோ பெண் சுதந்திரம் அல்ல. சில ஆண்களும் கூட தமது சுதந்திரத்தைத் தொலைத்துப் போட்டு சமூகத்துக்கு அஞ்சி பெயருக்கு மட்டும் குடும்பமாக வாழும் சம்பவங்களும் இங்கு இருக்கத் தான் செய்கின்றன.

எனவே சுருக்கமாகச் சொன்னால் யாரையும் எந்த விதத்திலும் பாதிக்காத வகையில் பெண் தான் தானாக இருக்க முடிவது தான் அவளுடைய சுதந்திரம் ஆகும். ஒரு பெண் தான், தானாக இருக்க முடியாமல் அவ ளுக்கு ஏதாவது தடை இருந்தால் அங்கு பெண் சுதந்திரமோ, பெண் சமத்துவமோ இல்லை எனலாம். ■

## வீழ்ந்து...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய ஒப்பந்தம் மற்றும் அதன் வழிவந்த 13வது திருத்தச் சட்டம் (1987), பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் தீர்வு யோசனைகள் (1997), ஐக்கியதேசிய முன்னணியின் சமாதான உடன்படிக்கை (2002) போன்ற முயற்சிகள் தோல்வியுற்ற நிலையில் போர் தீவிரமடைந்து இன்று இத்தனை அழிவுகளுக்கு மத்தியில் முடிவுக்கு வந்திருக்கிறது. இலங்கை ஆய்வாளரொருவர் கூறியது போல, விடுதலைப் புலிகள் அமைப்பானது இந்த இனப்பிரச்சனையின் ஒரு “விளைவே”யொழிய, அவர்கள் இதன் காரணகர்த்தா அல்ல. நடந்துமுடிந்த அழிவுகளனைத்தும் இந்த இனமுரண்பாட்டினை ஒரு உறைநிலைக்குக் கொண்டு சென்றிருக்கின்றனவே தவிர, தீர்வினை எட்டவில்லை. அதனை எட்ட நாம் கடக்க வேண்டிய பாதை இன்னும் தொலைதூரத்திலிருக்கிறது.

வடகிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. திருகோணமலை சார்ந்த பகுதிகளில் அவை ஏற்கனவே உறுதியாக நிலைநிறுத்தப் பட்டுவிட்டன. தென்னிலங்கைச் சிறைகளிலிருந்து சிங்களக் கைதிகள் விடுவிக்கப்பட்டு புனருத்தாரண வேலைகளுக்காக வடகிழக்கில் குடியமர்த்தப்பட இருக்கிறார்கள். இலங்கையில் நிலவிவரும் விகிதாசார முறையிலான தேர்தலினடிப்படையில் இந்தக் குடியேற்றங்களுக்குப் பின்னர், சனநாயக முறையில் தமிழர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடியுமா என்பது சந்தேகமே. சனநாயக அரசியல் முறையிலிருக்கும் விரிசல்களைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கும் இக்குடியேற்றங்கள் இனிமேலான இலங்கையசியலில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை வினைத்திறனான முறையில் மட்டுப்படுத்தவே வாய்ப்பளிக்கின்றன. இந்த சனநாயகம் யாருடைய சனநாயகமென்ற கேள்வியெழுவதைத் தவிர்க்க முடியவில்லை. மீண்டுமொருமுறை தனிச்சிங்களச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட மாட்டாதென்பதற்கான எந்த உத்தரவாதங்களுமில்லை. 60களில், 70களில், 80களில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மீண்டும் நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லாமலில்லை. இப்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதே அதுவன்றி வேறென்ன என்று யாரேனும் கேள்வியெழுப்பக்கூடும்.. இவையெல்லாவற்றுக்கும் மத்தியில் அங்கு வாழும் மக்களின் எதிர்காலம்... உங்களைப் போலவே என்னிடமும் எந்தவிதப் பதில்களுமில்லை.

பிற்குறிப்பு:
சமீபத்தில் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக பேராசிரியர் மௌனகுருவின் கூத்து பற்றிய ஒளிப்பதிவொன்றைக் காணநேர்ந்தது. இலங்கையின் மரபார்ந்த தமிழ் கூத்துவடிவத்துக்கும், சிங்களக் கூத்து வடிவத்துக்குமிடையிலான ஒற்றுமைகளைக் கண்டறியும் workshop னது ஒளிப்பதிவது. மிகப்பிரபலமான சிங்கள தமிழ்க் கலைஞர்கள் அதில் பங்குபற்றியிருந்தனர். தமிழ்க்கலைஞர்கள் தமது புகழ்பெற்ற இராவணேசன் கூத்தையும், சிங்களக் கலைஞர்கள் சிங்கபாகு கூத்தையும் ஆடிக்காட்ட மாற்றி மாற்றி இரு தரப்பினரும் பின்னணி இசை வழங்கிய மிக அருமையான நிகழ்வது. இனிமேல் இலங்கையில் என்றாவதொருநாள் இரு இனத்தினரும் சுமுகமான வாழ்வொன்றைக் கொண்டுநடத்துவது சாத்தியமென்றால், அது இத்தகைய கலைஞர்களின் கையில்தான் தங்கியிருக்கிறதென, அந்த ஒளிப்பதிவைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது தோன்றியது. பேராசிரியர் மௌனகுரு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் “இன்னியம்” என்ற (உடுக்கு, பறைகளுடனான) தமிழ் வாத்தியக் குழுவொன்றை உருவாக்கி ஒவ்வொரு ஆண்டும் பட்ட மளிப்பு விழாவின்போது இசைக்கச் செய்து வருவது மேலதிகத் தகவல். அவை சாதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாத்தியங்களென்ப தால் ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பு நிலவியிருந்தாலும் தங்களது விடாமுயற்சி அதை சாத்தியப்படுத்தியிருந்ததென அண்மையில் கனடாவில் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் கூறியிருந்தார். கூத்தை ஒரு பல்கலைக்கழகப் பாடநெறியாக்கியதும் அவரின் முயற்சியே. ■

# புத்தரும், அவனும் - 01

நீண்டநாள் காணாமற் போயிருந்த புத்தரை இன்று மீண்டும் அவன் தனது கணனி மேசைக்கடியில் ஒளிந்திருப்பதைக் கண்டான். பனிக்காலம் தொடங்கி அறையெல்லாம் சில்லிட்டுக்கொண்டிருக்க புத்தர் நடுநடுங்கியபடி இருந்தார். காடு, மலை, மழை எல்லாவற்றையும் புறக்கணித்து நெடுந்தூரம் அலைந்து திரியும் புத்தர் இப்படிப் பயந்து ஒடுங்கியபடி அவனது அறைக்குள் இருந்ததற்கு இந்தப் பனிக்காலம் மட்டும் காரணமாயிருக்காது என்பது தெளிவாகப் புரிந்தது.

புத்தரை இறுதியாய்ச் சந்தித்த பின்பான இடைவெளியில், நிகழ்ந்த எத்தனையோ விடயங்களை அவரிடம் பகிர்வதற்கு தன்னிடம் இருக்கின்றது என்ற எண்ணம் அவனுக்குள் நிறைந்து வழிய ஆரம்பித்தது. எனினும் வழமைபோல அவனது வீட்டுக்கு வருகைதருபவரைப் போல் இன்று புத்தர் இருக்கவில்லை.... அது ஏன் என்ற கேள்வி அவனுக்குள் சஞ்சலத்தை உருவாக்கத் தொடங்கியிருந்தது. வருகின்ற வழியில் எங்கையேயாவது ஆற்றில் அவனுக்காய் வெள்ளைத் தாமரைகளை ஆய்ந்து வர புத்தர் ஒருபோதும் மறப்பதேயில்லை. இன்றைய நாளில் அவனுக்காய் எந்தப் பூவையும் கொண்டுவரவில்லை என்பதோடு அவரது கரங்கள் சிவப்பு நிறமாய்க் கண்டிப்போய் இருந்ததைப் பார்க்கும்போது மனதிற்குள் சிறுவலி மின்னலாய் வெட்டிவிட்டுப்போயிருந்தது.

**இளங்கோ**
elanko@vaikarai.com

அவனது சகோதரர்களின் பிள்ளைகள் ஓடிப்பிடித்து விளையாடும்போது மேசைக்கடியில் ஒளிந்திருப்பதுபோல புத்தரும் கண்ணை மூடிக்கொண்டு இருந்தது அவனுக்கு ஒருமாதிரி இருந்தது (கண்ணை மூடினால் எவரும் கண்டுபிடிக்காமாட்டார்கள் என்பது குழந்தைகளின் மனத்துணிபு). சிறியவர்களோடு என்றால், அவர்கள் ஒளிந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தாலும், காணாதது மாதிரி நடிக்கமுடியும், ஆனால் புத்தரோடு அப்படியெல்லாம் விளையாடமுடியாது அல்லவா? இந்தத் தருணத்தை எப்படி எதிர்கொள்வது என்ற ஒரு திணறல் பனிக்காலத்தில் உரிய ஆடைகளை அணியாது வெளியே போனது போன்ற நிலைக்கு நிகராய் அவனுக்குள் உருவாககத் தொடங்கிவிட்டது

சாதாரணமாய் சந்திக்கும் புத்தர் என்றால் இப்போது கிண்ணங்களில் வைனையோ அல்லது கிழக்காசியாவிலிருந்து பிரத்தியேகமாக் புத்தர் தனது காவித்துணியில் மடித்துக் கொண்டுவரும் தேயிலையையோ வைத்து.... உருவாக்கிய தேநீரையோ அருந்திக்கொண்டு உரையாடிக்கொண்டிருப்பார்கள். திரவங்கள் நிறைந்த கிண்ணங்கள் காலியாக ஆக மனதும் விருப்பு வெறுப்பு மற்ற ஒரு வெற்றிடமாய் மாறிக்கொள்ளத் தொடங்கும். பிறகு எல்லாமே புதிதாய்த் தோன்றுவதுமாதிரியும் எதையும் எதிர்கொள்ளலாம் என்ற தெம்பும் அந்தக்கணங்களில் பொங்கித் ததும்பத் தொடங்கியிருக்கும். ஆனால் இப்போது புத்தரின் நிலைமையைப் பார்த்தால் அதற்கான சாத்தியமே எதுவும் இல்லாதது போலத் தோன்றியது..

புத்தர் நிறைய விடயங்களை கற்பிக்கின்றோம் என்ற பிரக்ஞையில்லாது அவனுக்குள் ஊட்டியிருக்கின்றார். அவன் கண்ட கனவுகளைக் கூட சில இடங்களில் நிஜமாக்கியிருக்கின்றார். ஒரு மழைநாளில் வந்த புத்தரோடு உரையாடிக்கொண்டிருந்தபோது முளைத்த, கணவனால் கைவிடப்பட்ட பெண்ணையும் அவளின் குழந்தையும் நிஜமாகவே -3 வருடங்களின் பின் - அவன் தன் வாழ்வில் சந்திததபோது அவனுக்கு மிகவும் வியப்பாயிருந்தது. இன்று அவளும் அவள் குழந்தையும் துயர் கடந்த காலங்களைக் கடந்து ஒரு இளவேனிலுக்காய்க் காத்திருக்கின்றார்கள் என்பதைப்பற்றியும் புத்தருடன் பகிரவேண்டும் என நீண்டநாட்களாய் நினைத்துக்கொண்டிருந்தான்.

*புத்தருடன் ஓர் இரவு*

மழைத்தூறல் ஓய்ந்து
ஈரம் இரவை
சிறகுகளால் கோதிக்கொண்டிருந்தபோது
வீட்டுக்கு வந்திருந்தார்
புத்தர்
Santa மட்டுமே
புகைக்கூண்டுக்குள்ளால் இறங்குவார்
என்றெண்ணிய
என் நான்கு வயது மகளுக்கு
கோடையில்
சாம்பர் பூத்திருந்த அடுப்பிலிருந்து
தூசி தட்டியபடி
புத்தர் வந்திருந்தது
வியப்பாயிருந்தது
நான் அருந்துவதற்கு
மிதமாய் கலந்துவைத்திருந்த
வோட்காவை பகிர்ந்தபோது
ஒவ்வொரு மிடறும்
தாகத்திற்கு இதமாய் இருக்கிறதென்றார்

அரசியல் சினிமா
ஜென் செக்ஸ் என
ஒரு பட்டத்தைப்போல
திசையில்லாது உரையாடல்
  அசைந்துகொண்டிருக்கையில்
புத்தர் திடீரென வினாவினார்
கடந்துபோன காலத்தில்
நீ இழைத்த தவறுகளுக்கு
வருத்தம் கூற விரும்புகின்றாயாயென

நான்
பாவங்கள் விளைவித்த
மனிதர்கள் நிரையாக நிற்க
வெட்கிக் குனிந்தபடி
நடுங்கும் குரலில்
கோருகின்றேன் மன்னிப்பு

இப்போது
மனது
மேகமாய் மிதந்து
குதூகலம் மழைநீராய் திரண்டபோது
DJ drop the s*** என்றலறியபடி

ராப் பாடலுக்கு
  ஆடத்தொடங்குகின்றோம்
நானும் புத்தரும்

நேரம் நள்ளிரவைக்கடந்தபோது
வெறுமையான மதுக்கோப்பைகளையும்
சில நட்சத்திரங்களையும்
துணைக்கு விட்டுவிட்டு
புத்தரும்
எனது நான்குவயது மகளும்
காணாமற்போயிருந்தனர்.

2.

மதியவுணவு
இடைவெளிகளின்போதுதான்
முகையவிழ்த்திருந்தது
  அவளுடனான நட்பு

அவளையும் இரண்டுவயதுக்
  குழந்தையையும்
சில மாதங்களுக்கு முன் கைவிட்டு
இன்னொரு பெண்ணுடன்
தன் துணைவன்
வாழத்தொடங்கியிருக்கின்றான்
என்றாள் விழிநீரைத்துடைத்தபடி

எனக்கு வாய்த்ததைப் போல
புத்தர்
அவள் வீடு தேடி
ஓர் இரவில் போகக்கூடும்
அல்லது
அவளிடமும் அவள் குழந்தையிடமும்
நான்
புத்தரையும்
காணாமற்போன எனது நான்கு
  வயதுக்குழந்தையும்
என்றேனும் ஒருநாள்
அடையாளம் காணவும்கூடும்.

*-ஆவணி 25/05*



**மழைத்தூறல் ஓய்ந்து**
**ஈரம் இரவை**
**சிறகுகளால்**
**கோதிக்கொண்டிருந்தபோது**
**வீட்டுக்கு வந்திருந்தார்**
**புத்தர்**

## *மார்க்ஸியர்..*

*5ம் பக்கத் தொடர்ச்சி)*

களுக்குமிடையே வித்தியாசங்கள் உண்டு. அந்த வகையில் இலங்கையில் தமிழ்த் தேசியம் தன் தோற்றத்துக்கான மூலகாரணிகளை விசேடமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசியத்தின் தோற்றத்தை பேரினவாதத்தின் அடக்குமுறைக்கெதிரான விழிப்புணர்வாகக் கொள்ளப்பட முடியமா? முடியுமென்றுதான் தெரிகிறது.

இலங்கைத் தேசியம் உருவாவதன் முன்னம், இலங்கை இன்னும் பிரித்தானியாவின் கீழ் இருந்துகொண்டிருந்த போதிலேயே, சிங்கள இனத்துவத் தேசியம் விழிப்புணர்வு பெற்றுவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காலனித்துவ ஆட்சிக்கெதிரான கலக மனநிலை இலங்கையில் முகிழ்த்ததாகக் கொண்டால் அதில் முக்கியமாக இருக்கக்கூடியவர் அநகாரிக தர்மபால. அவர் 1920களில் கூறினார் பிரிட்டிஷாரின் கல்விமுறைபற்றி, ‘A bastard education without a solid foundation’ என. அவர் குறிப்பிட்டது சிங்கள இனத்து இளைஞர்களைக் கருத்திற்கொண்டதே என்பதை அவரது மற்றைய கட்டுரைகளை நோக்குகையில் தெரியவரும். பிரிட்டிஷ் கல்விமுறையானது a generation of spiritual bastard டையும் interlectual paraiahs ஐயும் உருவாக்குமென ஆனந்த குமாரசாமி 1946 இல் கூறுவதற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அநகாரிக தர்மபால இவ்வாறு கூறியிருந்தார். அன்றிலிருந்து தொடர்ந் தேர்ச்சியாக வளர்ச்சி பெற்றதே சிங்களத் தேசியம் அல்லது சிங்கள இனத்துவவாதம்.

ஆயினும் இந்த இனத்துவத் தேசியம் சமூக உயர் வகுப்பாரிடையே தமிழ்-சிங்கள இன பேதமின்றி ஒன்றிணைவதை ஆரம்பத்தில் தடுக்கவில்லையென்பதையும், சிங்களர் மத்தியிலிருந்த கரவா, கொவி சாதி முறைமை பற்றியும், அதில் அதிகாரத்துக்கான யுத்தம் நடந்ததுபற்றியும் தேசபக்தன் கட்டுரையில் சரியாகவே சொல்லிச் செல்கிறார். தமிழ்த் தேசியம் உருவான வரலாறும் சரியாகவே சொல்லப்பட்டிருக்கிறது. சபாநாவலன் இந்தத் தமிழ்த் தேசிய விழிப்பை ஒப்புக்கொள்ளக் காட்டிய சுணக்கம் தேசபக்தனை இவ்வளவு விரிவாக இந்த விஷயத்தை அணுகவைத்ததா தெரியவில்லை.

ஆனால் ஒட்டுமொத்தமாக ஒரு பிரச்சனை இருக்கவே செய்கிறது. அதுவே இனி வரும் காலத்தில் முக்கியமானதும் முதன்மையானதும் ஆன பிரச்னையாக இருக்கப் போகிறது. அதுதான், ஒருவர் இடதுசாரியாகவும் அதேவேளை தமிழ்த் தேசியவாதியாகவும் இருப்பது எப்படி என்ற கேள்வி. இந்தியாவில் இந்துத்துவ அரசியல். இலங்கையில் புத்தத்துவ அரசியல். இந்துத்துவ அரசியலை வேதங்கள், ஆகமங்கள், வழிவழியான நியமங்கள் வரையறுக்கின்றன. புத்தத்துவ அரசியலை பௌத்த மடங்கள் வரையறுக்கின்றன. இதில் முளைப்பது சிங்களத் தேசியம். அதை எதிர்க்கிறது தமிழ்த் தேசியம். ஓர் இடதுசாரி இங்கே எந்த இடத்தில் வருகிறான்? ஒடுக்கப்பட்ட இனத்தின் சார்பாகவா, இல்லையா?

நிறுவனமயப்பட்ட கட்சி சார்பான இடதுசாரிகளிடமிருந்து இதற்கான பதில் இலேசுவில் கிடைத்துவிடாது. ஆனால் சிந்தனை முறைமையால் ஒரு மார்க்ஸியவாதியாக இருப்பவன் தனது பதிலைத் தயங்காது சொல்லமுடியும். அது தமிழ்த் தேசியம் குறித்து சார்பான நிலைப்பாட்டையே கொண்டிருக்க வாய்ப்பிருக்கிறது.

*(கடந்த டிசம்பர் 13 ஞாயிற்றுக் கிழமை ஸ்கார்பரோ சிவிக் சென்ரரில் நடைபெற்ற ‘வியூகம்’ இதழ் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய உரையின் கட்டுரை வடிவம்)*

# Under the Bombs



ரதன்
rathan@vaikarai.com

பாலஸ்தீனிய-இஸ்ரேல் போர் பாலஸ்தீனியத்தை இரு பகுதிகளாக பிரித்துள்ளது. காசா, வெஸ்ட் பாங் என்ற இந்த இரு பகுதிகளும் கலாச்சார மாற்றங்களையும் கொண்டுள்ளன. கமாசின் கட்டுப்பாட்டில் உள்ள காசா தீவிர இஸ்லாமிய கலாச்சாரத்தை கடைப்பிடிக்க மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். குண்டுகள் இவர்களின் விளையாட்டங்கங்கள் உட்பட்ட பலவற்றை அழித்துவிட்டது. கமாஸ் திரை அரங்குகளை மூடிவிட்டது. இசையை அங்கு அரிதாகவே கேட்கலாம். இஸ்ரேல் குழந்தைகள் விளையாட்டு பொருட்களை தடை செய்துவிட்டது. கடத்தலில் வரும் விளையாட்டு பொருட்களே குழந்தைகளிடம் உள்ளது. குண்டுகள் குழந்தைகளை கொல்கின்றன. தீவிரவாதிகள் பிள்ளை பிறப்பை அதிகரிக்க உற்சாகப்படுத்துகின்றனர். உலகிலேயே அதிக பிள்ளை பிறக்கும் பிரதேசம் காசாவாகும். இங்கு சராசரியாக 5.1 பிள்ளைகள் ஒரு பெற்றோருக்கு பிறக்கின்றன. பெரும்பாலான மக்கள் வெளி உலகத்தை அறியாதவர்கள். 70 வீதமானேரின் மாத வருமானம் வெறும் ஒரு டொலருக்கு குறைவானவையே. உலகின் முதல் தோன்றிய குடியிருப்புக்களில் காசாவும் ஒன்று கி.மு 3000ம் ஆண்டளவில் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

2006 கோடை காலம் இஸ்ரேலிய துருப்புக்கள், லெபான் மீது தொடர்ச்சியாக 34 நாட்கள் குண்டுகளை வீசித் தள்ளின. இந்த போருக்கான ஆரம்பம் ஹிஸ்புல்லா படைகளால் என கூறப்படுகின்றது. யூலை 12ம் நாள் இரண்டு இஸ்ரேலிய படை வீரர்களை கைப்பற்றியமையே காரணம் என இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் இதற்கு முன்பாக ஹமாஸ் படைகள், இஸ்ரேலிய இராணுவ அதிகாரி Gilad Shalitஐ கைப்பற்றி, பல ஆயிரம் ஹமாஸ் கைதிகளை விடுதலை செய்யக் கோரியது. இதன் தொடர்ச்சியே ஹிஸ்புல்லாவின் நடவடிக்கை. விளைவு இஸ்ரேல் வழமை போல் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டு மழை பொழிந்தது. இதற்கு பதிலளித்த ஹிஸ்புல்லா படைகள் C-802 Silkworm missile மூலம் இஸ்ரேலிய கப்பலை மூழ்கடித்தது. இறுதியில் ஒரு மில்லியன் அரபு மக்கள் அகதிகளாயினர். பல ஆயிரம் அரேபியர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இந்த போர் உச்சத்தில் இருந்த ஒரு நாள் பெய்ருத் வாடகை கார் நிலையம் பரபரப்புடன் இயங்கியது. தெற்கு லெபானனை நோக்கி குண்டு மழைகள் பொழிந்த வண்ணமிருந்தன. புல கட்டிடங்கள் வீழ்வதையும் பெரும் புகை மண்டலம் கிளம்பிக் கொண்டிருந்தது. அமெரிக்க - ஈராக் போரின் போது இக் காட்சிகளை தொலைக் காட்சியில் பார்த்திருப்பீர்கள். மக்கள் திசை கெட்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். வன்னி இறுதிப் போரை நினைவு படுத்தும் காட்சிகள். குழந்தைகள் பெற்றோரை தேடிக் கொண்டிருந்தன. Zeina (Nada Abou Farhat) வாடகை கார் ஒன்றை தேடிக் கொண்டிருந்தார். பலர் தெற்கு லெபனானுக்கு செல்ல மறுத்து விட்டனர். அனைவரும் டமாஸ்கஸ் வரை செல்லத்தான் விரும்பினர். இறுதியாக ரொனி இதற்கு உடன்படுகின்றார். சினா முதலிலேயே கறாராக "எவ்வளவு காசு" எனக் கேட்கின்றார். 300க்கு உடன் படுகின்றனர். முதலில் 150ம், இறங்கும் பொழுது மிகுதி 150ம் என தீர்மானமாகின்றது. சினா ஓர் இளம் பெண். சுமார் 35 வயது மதிக்கத்தக்கவர். வசீகரமானவர். வழமையான அரேபிய பெண்களைப் போலல்லாது நாகரீகமாக உள்ளார். தலையைச் சுற்றி துண்டு அணியவில்லை. ரொனிக்கு ஆரம்பம் முதலே சினா மீது ஒரு கண்.

இவர்கள் மிகவும் கடினமான பாதையில் பயணிக்கின்றனர். இடையில் ரொனி மீண்டும், மீண்டும் கேட்ட பின்னர், சினா தான் தனது மகளையும், சகோதரியையும் தேடிச் செல்வதாக கூறுகின்றாள். ரொனிக்கு வாடகைக் கார் ஓட்டுவதை விட, பகுதி நேரமாக அகதிகளுக்கு மருந்துகள் விற்பனையும் செய்கின்றார். ரொனி, சினாவை முதல் ஒரு முகாமில் விட்டு விட்டு தனது பகுதி நேர மருந்துகள் வாங்க சென்று விடுகின்றார். சினாவிற்கும், கணவனுக்கும் அண்மையில் பிரிந்து விட்டனர். மகன் தங்களது சண்டைகளால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக சகோதரி மகாவுடன் அனுப்பிவிட்டு டுபாய் சென்று விடுகின்றார். போரின் போது தெற்கு லெபனான் மிகவும் பாதிக்கப்பட்டதை அறிந்தே இங்கு வந்துள்ளார்.



**"இது எனது போரல்ல, உனதுமல்ல".**

இவர்களது தேடும் படலம் தொடர்கின்றது. இறுதியாக ஒரு உடைந்த கட்டிடத்தின் முன்னால், அங்குள்ளஎவர்களால் சினாவின் சகோதரி மகா குண்டு வீச்சில் இறந்தது உறுதிப்படுத்தப்படுகின்றது. மகன் கரீம் உயிருடன் இருப்பது உறுதியாகின்றது. பிரென்ச் ஊடகவியலாளர்கள் கூட்டிச் சென்றதாக கூறுகின்றனர்.

மகாவின் மரணம் சினாவை மிகவும் பாதிக்கின்றது. போரை நோக்கி சினா எழுப்பும் கேள்விகள் நியாயமானவை. அன்றிரவு அங்குள்ள விடுதியில் தங்குகின்றனர். இரவு மகாவை நினைத்து அழுகின்றார். மகாவின் உடலைக் கூட சினா காணவில்லை. சினாவின் துயரம் வார்த்தைகளாக வெடிக்கின்றது.

"Let them bury her themselves"

"They didn't ask her opinion nor mine either, even for this war"

"No…it is not my war…..it is not yours"

இவை மிகவும் முக்கியமானவை. இந்தப் போரைப்பற்றி எங்களிடம் அபிப்பிராயம் கேட்கவில்லை. இறந்தவர்களிடமும் கேட்கவில்லை. நாங்கள் போரில் யார்? இறக்கப்படுபவர்கள். எங்களது எண்ணிக்கையில் தான் உங்களது அரசியல் உள்ளது. சினாவின் மற்றொரு கேள்வி மிகவும் உக்கிரமானது "இது எனது போரல்ல" உனதுமல்ல". இந்த உனது என்பது பலரை நோக்கி வீசப்படுகின்றது. குண்டுகளை வீசும் இராணுவ வீரர்களுக்கும் இது பொருந்தும். போரை காவிச் செல்பவர்கள் இந்த இறந்தவர்கள், இராணுவ வீரர்கள், காயமடைந்தோர், அகதிகள்.

போரை நடாத்துவோர் பெரும் அறைக்குள் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுபவர்கள்.

இறுதியாக கேட்கின்றார் "Do we have right to live"

"நாங்கள் உயிர் வாழ்வதற்கு உரிமையுண்டா?" இது உலகெங்கும் போரால் பாதிக்கப்படும் மக்களின் குரலாக வெளிப்படுகின்றது. சினா ஒரு அறைக்குள் அழுது கொண்டிருக்கும் பொழுது மற்ற அறையில் ரொனி விடுதி வரவேற்பாளருடன் உறவு கொண்டிருக்கின்றார். இது தான் மனித இயல்பா? சினாவின் பெரும் அலறும் சத்தத்தைக் கேட்டு ரொனி மற்ற அறைக்கு உறவை இடையில் விட்டு விட்டு ஓடிச் செல்கின்றார்.

மறு நாள் இவர்களது பயணம் தொடர்கின்றது. இப்பொழுது சினா வழமையான அரேபிய பெண்களைப் போல் முழு நீள உடையணிந்து முக்காடிட்டு காணப்படுகின்றார். வண்டிக்கு பெற்றோல் அடிக்க ஒரு பெற்றோல் நிலையத்திற்கு செல்கின்றனர். இது குண்டு வீச்சால் முற்றாக சேதமடைந்துள்ளது. நிலைய முதலாளி, தனது மகன் வெளி நாட்டில் வேலை பார்க்கின்றார். அவர் அனுப்பும் பணம் மூலம் நிலையத்தை புதுப்பிக்கப் போவதாக கூறுகின்றார். சினாவின் பெருமூச்சில் இயக்குனரின் தொனி வெளிப்படுகின்றது. உடைந்த கட்டிடத்தை புதுப்பிக்கலாம், அழிந்த நகரத்தை உருவாக்கலாம், வீடுகளை கட்டலாம். இறந்த உயிர்களை புதுப்பிக்கலாமா? சினாவின் சகோதரி மகா திருப்பிக் கிடைப்பாரா?

பல முகாம்கள் ஏறி இறங்கி ஒரு வாறு சினாவின் மகன் கரீம் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து விடுகின்றனர். மற்றொரு நகரத்தில் உள்ள கிறிஸ்தவ விடுதியில் கரீம் உள்ளார். கரீமுடன் சினா கைத்தொலைபேசி மூலம் கதைக்கின்றார். கரீம் எதுவுமே கூறவில்லை. அந்த நகரத்தை நோக்கிச் செல்லும் போது இருண்டு விடுகின்றது. ரொனியின் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்குகின்றனர். அந்த நண்பர் இஸ்ரேலில் சென்று வேலை செய்ய விரும்புகின்றார். அவருடன் ரொனி சண்டை பிடிக்கின்றார். எதிரியின் வீட்டில் சென்று வேலை செய்வதா? ஏன. அங்குள்ள மற்றொரு நண்பர் "நாங்கள் கிறிஸ்தவர்கள், எங்களையும் இஸ்ரேலியர் அரேபியராகத்தான் கருதுகின்றார்கள்" என கவலைப்படுகின்றார்.

சினா இரவே அங்கு சென்று விடவேண்டும் என பிடிவாதம் பிடிக்கின்றார். ரொனியின் நண்பர்கள் அது மிகவும் கடுமையான பாதை. இஸ்ரேலியர் ரோந்து அதிகம். வாகனத்தைக் கண்டாலேயே சுட்டு விடுவார்கள் எனக் கூறி தடுக்கின்றனர். அரை மனதுடன் சினா உடன் படுகின்றார். அங்கு சினா, ரொனியுடன் நெருக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் பொழுது, ரொனி இப்பொழுதே அங்கு செல்வோம் எனக் கூறி செல்கின்றனர்.

கடுமையான பாதை. ஆளரவமற்றுள்ளது. வாகனங்கள் எதுவுமே இல்லை. சிறிது தூரத்தின் பின்னர் ரொனி வாகனத்தின் முன் பக்க விளக்குகளை அணைத்து விட்டு வாகனத்தை ஓட்டுகின்றார். வாகனம் இடையில் நின்று விடுகின்றது. வாகனத்தை அப்படியே விட்டு விட்டு நடந்து பல மைல்களை கடக்கின்றனர். காலையில் கரீம் தங்கியுள்ள விடுதியை சென்றடைகின்றனர்.

கரீமின் தங்கியுள்ள அறைக்குள் சினா செல்கின்றார். அங்கு கரீமின் ஜக்கெட்டை அணிந்து கொண்டு ஒரு சிறுவன் காணப்படுகின்றான். கரீம் எங்கே? சினாவின் கேள்விக்கு?...............

"என்னிடம் ஜக்கெட்டை தந்து விட்டு குண்டுகளுக்குள் இறந்து விட்டான்".

படத்தின் இயக்குனர் Philippe Aractingi லெபனானைச் சேர்ந்தவர். கதையை மட்டும் மனதில் கொண்டு போர் முடிந்து பத்து நாட்களுக்குள் தெற்கு லெபனானில் படத்தை எடுத்துள்ளார். போரின் புழுதி படம் முழுவதும் காணப்படுகின்றது. "பாதிக்கப்பட்டவர்கள் சாட்சிகளாக இருக்க வேண்டும்" என்பதற்காகவே இதனை போர் முடிந்த சில காலங்களில் படமாக்கினேன் என இயக்குனர் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். மேற்கத்தியர்களுக்கு "போர் ஒரு கோப்பை தேநீர், எங்களுக்கு போர் தான் வாழ்க்கை" இதனை எனது படத்தில் நிறுவியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். வழமை போல் இல்லாமல் முதலில் காட்சிகள் எடுக்கப்பட்டு பின்னர் திரைக்கதை மெருகூட்டப்பட்டு பின்னர் மிகுதி காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. படத்தில் வரும் பல காட்சிகள் பாதிக்கப்பட்ட மக்கள் நிஜமாக கூறியவை.

பாதிக்கப்பட்ட மக்களின் துக்கங்களை கமரா காவிச் செல்கின்றது. படத்தில் இறந்த உடல்கள் காட்டப்படவில்லை. அவர்கள் அங்குள்ள கல்லுக்கு பின்னால் உடைந்த சுவரின் கீழ் உள்ளனர். அந்த எதிரொலி படம் முழுவதும் உள்ளது.

வழமையான போர் படங்கள் ஒன்றில் அரசு சார்பாக இருக்கும் இல்லையேல் தீவிரவாதிகள் பக்கமாக இருக்கும். முதன் முதலாக ஒரு படம் மக்கள் சார்பாக எடுக்கப்பட்டுள்ளது. படத்தின் முக்கிய பாத்திரங்கள் இருவரும் போரை எதிர்த்தாலும், தங்களது தேசிய நலனின் மீத அக்கறை கொண்டவர்கள். ரொனி நண்பர் இஸ்ரேலில் வேலைக்கு செல்வதை எதிர்க்கின்றார். சினா தனது மண் மீது தீவிர காதல் உள்ளவர். ஆனால் இந்த போர் எனது அல்ல எனக் கூறுகின்றார்.

உடைக்கப்பட்ட துண்டுகளை ஒன்றினைக்க முற்படமால், உடைவுகளாகவே படமாக்கியுள்ளார். சிதைவுகளில் இருந்து சிற்பத்தை செதுக்குவது போல், காட்சிகளின் சுதந்திரத்தை சிறகடிக்காமல் திரைப்படத்தை தொகுத்தளித்துள்ளார். படத்தின் action image இக் காட்சிகள் தான்.

கமாஸிடம் சிறையில் இஸ்ரேல் இராணுவ வீரர் Gilad Shalitன் தந்தை நோம், காசா மக்களை நோக்கி பத்திரிகையாளர்களூடாக தெரிவித்த செய்தி "உங்களின் விரும்பிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். பெண்கள், சிறுவர்கள், அப்பாவிகள். ஒரு பெற்றோராக பல்லாயிரம் பெற்றோரிடம் கேடகின்றேன் எனது குடும்பத்தின் துயரத்தை விளங்கிக்கொள்ளுங்கள். (Some of your loved ones have been killed-women and children, young and innocent…..As a parent speaking to a multitude of parents, I ask you to understand my family's anguish.)

இதனை இஸ்ரேலிய அரசு விளங்கிக் கொள்ளும் வரை, இந்தத் தாயின் வலியை நாங்கள் தான் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

# "You're dancing on your wound."

"Under the Bombs" is not just set during the 2006 Hezbollah-Israel war - it was filmed in the midst of the fighting. The film featured only four "real" actors, with the rest of the cast made up of citizens, who were responding to the conflict itself in real time. The widely acclaimed motion picture tells the story of a young mother who returns to Lebanon from Dubai via Turkey in search of her sister and son in a southern village. She meets Tony, a taxi driver, who agrees to help her, taking the audience on an emotional road trip across the war-torn country just after the ceasefire was declared on August 14, 2006.

Released in the fall of 2007, "Under the Bombs" - director Philippe Aractingi's second feature film - received the EIUC Human Rights Award and the ARCA Prize for Youths at the Venice Film Festival, and won first prize at the Dubai International Film Festival (lead actress Nada Abou Farhat also took Dubai's Best Actress honors). The film's strong reception built on Aractingi's previous success: Lebanon's first post-civil war musical, "Bosta," which was released in over 20 countries and was Lebanon's best-selling film of 2005.

NOW Lebanon speaks with Aractingi about his latest movie and the criticisms against it, as well as how he views Lebanese cinema.

***NOW Lebanon:*** *Why did you choose to shoot "Under the Bombs" as a feature film, not as a documentary?*

**Philippe Aractingi:** I had a similar idea in 1989 to shoot a film, put the actors in the real chaos and make them react to what was going on. But at that time I was too young and I didn't have enough experience, so I didn't do it. When this war came, I realized that I had enough experience. When the war started, we went to Faraya with my kids. On the 12th in the afternoon, we already had food, money, passports and petrol. My wife told me, "You know how to react very quickly to that kind of catastrophe." She didn't grow up in Lebanon, so she saw in me a person who already has the fight in him, and I thought yes, I do know what it is to feel war. So I decided that I should do something, and I didn't think of a doc-umentary, because I knew that a documentary would only talk to the mind and would not make you feel.

I knew that I needed to go further, make it stronger, give it a real [feel], because this is a war; this is not a joke. This was really people dying. I also felt a lot of hatred going into me and a lot of anger, and I needed to change all that energy into something creative, therefore positive. Even if it's a drama, if it's something tough, I needed to go and change it. I decided to go and do something creative, and at the same time I had an idea, which is a very similar idea to something that I wrote a long time ago that I hadn't done. So it's not that I'd written something - in the very beginning at least - very different from what I knew. I called the actors, and we started shooting and improvising scenes with what was going on. In the first scene, when she goes out of the port, it was a real Turkish boat, and they were really taxi people. I told the taxi people, "Don't look at the cameras, but answer her exactly as you would answer her normally." She said she wanted to go to the South, and they said, "The South?!" It wasn't acting; it was being. The first part of the shooting was… something that we lived; we were feeling this. Plus, I had two great actors who knew how to create, improvise and react [in real time]. So I shot with a small crew like a documentary, but it was a fiction, and it was done with a small camera…

***NOW:*** *How much of the acting was improvisation? Was there a script that actors had to be loyal to, or did you give them some room to work with how they reacted?*

**Aractingi:** I shot during the war, went to Paris the second day, found a producer, got some funding and came back… On the third day after the ceasefire, I started shooting… That's ten days of shooting, and in these first ten days, the philosophy was not to create what's in your mind like in a fiction film, but to take what you have and to improvise… You prepare what you have to do; you even write your dialogue, and then you go on.

And when it comes to the real people (the journalists and the refugees), you tell them, "We're coming in with the camera. Don't look



at the camera. She's an actress," and so on. But you don't tell them what to say, and you let them react spontaneously…

**NOW***: Were there any political undertones in the film or particular messages that you intended to deliver?*

**Aractingi:** It does say, "This is not my war." As a character, she [the character Zeina, played by actress Nada Abu Farhat] is not pro-"this war"; therefore, she's not pro-Hezbollah in a way. But he [the character Tony, played by George Khabbaz] is against his friends and against Israel. In a way, the film is not taking part [of either side]. Now, of course, it is obvious that Israel has destroyed a lot, it did a lot of damage, and it did kill [the character Zeina's sister]… The criminal here is Israel; it's obvious. But it's not pinpointing Israel, and it's not pinpointing Hezbollah. It's just saying, "My character, my people, are looking for their kids." And there is one point where she says, "I'm looking for my child," and this is obviously saying, "I'm not pro X or Y. I'm just against war… I'm looking for my child."

Obviously, that is saying to everyone that we are looking for the human side, we are looking for the victims, and the victims are most of people who lived with the war. When you have documentaries, people… don't go to the victims, which is what most of the people are. So yes, we do make a statement… It's [a statement] about the victims.

***NOW:*** *Did you think the film was released too soon after the war, or did you do it intentionally during the present crisis?*

**Aractingi:** To be honest, there is a momentum to the film. And if you lose that momentum, you lose a little bit of interest. Also, you can't wait. The film was just released in Venice in September; it had seven prizes… and then two prizes in Dubai. So there is a momentum, and everyone's talking about the film. If you keep on waiting, you lose the momentum...

Also, I feel that this film was necessary. We went out of this war very quickly, and suddenly we started fighting with each other. We did not see that we lived a huge [slap], and we were traumatized! Everyone is shouting at each other, and they don't understand that that shout started with this trauma. It also started with the death of Hariri…

The proof that this [film] is a necessity is that there was a girl who went to see it in Dubai, and she said, "I lost my grandmother during the war, not because of a bomb, but because she couldn't get hold of her medicine because of the war." She cried a lot, and she said, "I was very, very angry when I heard about my grandmother. I didn't want to go back to Lebanon. I was angry, and I saw your film, I cried a lot, and I decided I have to go back to Lebanon and pray for my grandmother."

For me, it's like I showed her her wound, and I said now she can go back to her wound and try to heal it. In that sense, the film was a necessity… People tell me they went to the mirror. People tell me these kinds of things that make me feel that this film has to be seen. Not only is it a film, it's a process inside us.

So for me, it has to be shown, and sooner is better. Now a lot of people are afraid of seeing it because it's called "Under the Bombs." … When you see that title and you go for that film, half of the work of going into your memory is already done.

You see, I don't feel proud… Proud of what? Proud of being witness to those who died? … Some people were really reacting very tough to this film because it moved their emotions that they didn't want to open, and they're fighting back… You know, they're fighting really hard and tough and being nasty… and I truly feel that some people are jealous! I don't [care] whether I'm being known for this film. For me, the important thing is that this message goes through… I've made a lot of effort to show this film in the South. I've asked for it to be not allowed for those under 12. If I was commercially thinking, I'd say, "No, send everyone in." I don't think everyone should go in!

***NOW:*** *How would you respond to criticism that you were exploiting the conflict to make your movie?*

**Aractingi:** I really truly feel that this movie was created through me. I didn't create it, I didn't do it; I was a tool to do this film… At the end, this is a film for the victims. It's not as if we're hiding it; there is a message. And I don't necessarily think that films have to have messages.

But in this case, it was my reaction to the bombs, so people who feel like I'm abusing it and doing it for myself, they did not talk to me, they did not see me; they just reacted in a meaningful way... I took actors that you can relate to and feel with, so I'm talking more to your emotion. Critiques are more into this. They don't let the emotion go, and I think the emotion is much stronger than the mind. The mind makes you understand, but the emotion makes you feel...

**NOW***: What future projects do you have? How does your creative process determine how you direct your films?*

**Aractingi:** For me… I feel that I try to transform [negative emotions] into a creative object. If I feel anger and hatred, and if I feel that the victims should be witnessed, then I go for this. If I feel that there is joy in me and this joy should be shown. Joy is part of Lebanon... What I have inside, I just have to let it out in a creative way. I think also, I've done a new genre in cinema, which is not created by me; Rossolini started it in Berlin… I think I will continue working with the same grammar of writing and doing films with reality, but the subjects can be totally different.

***NOW:*** *What role do you think Lebanese cinema should play, and what role is playing now?*

**Aractingi:** …For me, I'm more into the feelings than the thinking. We've lived through so many wars, and we've had so many tough experiences that necessarily it's going to keep on giving us a lot of great films and great directors, because they have suffered, and they have a lot of things to say… It is tough for us to do films, but I feel at least one or two of these guys [Lebanese filmmakers] are going to bloom internationally. It already started, so far. You see, "Bosta" opened a door for the general public to go and see Lebanese films. It was the first film to be shown in the Arab world [as such]. It was the first film after all the fights we had with Egyptians to get into the Egyptian market. It was the first film to be sold so much. I mean, we sold to 20 countries so far. Then came "Caramel" that also played a great role and did very well in the rest of the world, and so on and so forth. Now came "Under the Bombs," and we're opening doors for each other. I opened the first door, she ["Caramel" director Nadine Labake] opened the next door, and we will keep on opening doors for each other… It's really a big movement, but it's tougher on those who start.

***NOW:*** *Do you think in some ways a lot of directors are trapped by the idea of a civil war or that the Lebanese are victims of warfare?*

**Aractingi:** I wasn't trapped by it in "Bosta." "Bosta" does talk about the war, but in a very light way. In "Under the Bombs," it was completely different because war came back to us. And that comes back to memory: If you don't heal your memory, and if you don't heal your wounds from the past, then the past will come back to you. In that sense, it is a necessity. You can see it in "Bosta." There is a sentence in the film that says, "You're dancing on your wound." You can heal it that way, but in any sense, you have to heal it.

*-Courtesy of the Now Lebanon*

# "மீண்டும்" எனும் திரையிலிருந்து...

கனடியத் தமிழ்த் திரைப்பட மையம் அமைப்பின் அனுசரனையில் நோர்வே தமிழ்த் திரைப் படைப்பாளிகள் வழங்கிய "மீண்டும்" என்ற திரைப்படம் ஜனவரி 10-ந் திகதி காண்பிக்கப்பட்டிருந்தது. வழமை போலவே இங்கு திரைப்படம் எடுப்பவர்கள் பெரும்பான்மையரது ஆதரவு கூட இல்லாது சொற்ப எண்ணிக்கையாளர்களுடன் படம் காண்பிக்கப்பட்டிருந்தது. (பிறரது திரைப் படங்களுக்கு சமூகமளிக்காத இங்கத்தைய திரைப் படைப்பாளிகள் தங்கள் படங்களுக்கு எவ்வகையில் பிறரை எதிர்பார்க்கிறார்களோ..?)

கனடியத் தமிழ்த் திரைப்படப் படைப்பாளிகள் பலரும் ஆதங்கப்படுவதுபோல் ஒரு படமாளிகை இல்லையே என்ற குறையை கனடியத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையம் கண்டுபிடித்து ஒழுங்குசெய்து கொடுத்திருந்ததற்கு அவர்களுக்கு முதலில் பாராட்டக் கடைமைபட்பட்டுள்ளோம்.

"மீண்டும்" திரைப்படம் யார் பார்க்காவிடினும் ஈழத்துத் திரைப்படத்தில் ஆர்வமுள்ள குறிப்பாக திரைப்படத்தில் பங்குபற்றிய, பங்குபற்றும், பங்குபற்றும் ஆர்வமுள்ள ஈழத்துப் படைப்பாளிகள் எல்லோரும் பார்க்கவேண்டிய திரைப்படம். ஈழத்துத் திரைப்படங்களில் இன்னும் திருத்தப்படவேணடிய பல தவறுகள் இதிலும் விரவிக் காணப்படினும் இத்தவறுகளில் குறிப்பிடும்படியான சில தொழில்நுட்பத் தவறுகள் இல்லாமல் வெளி வந்திருக்கும் முதலாவது திரைப்படமிது. கனடியத் தமிழ்த் திரைப் படைப்பாளிகள் இத்திரைப்படத்தைப் பார்த்திருந்தால் இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தம் படங்களில் தாம் விடும் தவறுகளும், இவர்கள் படங்களுக்கு மக்கள் ஏன் வருகிறார்களில்லை என்பதும், மக்களுக்கு எங்கே தெரியப்போகிறது என்று கண்மூடித்தனமாக நினைத்து இல்லாததை இருக்கிறதாக இவர்கள் எழுத்துப்போட்டு ஏமாற்றி விளம்பரம் செய்வது தவறு என்பதும் இவர்களுக்குத் தெரியவந்திருக்கும். தோழில்நுட்பம் பற்றிய அறிவு அக்குவேறாய் ஆணிவேறாய் துலாம் பரமாகப் பகுத்தறியத் தெரியாவிடினும் அவ்வவற்றுக்கான பேதம் தெரிந்து கொள்ளும் நுகர்வுதிறன் எம் மக்களுக்கிருக்கிறது. குறிப்பாக புலம் பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் எம் மக்களுக்கு இருக்கிறது. அவர்களை நீங்கள் ஏமாற்ற நினைப்பீர்களாயின் நீங்கள்தான் ஏமாந்து போவீர்கள் என்பதனைத் தெரிந்து கொண்டு தொழில்நுட்பத்தை தம்மால் இயன்ற முறையில் கச்சிதமாகச் செய்திருக்கிறார்கள் "மீண்டும்" திரைப்படக் குழுவினர். முதலில் ஒளிப்பதிவைப் பற்றிக் கூறுவதெனில், ஒளிப்பதிவைப்பற்றி நன்கு தெரிந்த ரவி அச்சுதன் என்ன சொன்னார் என்பதிலிருந்து தொடங்கலாம். 'எனது படங்களுக்கு யார் வருகிறார்களோ இல்லையோ ஈழத்தமிழர் படங்கள் எல்லாவற்றுக்கும் எனது மனைவி பிள்ளைகள் சகிதம் செல்பவன் நான். எனது படங்கள் உட்பட இத்தகைய தெளிவுடன் இதுவரை நான் எந்த ஈழத் திரைப் படத்தையும் பார்த்ததில்லை' என அவர் சொன்னார். அவர் சொன்னது போலவே இத்திரைப்படம் அவ்வளவுக்குத் துல்லியமாக இருந்தது. அது மட்டுமல்லாமல் தகுந்த வெளிச்சம் கொடுத்துப் படமாக்கியிருந்தார் துருவன் அவர்கள். படத்தின் காட்சிச் சட்டங்களை (Frames) சரியாவே அமைத்து படமாக்கியிருக்கிறார். காட்சிகளும் வெகு ரம்மியமான அழகான காட்சிப்பின்புலங்களில் படமாக்கப்பட்டுள்ளன. நோர்வே இப்படி அழகானதா என வியக்கும்படி காட்சிப் பின்புலங்களைத் தெரிவுசெய்து காட்சிப்படுத்திருந்தார்கள். (இவை கனடியத் தமிழ் திரைப் படைப்பாளிகள் கற்றுக்கொள்ளவேண்டியன) ஒலியமைப்பு துல்லியமோ துல்லியம். எமது படங்களில்க் காணப்படும் இரைச்சலோ, ஒலி கூடிக்குறையும் குழறுபடிகளோ எதுவும் இல்லாது அசல் டொல்வ்பித் தரம். ஆனால் கனடியத் தமிழ்ப்படங்களில் 5.1 னுவுளு என்றெல்லாம் ஏதோ எழுத்துப்போடுவார்கள் ஆனால் குழறுபடிகள்தான் இருக்கும். இதை 'மீண்டும்' எமக்கு கற்பித்திருக்கிறது. பின்னணி இசை கச்சிதமானது. நோர்வேயில் மேலைத்தேச இசை பயின்று நோர்வேப் படங்ககளில் பங்குபற்றிய அனுபவமுள்ள ஈழத்தமிழரான திரு அவர்கள் இதற்கு மிக அருமையாக இசையமைத்திருக்கிறார். எமது கனடியத் தமிழ்ப்படங்களில் படத்தொகுப்பாளர்தான் எங்கெல்லாமோ இருந்து இசைத் துணுக்குகளைப் பெற்று அவ் இசையை படத்துடன் இணைத்துவிட்டு எவரிமிருந்து பாடல்கள் பெற்றாரோ அவரை இசையமைப்பாளரென எழுத்தில் போடுவாராம் என அண்மையில் அறிந்தபோது அதிர்ந்துபோபோனன். பின்னணி இசையை இசை தெரிந்தவர்களிடமிருந்து அதுவும் திரைப்படப் பின்னணியிசை தெரிந்தவர்களிடமிருந்து பெறவேண்டும் என்பதும் எமது கனடியத் தமிப் படைப்பாளிகள் கற்கவேண்டிய ஒன்று. அடுத்தது கதாநாயகன் தெரிவு. திரைப் படமென்பது ஒரு அழகியல் சம்மந்தமானது. படத்திற்குப் பொருத்தமான அழகுடன் கதாநாயகன் இருந்தால்த்தான் திரைப்படத்திற்கு மக்களை ஈர்க்கலாம். இதிலும் 'மீண்டும்' கனடியத் தமிழ் திரைப்படப் படைப்பாளிகளுக்கு பாடம் சொல்லியிருக்கிறது. அவற்றைக் கற்பதற்காகவெனினும் கனடியத் தமிழ்த் திரைப்படப் படைப்பாளிகள் மீண்டும் திரைப்படத்தைப் பார்க்க வேண்டுகிறேன்.

*பிற்குறிப்பு:*

திரைப்படத்தின் ஒலி, ஒளித் துல்லியம் தற்போதய தரமான தொழில்நுட்பச் சாதனங்களின் உதவியிலிருந்து பெறும் வாய்ப்பு எம்போன்ற புலம்பெயர் தமிழருக்கு கைக்கெட்டும் நிலையில்த்தான் இருக்கிறது. அதற்காக மிக அதியுயர் விலையில் வாங்கினால்த்தான் தரமானதைப் பெறமுடியும் எனும் வாதமும் ஓரளவுக்குத்தான் பொருத்தமாக இருக்கும். ஒரு சாதாரண கமராவில் இருந்து அதன் ஆகக்கூடிய தெளிவை எப்படிப் பெறலாம் என்பதற்கு அக் கமராபற்றிய தெளிவான தேடல் இருக்கவேண்டும். ஆகக்குறைந்தது அதன் கைநூலையாவது நன்கு வாசித்து அதன் உச்ச பயன்பாட்டைத்தனும் தெரிந்து வைத்திருககவேண்டும். அத்துடன் படத் தொகுப்பிற்குப் பாவிக்கும் மென்பெருளின் தரமும் அதுபற்றிய அறிவும் அதிலிருந்து பொறத்தக்க அதியுயர் பயன்பாடும் அத்துல்லியங்களுக்கு காரணம் எனும் உண்மையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது முக்கியமானது. "மீண்டும்" திரைப்படம் JVC GY 201 E எனும் கமராவால்த்தான் படம்பிடிக்கப்பட்டிருக்கிறதாக துருவனிடமிருந்து அறியமுடிகிறது. ஆனால் இந்தக் கமராவோ ஒன்றுக்கும் உதவாதது என்பதாகவே கனடியத் தமிழ்ப் படப்பிடிப்பாளர்களின் கருத்ததாக இருக்கிறது. அத்துடன் இப்படத்தை Avid -liquid மென்பொருள் கொண்டே தொகுத்து ஒலிச் சேர்க்கயையும் செய்திருப்பதாக துருவன் சொல்லிக்கொண்டார். ஒளி, ஒலி இரு விடயங்களிலும் அவற்றின் அதியுயர் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டதற்கு துருவனுக்கு எனது பாராட்டு.



**ஈழத்துத் திரைப்படங்களில் இன்னும் திருத்தப்படவேண்டிய பல தவறுகள் இதிலும் விரவிக் காணப்படினும் இத்தவறுகளில் குறிப்பிடும்படியான சில தொழில்நுட்பத் தவறுகள் இல்லாமல் வெளி வந்திருக்கும் முதலாவது திரைப்படமிது.**

*-திரையாவலன் கந்தசாமி*

## *புலம்...*

*(2ம் பக்கத் தொடர்ச்சி)*

இனி,

தமிழீழ விடுதலைப் போரை நடாத்திய புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டார்கள். தோற்கடிக்கப்பட்டது என்று சொல்லுவதற்கும் எதிர்ப்பானவர்கள் இருப்பார்கள். புலிகள் பொரில் தோற்கடிக்கப்ட்ட பின் அங்குள்ள அரசும் அரசுக்கு சார்பானவர்களும் தூண்டிவிட்டதின் பேரில் சிங்கள மக்கள் பெரிய கொண்டாட்டமாகக் கொண்டாடினார்கள். புத்தர் அதையா சொன்னார்? பஞ்சசீலம் என்கின்ற அன்பைப் போதித்த புத்த சமயத்தைத் தழுவுகிற மக்கள் பல்லாயிரம் மக்கள் சாகடிக்கப்பட்டதை கொண்டாட்டமாகக் கொண்டாடினார்கள். இது அந்த மக்களுடைய குற்றமல்ல. அந்த மாதிரி அவர்களுடைய மூளைகள் சலவை செய்யப்பட்டுள்ளன. நான் இப்படிச் சொல்கிற பொழுது இன்னொரு விடையத்தையும் சொல்ல வேண்டும். 1999,2000ம் ஆண்டுகளில் ஓயாத அலைகள் என்ற புலிகளுடைய இராணுவ நடவடிக்கையின் பொது நடந்த சம்பவங்கள் பூண்டோடு அழிக்கப்பட்ட இராணுவ முகாம்கள், சிங்களக் கிராமங்கள், முஸ்லீம் மக்கள் அழிக்கப்பட்டு அரசு தடுத்து நிறுத்த முடியாது பின்வாங்கியபோது நாங்கள் எல்லாம் கொண்டாடினோம். எமது வீடுகளில் விழாவாகக் கொண்டாடினோம். நமது நாட்டிலல்ல. இங்கே புலம் பெயர்ந்து வந்து சர்வ சலாக்கியங்களையும், வாழ்க்கைக்குத் தேவையான சகலவசதிகளையும் அதற்கும் மேலால் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற, மதிக்கின்ற நாட்டில் வந்திருக்கின்ற நாங்கள் கொண்டாடினோம். அது தவறு எனில் இது எவ்வகையில் சரியானதாக இருக்கமுடியும்? ஆகவே இனவாதம் என்பது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவான விடையம்.

இடதுசாரி என்று சொல்கிற நாங்கள். இனவாதம் என்ற உணர்வுக்கோ அந்த மனநிலைக்கோ எங்களை உள்ளாக்காமல் இருந்தபடியால்தான் யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களது சம உரிமைக்கான போராட்டத்தில் எதிர்பார்க்காதளவு வெற்றியை அடைந்துள்ளோம். காரணம் எங்களது போராட்டத்திலே நாம்மிடம் இனவாதம் இருக்கவில்லை. சிங்களமக்கள் நிறையளவு உதவி செய்தார்கள். முஸ்லீம் மக்கள் உதவி செய்தார்கள். அதேபோல் நல்லெண்ணம் படைத்த, தெளிந்த சிந்தனையுள்ள, இடதுசாரி மனப்பாங்குள்ள உயர்சாதி தமிழர்களும் தங்களுடைய உயிரைக் கொடுக்கிற அளவுக்கு முன்வந்தார்கள். இவற்றையெல்லாம் நாம் பெருமையாகப் பேசவேண்டும்.

முடிவாக புலம்பெயர்ந்து வந்திருக்கிற தமிழர்கள் பற்றிப் பேசவேண்டும். இங்கு சகலவிதமான வசதிகளுடன் வாழ்ந்து கொண்டு அழிவையே நோக்காக்கொண்ட அழிந்து போகின்ற இயக்கங்களுக்கு தாராளமாக அள்ளிக் கொடுத்து அங்கே நடக்கின்ற போருக்கு வித்திட்டவர்கள், அதை வெற்றிகரமாகச் செய்து முடிப்போம் என்று நம்பியவர்கள் இந்தப் புலம் பெயர்ந்தவர்கள். எங்காவது யாராவது நூறுபேர் சென்று உண்மையான சமாதானம் வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு உண்மையாக அமைதி வேண்டும். தமிழர்களுக்கு மாத்திரமல்ல ஏழைச் சிங்களவர்களுக்கு, மலையக மக்களுக்கு உண்மையான அமைதி வேண்டும் என்று சொன்ன ஏதாவது ஒரு இயக்கம் இங்கிருந்திருக்கிறதா? இல்லை. தற்போது இங்கிருந்து அரசு அமைப்பது பற்றியும் தேநியக்கொடி எது என்றும் விவாதித்துக் கொண்டிருப்பதை விட்டு புலம்பெயர் சமூகம் இனிச் செய்யவேண்டியது இலங்கையில் இருக்கின்ற அனைத்து சமூகங்களும் இன ஐக்கியத்துடன் ஒன்றுபட்டு ஒரு புரிந்துணர்வுடன் வாழ வழிசெய்கின்ற ஒரு அரசை அங்கு ஏற்படுத்துவதுதான் சரியாக இருக்கமுடியும் என்று சொல்லி எனது பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

# ஒருபுறம் வேடன்! மறுபுறம் நாகம்! இரண்டுக்கும் நடுவே!

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

தேர்தல் திருவிழா களை கட்டி சூடு பிடிக்கிறது. கட் அவுட்டுக்கள் முதல் காளாஞ்சி குடிப்பது வரைக்கும் முன்னணி வேட்பாளர்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி இன ஒற்றுமை முகமூடியுடன் வேஷம் போட்டுக் கொண்டு, வாக்கு வேட்டை நடத்துகிறார்கள். பின்னணி வேட்பாளர்கள் விதூஷகர்களாகி குட்டையைக் குழப்ப வழி தேடுகிறார்கள்.

தேர்தல் பற்றியோ, யார் ஜனாதிபதியாகுவார் என்பது பற்றியோ ஆய்வு செய்வதற்கு முன்னால் தேர்தலின் பின்னான நிலை பற்றி கொஞ்சம் முன்கூட்டியே சிந்திப்பது நல்லது.

எல்லாத் தேர்தல்களும் முடிந்த பின்னால் காட்சி ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். வென்றவர் 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று ஐந்து வருடத்திற்கு அசைக்க முடியாது என்ற நினைப்பில் அடக்குமுறைக்கு ஒரு கையும், கஜானாவில் வைக்க ஒரு கையுமாக, 'நிலைமை வழமைக்குத்' திரும்புவார். தேர்தல் ஒப்பந்தங்கள்,
வாக்குறுதிகள் எல்லாம் குப்பைக்கூடைக்குள் போக, நம்பி வாக்களித்தவர்களும் ஒப்பந்தம் செய்தவர்களும் அம்போ நிலையில் அநாதரவாக இருப்பார்கள்.

வென்றது 'அரும்பொட்டில்' என்றால் என்ன? மும்முனைப் போட்டியில் பாதிக்குக் குறைவானர்களே ஆதரித்தால் என்ன? வெற்றி வெற்றி தான்!

ஆய்வாளர்கள் வெற்றி தோல்விக்கான காரணங்களை பிரேத பரிசோதனை செய்து, 'இதயத்துடிப்பு நின்றதால் மரணம் சம்பவித்தது' என்பது போல, காரணங்களைக் கண்டு பிடிப்பார்கள். தாங்கள் சொன்ன ஆரூடங்கள் பலிக்காமல் போனது பற்றி இந்த ஆய்வாளர்களோ, சோதிடர்களோ கவலைப்படுவதில்லை. ஆண்டவனை அண்டிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்ட ஊடகங்கள் 'மக்கள் அழகாகத் தீர்ப்பளித்துள்ளார்கள்' என்று புதியவரை வருக, வருக என்று வர வேற்கும்.

தோற்றவர்களோ மனம் குமுறி, தேர்தலில் மோசடி நடந்திருக்கிறது, அரச இயந்திரம் முறைகேடாக தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது என்றெல்லாம் கூச்சலிடுவார்கள். வெற்றிவிழாவில் மழை பெய்வதற்காக, 'வென்றவரின் ஆதரவு குறைந்திருக்கிறது, எங்களது ஆதரவு அதிகரித்திருக்கிறது' என்றெல்லாம் ஏதாவது ஒரு குறையைத் தேடிப் பிடித்து, மனதைத் தேற்றிக் கொள்வார்கள். தோற்றது கருணாநிதியாக இருந்தால் மட்டும், 'தமிழா, உனக்கு தன்மானம் இல்லையா?' என்று திட்டுவார்.

கொஞ்சம் நாகரீகம் உள்ள மற்றவர்கள் இங்கிதம் கருதி, 'மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்கிறோம். ஒரு எதிர்க்கட்சிக்குரிய கடமையைச் செவ்வனே செய்வோம்' என்று அறிக்கை விடுவார்கள்.

ஆனால், இதில் கொஞ்சமும் சம்பந்தமில்லா விட்டாலும், உணர்வு பூர்வமாக தங்களை இணைத்துக் கொண்டவர்கள் தான் கொஞ்சம் அதிகமாய் கலாட்டா பண்ணுவார்கள். இந்த முடிவுகள் தன்மானம் சம்பந்தமானதாக இருப்பதால் தோல்வியைத் தாங்க முடிவதோ, வெற்றியை பணிவுடன் ஏற்றுக் கொள்வதோ இல்லை. இதனால் தான் ஆதரவாளர்களுக்கு இடையே கத்திவெட்டுக்கள், வாள்வீச்சுக்கள் எல்லாம் நடைபெறுகின்றன.

இன்றைய தேர்தல் நிலைமையும் புலன் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் கத்தி, பொல் தாக்குதல் வரைக்கும் போகாவிட்டாலும் பெரும் பிளவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

புலி ஆதரவாளர்கள் சரத் பொன்சேகாவையும் மாற்றுக்கருத்தினரில் பலர் மகிந்தவையும் சிலர் விக்கிரமபாகுவையும் ஆதரிக்கின்றனர். 'தன்மானமுள்ள எந்தத் தமிழனும் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க மாட்டான்' என்று சொன்ன சிவாஜிலிங்கத்திற்கு வாக்களிக்க முன்வரும் அளவுக்கு எந்தத் தமிழனுக்கும் தன்மானம் இருப்பதற்கான ஊடக ஆதாரங்கள் எதுவுமில்லை.

இந்த ஆதரவுப் போக்குகள் உணர்வு சார்ந்ததாகவே தென்படுகின்றதே ஒழிய, பகுத்தறிவு சார்ந்ததாக தெரியவில்லை. இவர்களின் ஆதரவு யாருக்கு என்பது ஒரு புறமிருக்க, இவர்களின் போக்கு இலங்கைத் தமிழ் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா என்பதில் சந்தேகங்கள் நிறைய உள்ளன.

இதுவரை காலமும் வெளிநாட்டுப் பணத்தை நம்பிப் போராட்டம் நடத்திய புலிகள் போலன்றி, இன்று அங்குள்ள எந்தத் தமிழ்க் கட்சியும் புலன் பெயர்ந்த பணத்தை நம்பி அரசியல் நடத்தவில்லை. மாற்றுக்கருத்து அமைப்புகளின் முன்னாள் உறுப்பினர்கள் நிதியுதவி செய்யும்போது கூட, அது கொள்கை அடிப்படையானதே அன்றி, எந்த வித நிபந்தனையும் கொண்டதும் அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட, 'எதற்கும் ஒரு தடவை புலன் பெயர்ந்த, நாடு கடந்த தமிழர்களின் தலைவர்களைக் கேட்டுப் பார்ப்போம்' என்று ஒப்புக்குக் கூட சொன்னதில்லை. காரணம், இவர்களின் பணத்தை நம்பி அரசியல் நடத்த வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை.

**தங்களின் எந்தக் கருத்தையும் கேட்டு நடக்கும் அளவில் அங்கு வாழும் தமிழர்கள் இல்லை என்பது தான் உண்மை. இவங்களால் முடிந்தது புலன் பெயர்ந்த கூட்டத்தைப் பேய்க் காட்டுவது மட்டுமே.**

வேறு வேறு அரசியல் பின்னணிகளுடன், வேறு யாருடையவோ நலன்களுக்காக செயற்பட முனைந்த சிலர், ஐரோப்பாவுக்கு தமிழ் அமைப்புகளை வரவழைத்து, பொதுநிலைப் பாடொன்றை எடுக்க முயன்ற போது, அது தோல்வியில் முடிந்தது. தங்களை சரியாக அடையாளம் காட்டாமல், இரகசியமாக நடத்த முயன்றவர்களின் திரைமறைவு நாடகங்களே சந்தேகங்களை தோற்றுவித்தது. புலன் பெயர்ந்தவர்களின் கனவுலக அரசியலுக்கு விலை போக அவர்கள் தயாராகவில்லை என்பதற்கு, இவர்களிடம் அவர்கள் நிதி ரீதியாகக் கடமைப்படவில்லை என்பது முக்கியமான காரணம். இல்லாவிட்டால், நிதியுதவியை நிறுத்துவோம் என்று மிரட்டியே காரியத்தைச் சாதித்திருக்க முடியும்.

அதையும் விட, புலன் பெயர்ந்த ரசிகப் பெருமக்களின் வசூலுக்காக, போராட்டக் கூத்து நடத்தப் போன புலிகளுக்கு நடந்த கதியைக் கண்ட பின்னாலும், தங்கள் கோவணத்தையும் இழக்க அங்குள்ள தலைவர்கள் தயாராக இல்லை. தங்களுக்கு வாக்களிப்பவர்கள் அங்குள்ள மக்களே, புலன் பெயர்ந்தவர்கள் அல்ல என்பதால் அவர்கள் வெளி நாட்டு மந்தைகளின் கருத்துக்களை இனிமேல் கணக்கில் எடுக்க வேண்டிய அவசியமே இல்லை.

புலிகள் போன பின்னால், புலன் பெயர்ந்த அரசியல் தலைமையும் புலி ஆதரவுக் கூட்டமும் 'நாயும் கணக்கெடுக்காத' அனாதை வடிவிலேயே இருக்கின்றன. இந்த நிலைமை தெரியாமல் இன்னமும் இவர்கள் வட்டுக் கோட்டைக் கொட்டைப் பாக்கு 'யாவாரம்' முடிந்து, இப்போது நாடு கடந்த தேர்தல் நடத்த தயாராகும் நகைச்சுவை இன்னொரு கதை. போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் அமெரிக்க டாக்குத்தர்மார்கள் பணப் பெட்டிகளுடன் வந்து, தாங்கள் சொல்வது போல போராட்டம் நடத்த வேண்டும் என்று பேரம் பேசிய கதையாகத் தான் இன்றைய வெளி நாட்டு நிலைமையும்.

இன்று கூட, நெடியவன் சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டும் என்று அறிக்கை விடவில்லை என்பது மட்டுமல்ல, வேலுப்பிள்ளை அவர்களுக்கு நாட்டுப்பற்றாளர் பட்டம் வழங்கவும் இல்லை. மறுபுறத்தில் நாடு கடந்த ஈழத்தின் தலைவர் கூட, ஈழத்தில் உள்ளவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று அறிவிக்கவில்லை. ஆனால் நாடு கடந்த ஈழத்திற்கான தேர்தல் வெளிநாடுகளில் நடக்கும் என்று அறிக்கை விடுகிறார்.

அதாவது தமிழ் மக்களுக்கான ஈழத்திற்காகப் போராடுகிறோம், அதற்கான தலைமையை வழங்குகிறோம் என்று சொல்கின்ற, எதிரும் புதிருமான இந்த இரண்டு அமைப்புகளும் தேர்தலில் மக்கள் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதை உத்தியோக பூர்வமாகச் சொல்லத் துணியவில்லை. காரணம், தங்களின் எந்தக் கருத்தையும் கேட்டு நடக்கும் அளவில் அங்கு வாழும் தமிழர்கள் இல்லை என்பது தான் உண்மை. இவர்களால் முடிந்தது புலன் பெயர்ந்த கூட்டத்தைப் 'பேய்க் காட்டுவது' மட்டுமே. மாதந்தைக்கான அஞ்சலி முதல் நாடு கடந்த தேர்தல் வரையும் வெளிநாட்டிலேயே நடந்து கொண்டிருப்பது இந்த சூத்துமாத்தின் அடிப்படையிலேயே. பட்டியில் ஒரு கூட்டம் அடைபட்டுக் கிடக்கும்வரை இவர்களின் பிழைப்பும் தொடரத் தான் செய்யும்.

இங்கே துள்ளிக் கொண்டிருப்பவர்கள் இந்த ஊடகங்களும் சில ஆய்வாளர்களும் தான். வன்னியிலிருந்து வந்தால் மட்டுமே செய்தியை வெளியிடுகின்ற பாரம்பரியத்தில் வந்த இவர்களுக்கும், சம்பந்தன் அறிவிக்கும் வரைக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. சம்பந்தனோ உட்கட்சிக் குழப்பத்தில் நீண்ட காலமாய் மதில் மேல் குந்திக் கொண்டிருந்தார். இப்போது உத்தியோகபூர்வமான அறிவிப்பு வந்தது தான் தாமதம், ஆய்வாளர்கள் களமிறங்கி விட்டார்கள்.

அடிப்படைக் கோஷம், தமிழ் மக்களின் நலன்கள் அல்ல. ஆட்சி மாற்றம்.

நேற்றுவரைக்கும் சரத் யுத்தக் குற்றங்களுக்காக சர்வதேச விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று கூச்சலிட்ட இவர்கள் திடீரென்று நிர்வாணமடைந்து சரத்தின் அருள்பாலிப்பில் மூழ்கிப் போயுள்ளார்கள்.

முள்ளிவாய்க்காலில் வாங்கிய அடியில் அவமானத்தால் குமுறிக் கறுவிக் கொண்டிருந்தவர்களுக்குப் பழி வாங்கக் கிடைத்த சந்தர்ப்பம்... ஆட்சி மாற்றம்.

ஈழமுரசுவின் ஆய்வின்படி முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டுமாம். இந்திய இராணுவத்தை வெளியேற்ற, பிரேமதாசாவைப் பயன்படுத்திய தேசியத்தலைவரின் தீர்க்கதரிசனத்தை நினைவு கூர்ந்து, மகிந்தவைப் பழிவாங்க சரத்தை பயன்படுத்த வேண்டும் என்பது தான் வாதம். வழமையான யாழ்ப்பாணத்து 'எவரையும் பயன்படுத்த தயங்காத' புத்தி.

படைப்பாளிகள் சங்கமும் (என்னத்தைப் படைத்துக் கிழித்தார்களோ, யாமறியோம்) மகிந்தவைத் தோற்கடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறது. (அது விடுத்த அறிக்கையை இணையத்தில் தேடினால், 'காங்கிரஸ் தி.மு.க கூட்டணியைத் தோற்கடியுங்கள்' என்று முன்பு எப்போ விடுத்த வேண்டுகோள் வந்து தொலைக்கிறது! கருணாநிதி போல, தமிழகத் தமிழனுக்கு தன்மானம் இல்லை என்று இவர்களும் அறிக்கை விட்டிருக்கக் கூடும்.)

மறுபுறத்தில் மாற்றுக்கருத்தினரும் மகிந்த மீதான ஆதரவை வெளிப்படுத்தி அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கின்றனர். புலிகளின் அடக்குமுறையினால் ஏற்பட்ட பாதிப்பும் வெறுப்பும் பலரை அரச சார்புப் போக்கு எடுக்கும்படி தள்ளியது உண்மையே. சகலரையும் அணைத்து அனுசரித்துப் போகும் பண்பு இல்லாமல், எந்த மாற்றுக்கருத்துக்கும் மண்டையில் போடுவது தான் தீர்வு என்ற புலிகளும் அதை கேட்டுக் கேள்வியின்றி விசுவசித்த புலன் பெயர்ந்தவர்களும் இவர்களை துரோகிகள் என்று முத்திரையிடுவதை இன்று வரைக்கும் நிறுத்தவில்லை.

இன்று புலி ஆதரவாளர்கள் சரத்தை ஆதரிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். படைப்பாளிகளின் அறிக்கைப்படி, மகிந்தவுடன் சேர்ந்து கொண்டுள்ள 'துரோகிகளை' விரட்ட வேண்டிய கட்டாயமாம்! பிரபாகரன் தமிழ் மக்களின் வாக்குகளையும் தமிழினத்தின் அரசியல் எதிர்காலத்தையும் தன்னுடைய ஆயுளையும் எழுபது கோடிக்கு விற்ற கதை இவர்களுக்குத் தெரிந்திருந்தும் இன்றும் இவர்கள் முடிந்தவரைக்கும் கையைக் காலைப் பிடித்தாவது தமிழ் மக்களுக்கு எதையாவது வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்று நினைப்பவர்களைத் துரோகிகள் என்பது கோமாளிக் கூத்தே அன்றி வேறொன்றும் இல்லை.

எதிரிக்கு எதிரி நண்பன், முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்ற வியாக்கியானங்கள் தவிர, தமிழ் மக்களுக்கான உரிமையை வென்றெடுக்க முடியும் என்றோ, தமிழ் மக்களின் நலனுக்கு அனுகூலமானது என்றோ, எந்தக் காரணமும் இந்த ஆதரிப்புகளில் இல்லை. அவமானத்தால் ஏற்பட்ட பழி வாங்கும் உணர்வே அன்றி, தமிழ் மக்களைப் பற்றிய எந்தச் சிந்தனையும் இவர்களுக்கு இல்லை.

இன்றைய சூழலில் தமிழ் மக்களுக்கு சில தெரிவுகள் உள்ளன. தேர்தலை பகிஷ்கரிக்கலாம். அல்லது மகிந்த, சரத், விக்கிரமபாகு, சிவாஜிலிங்கம் ஆகியோரில் ஒருவருக்கு வாக்களிக்கலாம்.

இதில் தேர்தல் பகிஷ்கரிப்பு குறித்து யாழ்.ஆயர், பல்கலைக்கழக மாணவர் சங்கம் உட்பட பலரும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். இதுவரை காலமும் புலிகளுக்கு வக்காலத்து வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பேராசான் சிவத்தம்பியும் தற்

(16ம் பக்கம் பார்க்கவும்)

## ஒருபுறம்...

*(15ம் பக்கத் தொடர்ச்சி)*

போது, முன்பு ஆதரித்ததற்கு மானசீக பாவ மன்னிப்புக் கோரி, இனியும் மௌனமாக இருக்கக் கூடாது என்று பகிரங்கமாய் தெரி வித்து, யாருக்கும் வாக்களிப்பது சொந்த விருப்பம், ஆனால் பகிஷ்கரிப்பு வேண்டாம் என்றிருக்கிறார். பகிஷ்கரிப்பா? வாக்களிப்பா? என்பது பற்றிய சங்கரியரின் திறந்த கடிதம் இன்னமும் இணையத்தபாலில் வந்து சேரவில்லை.

பகிஷ்கரிக்க வேண்டும் என்பதற்கான பகிரங்க ஆதரவுக் குரல் எதுவும் பெரிதாகக் கிளம்பவில்லை. இரண்டுமே பேயும் பிசா சென்றும் வர்ணிக்கப்பட்டாலும், ஒரு பேயை யாவது அகற்ற வேண்டும் என்பதில் குறியாய் இருப்பது தெரிகிறது.

சென்ற தடவை பகிஷ்கரிக்கப் போன தால் ஏற்பட்ட விளைபயன் முள்ளிவாய்க்காலில் அறுவடை செய்யப்பட்டது. ஆனால், தற்போதைய கருத்துக்கணிப்புகள் சொல்வது உண்மையாயின், அது தேர்தல் வரை நீடிக்குமாயின், மகிந்தவினால் வடக்கு கிழக்கு வாக்குகளின் ஆதரவின்றியே வெல்ல முடியும். எனவே, பகிஷ்கரிப்பு கூட அதன் எதிர்பார்த்த பாதிப்புகளை ஏற்படுத்தாமல் போகலாம். தங்களை கிங்மேக்கர்களாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் தமிழர்களின் திமிரில் மண் விழவும் கூடும்.

மறுபுறத்தில் சிவாஜிலிங்கம் களத்தில் குதித்ததன் நோக்கமே சரத்திற்கு கிடைக்கக் கூடிய தமிழ் வாக்குகளைப் பிரிப்பது. 'தன் மானமுள்ள தமிழன் தமிழனுக்கே வாக்களிப்பான்' என்று கூறியிருந்தால், தன்மானமாவது மிஞ்சியிருக்கும். 'சரத்திற்கு வாக்களிக்க மாட்டான்' என்று கூறி, எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று தன் வேட்புமனுவின் நோக்கத்தை அவர் பகிரங்கப்படுத்தி விட்டார். சோழியன் குடுமி சும்மா ஆடாது. இருந்தாலும் அது எழுபது கோடியாக இருக்காது என்பது மட்டும் உண்மை.

சிவாஜிலிங்கம் களத்தில் குதித்தது தமிழ் நலன் சார்ந்தது இல்லை. இது விடயத்தில் புலன் பெயர்ந்த நாடுகளில் தமிழுணர்வு பொங்கி எழாததற்கு 'தமிழ் யாவாரிகளை ஆதரிப்போம்' என்று முயங்கிய முயக்கம் மூச்சை விட்டதும் காரணமாக இருக்கக் கூடும். யாரறிவார்? பொங்குதமிழர்கள் பொங்கி எழுந்து சரத்தை ஆதரிப்பதையிட்டுக் குமுறி, 'ஈனத்த மிழா! உனக்கு மானம் என்றொன்று உண்டோ? மானத் தமிழன் என்னை விட முள்ளிவாய்க் காலை மயானம் ஆக்கியவன் மேலோ?' என்று சிவாஜிலிங்கம் 'உடன்பிறப்புகளுக்கு கண்ணீர் மடல்' வரைந்தால் பயனேதும் இருக்கக் கூடும். சிவாஜிலிங்கம் விக்கிரமபாகுவுடன் சேர்ந்து ஏதோ உதவி ஜனாதிபதிக்கு போட்டியிடுவது போல பிரசாரம் செய்கிறாராம். தமிழ் அரசியலில் விதூஷகர்களுக்கு என்றுமே குறைச்சல் இருந்ததில்லை.

பகிஷ்கரிப்பும் சிவாஜிலிங்கமும் போனால் அடுத்தது...

இடதுசாரிகளில் பலர் உண்மையிலேயே இன, மொழி வேறுபாடுகளுக்கும் அப்பால் ஒன்றிணைந்து நியாயமான தீர்வுகளுக்காகப் போராடியிருக்கிறார்கள். இந்த வரிசையில் விக்கிரமபாகு போன்றவர்களும் சிங்களவர்களாக இருந்து கொண்டே, தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால், தமிழர்களின் ஏகபிரதிநிதிகள், கூட்டணியாகட்டும், புலிகளாகட்டும், என்றுமே தங்களுடைய சிங்கள இனவாத முத்திரை குத்தல்களால் அவர்களுடன் அன்னியப்பட்டே வந்திருக்கிறார்கள். சிங்களப் பெரும்பான்மைக்குள் பகிரங்கமாய் நீதிக்குப் போராடும் நேச சக்திகளை இனம் கண்டு அவர்களின் ஆதரவைப் பெறுவதை விட்டு, அவர்களைக் கேலியும் கிண்டலும் செய்தத ற்கான அடிப்படை இந்த யாழ்ப்பாணிய வாதம். இதனால் தான் இன்றுவரைக்கும் ஐ.தே.கட்சியின் கட்டிலில் சல்லாபம் செய்வதற்காக ஏறுவதற்கு இவர்கள் எவரும் தயக்கம் காட்டியதில்லை.

இந்த இடதுசாரிகள் அப்பழுக்கற்ற நேர்மையாளர்களாக இருந்தாலும், நடைமுறைச் சாத்திய ரீதியில் அவர்களால் தேசிய அளவில் பெரும்பான்மை பெற முடியாது. பெரும்பான்மை இனம் இரண்டு பெரிய கட்சிகளின் மாயைக்குள் மூழ்கிக் கிடப்பது மட்டுமல்ல, இடதுசாரியம் வரிந்து கட்டிக் கொண்டு தங்களுக்குள் குடுமிப் பிடிக் குஸ்தி பண்ணுவது பெரும் சாபக்கேடு.

எனவே, விக்கிரமபாகுவுக்கான ஆதரவு என்பது வாக்குகளை வீணடிக்கும் பகிஷ்கரிப்புப் போன்றதொன்றே.

எனவே மிஞ்சியிருப்பது இரண்டு பேய்கள் மட்டுமே. இதில் புலிகளை அழித்த பெருமையில் ரணிலை நசுக்கி விடலாம் என்ற நிலையில் இறுமாப்புக் கொண்டிருந்த மகி



ந்த, சரத்தை ஊதிப்பெருப்பித்த ஊடகங்களின் வித்தை கண்டு பயந்து, சரத்தை ஓரம் கட்டி அவமானப்படுத்த முயன்றது பாதிப்பை ஏற்படுத்தி நிற்கிறது. இது வழமையான மகிந்த ஸ்டைல். ஆட்சிக்கு வருவதற்காக எல்லோருடனும் ஒப்பந்தம் செய்து, பின்னால் அவர்களை ஒதுக்கி விட்டது நாங்கள் கண்டதே. இது குறித்து தாயகத்தில் மகிந்த பற்றி ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை ஒன்றிலும் குறிப்பிட்டிருக்கிறோம். (Dude… Where is the Roadmap to Peace!)

வாழ்நாளில் ஆட்சிக்கட்டில் ஏற முடியாத கஜனி ரணில், சரத் முதுகில் சவாரி செய்யும் முயற்சியாக மங்கள சமரவீரவின் ஆலோசனையின் பேரில் கனவுகளோடு சரத்தைக் களமிறக்கியுள்ளார். வன்னி வென்ற மாவீரன் நானே என்று இப்போது வெற்றியில் சரத் உரிமை கொண்டாடத் தொடங்கி விட்டார்.

இதுவரை காலமும் தலைவர் பங்கருக்குள் உயிருக்குப் பயந்து பதுங்கி இருக்க, தளபதிகள் உயிரைப் பணயம் வைத்து, பலரையும் பலி கொடுத்து வென்று வர, தலைவர் பங்கருக்குள் வைத்து மாவீரர் ஈகைச்சுடரும், நந்தான்றிதழும் என, பெற்ற வெற்றிக்கான உரிமையை 'தன் வழிநடத்தலில்' பெற்றதென தனதாக்கிக் கொள்வார். இந்தப் பாரம்பரியத்திற்கு பழக்கப்பட்ட புலி ஆதரவாளர்கள் வெறும் தளபதியான சரத்தை ஆதரிப்பது ஜீரணிக்கக் கஷ்டமானதொரு விடயம்.

ஒரு களமுனையில் பணியாற்றும் தளபதிக்கு வெற்றியில் பெரும் பங்குண்டு. களமுனையில் துருப்புகளுடன் நின்று உற்சாகமூட்டும் தளபதி என்பதிலும் தந்திரோபாயங்கள், வியூகங்களை வகுத்து ஐந்து முனைகளில் புலிகளை முடக்கி வென்றவர் என்பதிலும் சரத் மீது பலரும் மதிப்பு வைத்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், இதன் பின்னால் இரண்டு உண்மைகள் உள்ளன.

ஒன்று, புலிகள் தோல்வியடைந்ததற்கு, சரத்தின் தந்திரோபாயத்தை விட, புலிகளின் முட்டாள்தனம் முக்கியமான காரணம். 'உள்ளுக்க வரவிட்டு அடிக்கும்' தந்திரோபாயம் மட்டுமல்ல, புலிகளின் பலமே ஒரு வெறும் கற்பனை மீது கட்டப்பட்ட மாயை. ஒவ்வொரு தடவையும் இராணுவம் மூர்க்கமாக முன்னேறி, வடமராட்சி, யாழ்ப்பாணம், கிழக்கு, கிளிநொச்சி என ஒவ்வொன்றாக கைப்பற்றப்பட்ட போது, புலிகள் 'விட்டிட்டு ஓடிய' வரலாறு தான் உள்ளதே தவிர, 'நிண்டு அடி பட்ட' கதைகள் இல்லை. எனவே வெற்றியில் சரத்தின் வீரம் என்பதை விட, தலைவரின் முட்டாள்தனம் தான் முக்கியமானது.

மற்றது, புலிகள் இதுவரை நாள் தாக்குப் பிடித்ததற்கு காரணம், சிங்கள அரசுகளில் சரியான அரசியல் துணிச்சல் (Political will) இல்லாததே. புலிகளை அழித்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்களை எல்லாம் சிங்கள அரசுகள் கையாண்ட விதங்கள் சர்ச்சைக்குரியவை. ஜே.ஆர் புலிகளை அழிப்பதை விட, அமெரிக்காவின் கைப்பொம்மையாக இருந்து இந்தியாவை பலவீனப்படுத்துவதில் அக்கறையாக இருந்தார். எனவே புலிகள் அழிவதை விட, அவர்கள் தொடர்ச்சியாக உயிர் வாழ்வது ஜே.ஆருக்குத் தேவையானதாக இருந்தது. வடமராட்சித்தாக்குதலில் புலிகள் அழியும் தறுவாயில் இலங்கை அரசைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க புலிகளுக்கு உயிர் கொடுத்தது இந்தியத் தலையீடு. அதே புலிகளை வைத்தே இந்தியாவின் தமிழர்களுக்கான ஆதரவை இல்லாது செய்த குள்ளநரித்தனம் ஜே.ஆருடையது. பிரேமதாசாவுக்கு தெற்கில் ஜே.வி.பியின் பிரச்சனையைச் சமாளிக்க புலிகளின் நட்புறவு அவசியமானதாக இருந்தது. இந்திய இராணுவம் புலிகளை அழிக்கும் தறுவாயில் இருந்த போதும், பிரபாகரனைக் கொல்லாமல் விட்டதற்கு இந்திய அரசியல் தலைமையின் முடிவு காரணம் என்பதை இன்றும் பழைய தளபதிகள் தங்கள் ஞாபகக் குறிப்புகளில் எழுதுகிறார்கள். சந்திரிகா தலைமையில் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட போதும், கிளிநொச்சி மீதான தாக்குதல்களின் போது, வெளிநாட்டுத் தலையீடுகளே யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைக்குப் போக வைத்தது.

எனவே, புலிகளை அழிக்கும் தறுவாய்களில் எல்லாம், இந்தியத் தலையீடு, சர்வதேசத் தலையீடு என்பவற்றுக்குப் பணிந்து இலங்கை அரசுகள் பேச்சுவார்த்தைக்குப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டன. ஆனால், மகிந்த அரசு மட்டும் தான், புலிகள் அழிக்கப்பட்டால் தான் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்பதில் உறுதியாக இருந்தது. இந்தியாவின் அனுசரணையைப் பெற்றுக் கொண்டு, சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாது, இந்தியாவின் எதிரிகளான சீனா, பாகிஸ்தான், சர்வதேசங்களின் எதிரியான ஈரான், இஸ்ரேல் என எல்லோரையும் கைக்குள் போட்டுக் கொண்டு முழு அளவிலான யுத்தம் ஒன்றை மகிந்த அரசு நடத்தியது. இதே இடத்தில் சந்திரிகாவோ, ரணிலோ இருந்திருந்தால், மூதூரில் இருந்து புறப்படும் போதே, சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து புலிகளுடன் பேச்சுவார்த்தை என விடிய விடிய ராமர் கதைகளுக்குப் புறப்பட்டிருப்பார்கள்.

ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கான சரியான அரசியல் அடித்தளம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்த தலைமை மகிந்தவுடையது. ரணிலுக்கோ, சந்திரிகாவுக்கோ தளபதியாக சரத் இருந்திருந்தால், புலிகளை வென்றிருக்க முடியுமா? எனவே, இராணுவ வெற்றியை விட, அரசியல் வெற்றி தான் முக்கியமானது. இராணுவம் கேட்ட சகல வளங்களையும் மகிந்த அரசு வழங்கி அழிவுகளையும் அதனால் தென்பகுதியில் ஏற்பட்ட எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் யுத்தத்தை நடத்திய நிலையில் எந்தத் தளபதி இருந்தாலும், புலிகளின் மாயக்கோட்டையை இலகுவாகவே தகர்த்திருக்க முடியும்.

எனவே, தன்னுடைய நியாயமான பங்களிப்பை வலுப்படுத்தாமல், தன்னை மட்டுமே புலிகளை வென்ற மாவீரனாக சரத் காட்டிக் கொண்டிருக்கிறார்.

எனவே இந்த வன்னி வென்ற வீரனுக்கு அரசியல் ஆசை வந்தாலும், நுணலும் தன் வாயால் கெடும் என்பது போல, சிறுபான்மையினர் பற்றிக் கூறிய கருத்துக்கள் ஏற்கனவே சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன. அனுபவமின்மை காரணமாக, கோத்தபாயாவை யுத்தக் குற்றங்களில் மாட்டி விடப்போய் இராணுவத்தினரின் ஆதரவுக்கு ஆப்பு வைத்தது இன்னொரு உச்சம். இருந்தாலும், அரசியலுக்குள் நுழைவதற்கு எந்தக் கட்சிக்குள்ளும் சேராமல் பொதுவேட்பாளராக தன்னை அங்கீகரிக்க வைத்தது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம். குடும்ப ஆட்சி, ஊழல், மனித உரிமை மீறல்கள் என மகிந்தவின் அரசு மீது அதிருப்தி கொண்டவர்களை கட்சி பேதம் இன்றி ஒன்றிணைக்க இது உதவியுள்ளது.

ஆனால், அவருக்குப் பின்னால் அணி திரண்டு நிற்பவர்கள் யார்? நீலன் திருச்செல்வத்தின் ஆலோசனையில் சந்திரிகா சமஷ்டி குறித்து முன்வைத்த தீர்வுக்கு எதிராக கால் வாரிய ரணில். கருணாவைப் பிரிக்க வைத்ததற்கு தாங்கள் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தை நாடகம் தான் காரணம் என்று புலிகளை வென்றதற்கு உரிமை கோரிய ஐ.தே.க. தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சனை ஒன்று இல்லை என்று பகிரங்கமாகக் கூறி, வடக்கு கிழக்கு இணைப்பை நீக்குமாறு நீதிமன்றம் வரை சென்ற ஜே.வி.பி, அந்த தீர்ப்பை வழங்கிய தலைமை நீதிபதி, மகிந்த முதல் பிரபாகரன் வரைக்கும் வெட்கமில்லாமல் ஒப்பந்தம் செய்த ஹக்கீம், சரத் வந்தாலும், பிரச்சனை தீர்க்கப்படாது என்று கூறும் மனோ கணேசன்.

இவர்கள் எல்லாரும் சேர்ந்து, இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று கூறிய சரத்தை ஆதரிக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பவாதக் கூட்டத்தின் முக்கிய நோக்கமே, சரத்திற்கு இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பகிரங்க ஆதரவில் குளிர் காய்வது தான். இவர்கள் எல்லோருமே, சரத் ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக தங்களை ஆட்சியில் அமர்த்துவார், ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டுவார் என்று யானை பார்த்த குருடர்கள் போல சரத்தைப் பார்த்துப் புல்லரித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் தான் பிரதமர் என்று ரணில் பகல் கனவு காண, ஜே.வி.பி அப்படி எதுவும் இல்லை என்று காலை வார... புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைப்பார் என்று ஜே.வி.பி பகல் கனவு காண... எங் களுடன் செய்த ஒப்பந்தத்தை சரத் மதிப்பார் என நினைக்கிறோம் என்று மங்கள தன்னைத் தானே சமாதானப்படுத்த...

இவர்கள் எல்லோருமே சரத்தை அரச தலைவர்களின் கட்டளைகளை நிறைவேற்றும் தளபதியாகத் தான் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். சரத்தின் பாகிஸ்தான் நெருக்கத்தைப் பார்த்தால், முஷாரப் போன்றே சரத்தும் ஆட்சிக்கு வந்தால் அரசை இராணுவ மயப்படுத்தக் கூடும் என்பதை இவர்

*(17ம் பக்கம் பார்க்கவும்)*

## ஒருபுறம்...

*(16ம் பக்கத் தொடர்ச்சி)*

கள் மறந்து விடுகிறார்கள். சரத் இவர்களுடன் செய்த எந்த ஒப்பந்தமும் பகிரங்கப் படுத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல, அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் கிழித்தெறியப்பட மாட்டாது என்பதற்கான உத்தரவாதங்களும் இல்லை.

'சகல வல்லமைகளும் பொருந்திய' ஜனாதிபதி பதவிக்கு கட்சிப் பின்னணி இல்லாமல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், பதவிக்கு வந்ததும் முதல் வேலையாக தன் பதவிக்கு ஆப்பு வைத்து விட்டு, தங்கள் கையில் அதிகாரத்தை ஒப்படைப்பார் என்று எதிர்பார்க்கும் இந்தக் கூட்டத்தைப் பார்க்கும் போது, அந்தக் காலத்தில் கோவை மகேசன் பேசிய பேச்சுத் தான் ஞாபகம் வருகிறது. 'தம்பி பிரபாகரன் தமிழீழத்தைப் பெற்று அண்ணன் அமிர்தலிங்கத்தின் காலடியில் ஒப்படைப்பார்!'

சிறுபான்மையினர் தொடர்பான சரத்தின் நிலைப்பாடு தான் என்ன? எல்லாமே பகிரங்கமானவை. கனடிய நஷனல் போஸ்ட் பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியில் தமிழர்கள் போன்ற சிறுபான்மையினர் குறித்து அவர் வெளியிட்ட கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது. அகதிகள் மீள் குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாம் தமிழர்களுக்கு எதிரானவை. இன்று அவர் முதுகில் தொத்திக் கொண்டிருப்பவர்கள் எல்லோரும் தமிழர்கள் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்கள் யாவரும் அறிந்தவையே. அவர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட, இனப்பிரச்சனை குறித்து எதுவுமே இல்லை. அதுவும் கூட்டமைப்புடன் ஒப்பந்தம் செய்திருக்கிறார், கூட்டமைப்பு அவரை ஆதரிக்க முடிவு என்று தகவல் வெளியான பின்னால்!

'இப்படிக்கொத்த' கூட்டத்துடன், சந்திரிகாவின் தீர்வுப் பொதியைப் புலிகளுக்குப் பயந்து ஆதரிக்க மறுத்த சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு, இன்று சேர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்படுத்தி, தமிழ் மக்களுக்கு உரிமை பெற்றுத் தரப் போகிறதாம்.

கூட்டமைப்பு இன்று எதற்காக சரத்தோடு சோரம் போயிருக்கிறது? முதலாவது, ஐ.தே. கட்சியோடு ஒப்பந்தம் செய்வதில் தமிழர் கட்சிகளுக்கு ஒரு குஷி. தேர்தல் வரும் போது ஒப்பந்தம் செய்து, எதையோ சாதித்தது போல, தமிழர்களுக்கு கயிறு திரித்து விட்டு, தேர்தல் முடிந்து ஏமாற்றப்பட்டதும் 'சிங்களவனை நம்ப முடியாது' என்று குய்யோ முறையோ என்று புலம்புவது தான் வரலாறு. தேர்தலுக்கு முன்னான வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறப்பவையே என்பது முட்டாளுக்குக் கூட தெரியும். ஏமாற்றுக்காரர்களை நம்பினால், ஏமாறியவருக்கும் அதில் பொறுப்பு இருக்கிறது.

இரண்டாவது, சரத்திற்கு யாழ்ப்பாணத்தில் ஆதரவு இருப்பதாக கூட்டமைப்பு நம்புவது. சரத் பொன்சேகாவும் ரணிலும் யாழ்ப்பாணம் வரும் வரைக்கும் கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்பதை முடிவு செய்யவில்லை. யாழ்ப்பாணம் வந்த ரணில், கூட்டமைப்பின் ஆலோசனையிலேயே தாம் யாழ் வந்ததாகக் கூறி குட்டை உடைத்திருந்தார். எனவே, சந்திர மண்டலத்திற்கு நாயை அனுப்பியது போல, சம்பந்தன் சரத்தை யாழ்ப்பாணம் அனுப்பிப் பார்த்திருக்கிறார். நாடி பிடித்துப் பார்த்து ஆதரவு இருப்பதாக நினைத்து மதிலில் இருந்து (புலி வால் பிடித்த) பூனை குதித்திருக்கிறது.

மூன்றாவது, மகிந்தவுடன் டக்ளஸ், கருணா என ஒட்டிக் கொண்டிருப்பது. தாங்கள் மட்டும் தன்மானத்துடன் உரிமை கேட்டுப் போராடுவது போலவும் இவர்கள் எல்லாம் துரோகிகள் என்பதும் போலவும் தான் கூட்டமைப்பு பாவ்லா காட்டுகிறது. தமிழ்ச்செல்வனுக்கு கைகட்டிச் சேவகம் செய்ததை மறந்து, அன்று 'புலிகள் ஏக பிரதிநிதிகள்' என்று பிழைப்பு நடத்தியதையும் மறந்து, தங்களை தன்மானம் மிக்க உரிமைப் போராட்ட வீரர்கள் என்று காட்டிக் கொள்வதற்காக மகிந்த எதிர்ப்பைக் காட்டிக் கொள்வது.

ஆட்சி மாற்றம் என்கிறார்கள். ஆட்சி மாற்றம் வருவதற்கு அடிமைச்சாசனத்தில் கையெழுத்து வைத்த பின்னால், சரத் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சனைக்கு என்ன தீர்வு வைத்திருக்கிறார் என்பதை இவர்களால் சொல்ல முடியவில்லை. வெறும் ஆட்சிமாற்றம் என்ன செய்ய முடியும்? ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?

சரி. சரத் ஆட்சிக்கு வந்து தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யப் போவதில்லை என்பது மட்டுமல்ல, அவர் ஆதரவுக்காக தங்கியிருக்கும் ஐ.தே.க, ஜே.வி.பி போன்றவர்களும் எதையும் செய்ய விடப் போவதில்லை என்பதுதான் உண்மை. தமிழர்களுக்கு தீர்வு

**புலிகள் அழிந்தால்**
**தமிழனை சிங்களவன்**
**அழிச்சுப் போடுவான் என்பது தான்**
**இது வரை காலமும்**
**தமிழ்த் தேசியம் எங்களுக்குச்**
**சொல்லிதந்த கதை**

என்ற பேச்சு வந்ததுமே, தமிழர்களுக்கு நாடு அடைவு வைக்கப்படுகிறது என்று சிங்கள இனவெறியைக் கிளப்புவதில் ரணிலும் ஜே.வி.பியும் போட்டி போடக் கூடியன.

சரி, சரத் ஒரு தலைசிறந்த தளபதி தான். ஆனால் அவரது அரசியல் அனுபவம் என்ன? நாட்டின் சிறுபான்மை இனங்களின் ஆதரவு இன்றி பெரும்பான்மைப் பலம் பெற முடியாது என்ற நிலையில், இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமானது என்று வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொண்டாயிற்று. இப்போது தேர்தலில் குதித்ததும் ஞானோயம் பிறந்து, இன ஒற்றுமை பற்றிப் பேசுகிறார். பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சரத்தின் திட்டம் தான் என்ன? பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வருடத்திற்கா? மாதத்திற்கா? என்பது யாருக்கும் தெரியாது. அதற்கான பணம் எங்கிருந்து வரும் என்பதும் தெரியாது.

புலிகள் போன்று ஒரு முட்டாள்தனமான கும்பலை வெற்றி கொள்வது என்பது வேறு. பல்வேறு இனங்கள் உள்ள ஒரு நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்துவது என்பது வேறு.

சரி, கட்சி வேறுபாடு கடந்த பொது வேட்பாளர் தான். தற்செயலாகத் தோல்வியுற்றால், சரத்தின் அடுத்த திட்டம் என்ன? ஜெயலலிதா தோற்கும்போதெல்லாம் பங்களூருக்கு ஓய்வு எடுக்கச் செல்வது போல, அமெரிக்கா செல்வாரா? அல்லது நாட்டில் இருந்து, மகிந்தவுக்கு ஒரு பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாகச் செயற்படுவாரா?

தோல்வியுற்ற சரத்தை ஐ.தே.கட்சியோ, ஜே.வி.பியோ தற்போதையது போல தூக்கிக் கொண்டாடுமா? அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் சரத் எந்தக் கட்சிச் சின்னத்தில் போட்டியிடுவார்? ஐ.தே.கட்சியில் சேர்ந்து ரணிலுக்கு கீழே செயற்படுவாரா? அல்லது தனிக்கட்சி அமைப்பாரா?

ஒருவேளை சரத் வெற்றி பெற்றாலும், ஜே.வி.பியும் ஐ.தே.கட்சியும் எத்தனை நாளைக்கு ஒரே குடைக்குள் குளிர் காயப் போகின்றன? அடுத்த நாளே நாய் கடி, பூனைகடியாக ஆளையாள் கடித்துக் குதறத் தயாராக இருப்பார்கள். தோல்வியடைந்த கூட்டணியை எத்தனை நாளைக்கு ஒற்றுமையாக வைத்திருக்க முடியும்?

பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தினாலும், பெரும்பான்மை கிடைப்பதற்கான சாத்தியங்கள் உண்டா?

ஆட்சி மாற்றம் வேண்டுபவர்களுக்கு இந்த மாற்றுத் திட்டங்கள் பற்றி எதுவுமே தெரியாது. இந்தக் கேள்விகளுக்கு சரியான விடை இன்னமுமே சரத்தரப்பிலிருந்து கிடை க்கவில்லை.

சரி. அப்படியானால் மகிந்தவை ஆதரிக்க முடியுமா?

இலங்கையில் நடக்கும் மோசமான அடிப்படை மனித உரிமை மீறல்கள் சர்வதேச அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அமைச்சரே ஊடகவியலாளர்களால் தாக்கப்படுவதை முழு நாடுமே தொலைக்காட்சியில் பார்க்கிறது. ஒரு முழுமையான குடும்ப ஆட்சி அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஊழல் அரச இயந்திரத்தின் ஒரு செயற்பாடாகிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையைத் தாண்டிக் கொண்டிருக்கிறது.

தமிழர்களைப் பொறுத்தவரைக்கும் ஆயிரக்கணக்கில் உயிர் அழிவு வரைக்கும் சென்றது. யுத்தத்தின் பெயரால் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். லட்சக்கணக்கில் அகதிகளாக்கப்பட்டார்கள். சர்வதேசக் கண்டனங்களுக்குள்ளான, ஆதாரங்களுடனான யுத்தக் குற்றங்கள் நடைபெற்றன. இன்னும் எத்தனையோ ஆயிரம் பேர் சிறைகளில் வாடுகிறார்கள்.

ஒட்டுமொத்தத்தில் ஒரு ஊழல், அடக்குமுறைச் சர்வாதிகார அரசு செய்கின்ற சகல நடவடிக்கைகளும் மகிந்தவின் அரசில் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் எப்படி மகிந்தவுக்கு ஆதரவு வழங்க முடியும்?

நியாயமான, எந்த வித நியாயமான பதிலையும் தர முடியாத கேள்வி! இந்த இரண்டு பேய்களும் அரசு கட்டிலுக்காக மோதிக் கொள்ளும்போது, அதில் நாங்கள் ஏன் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்ற கேள்வி வலுவானது.

சரத்தையோ, மகிந்தவையோ ஆதரியுங்கள் என்று யாரால், எந்த முகத்துடன் தமிழ் மக்கள் முன் போய் நின்று கேட்க முடியும்? உண்ண உணவில்லாவிட்டாலும், சொந்தக் கூரையின் கீழ் மானத்துடன் வாழ்ந்து, யுத்தத்தினால் அகதிகளாகி மழைக்குள் கூடாரங்களுக்குள் உணவுக்கு வரிசையாக கையேந்தி நின்ற மக்களிடம், உங்களின் அவல நிலைக்கு காரணமான இருவரில் ஒருவருக்கு வாக்களியுங்கள் என்று எப்படி அறிவுறுத்த முடியும்?

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும்? தமிழ் மக்களுக்கு தெரிவு எதுவுமில்லை.

ஆனால், இங்கே தான் எங்கள் உணர்வுகளை உடைத்துக் கொண்டு கொஞ்சம் நாங்கள் பகுத்தறிவுடன் சிந்திக்க வேண்டும்.

இன்று எங்களுடைய பலம் என்ன?

தமிழ் அரசியலும் தமிழ் அரசியல் தலைமையும் புலிகளால் நலம் அடிக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்களின் பிரச்சனை தீர்க்கப்படா விட்டால், மீண்டும் ஆயுதப் போராட்டம் தலைதூக்குவதைத் தவிர்க்க முடியாது என்று வீராப்புப் பேசுவது விசிலடிச்சான் குஞ்சுகளைக் குஷிப்படுத்தப் பயன்படலாம். ஆனால் நடைமுறையில் சாத்தியமற்றது. தமிழர்களை எல்லாம் ஒன்றிணைத்து, ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து ஈழம் காண்பது எல்லாம் வெறும் 'கடல் கடந்த கனவு'.

இன்று அரசியல் ரீதியாக பலம் இழந்த நிலையில் சண்டித்தனம் பேசி எதையும் சாதிக்க முடியாது. அது கிளிநொச்சியில் தலைநகர் அமைத்திருந்த நேரத்தில் செய்திருந்தால், சமஷ்டியோடு தீர்வு கண்டிருக்க முடியும். பட்டுத்துகில் தான் வேண்டும் என்று அடம் பிடித்ததில் கோவணமும் இன்று பறிபோய் விட்டது. விட்டால் குடுமி என்று யுத்தம் செய்யப் போய் தமிழினம் மொட்டையடிக்கப்பட்டிருக்கிறது. எனவே, வீரியத்துடன் எங்கள் உரிமைகளைப் போராடி வெல்வோம் என்று நாங்கள் இன்னமும் வீம்பு பிடித்துக் கொண்டிருந்தால் மீண்டும் பேரழிவுப் பாதைக்கே எங்களைக் கொண்டு செல்லப் போகிறோம்.

தேர்தல் அரசியல் என்பது என்றைக்குமே நீதிக்கும் அநீதிக்குமான யுத்தமாய் இருந்ததில்லை. அது இதிகாசங்களில் மட்டும் தான் கற்பனையாய் இருந்தது. தர்மத்தின் வாழ்வு தனை சூது கவ்வும், கடைசியில் தர்மம் வெல்லும் என்பதெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்கள். தேர்தல் என்றுமே lesser of two evils என்று ஆங்கிலத்தில் சொல்வது போல இரண்டு கொடியவைகளில் ஒப்பீட்டளவில் குறைந்த கொடுமைத்தன்மையுள்ளதைத் தேர்ந்தெடுப்பது தான்.

ஒருபுறம் வேடன், மறுபுறம் நாகம் என்ற நிலையில் இரண்டு பேருமே உயிர் பறிக்கக் கூடிய நிலையில் எதை, எப்படி, ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது மிகவும் சிக்கலானது. எய்தவன் இருக்க அம்பை நோக முடியுமா என்று, யுத்தத்தை நடத்திய மகிந்தவா, கட்டளைகளுக்குப் பணிந்த சரத்தா என்ற கேள்வியில் பலரும் சரத்திற்கு ஆதரவு வழங்குகிறார்கள். ஆனால், சரத் தன்னை அம்பு என்று காட்டிக் கொண்டதில்லை. அவரும் தன்னை புலியைக் கொன்ற வேடனாகக் காட்டிக் கொள்வதில் தான் பெருமை கொள்கிறார்.

மகிந்த, சரத் என்ற இரண்டு மனிதர்களுக்கும் அப்பால், சிங்கள அரசியல் என்ற அமைப்பை நோக்கி எங்கள் பார்வையை விரிவுபடுத்த வேண்டும்.

புலிகள் அழிந்தால் தமிழனை சிங்களவன் அழிச்சுப் போடுவான் என்பது தான் இது வரை காலமும் தமிழ்த் தேசியம் எங்களுக்குச் சொல்லி வந்த கதை. ஆனால் புலிகளின் கொடுமை தாங்காமல் மக்கள் அதே சிங்கள இனத்திடம் அடைக்கலம் தேடி வந்த போது, தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள் அந்த மக்களைக் கொலை செய்யவும் தயங்கவில்லை. ஆனால், அபயம் தேடி வந்த மக்களை முகாம்கள் அமைத்து தங்க வைத்தது இந்த சிங்கள அரசு தான். லட்சக்கணக்கில் வந்த மக்களை அடைத்து வைத்தவுடன் நாஸிகளின் வதைமுகாம்களுடன் ஒப்பிட்டு இன அழிப்பு நடப்பதாகக் கூப்பாடு போட்டதும் அதே தமிழ்த் தேசியம் தான்.

இதில் இந்த மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாதபடி அடைத்து வைக்கப்பட்டதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

ஆனால்.. இந்த தமிழ்த் தேசியம் சொன்னது போல, அவர்கள் எல்லோருமே முழுமையான இன அழிப்புக்கு உள்ளானார்களா? இல்லை. அடைத்து வைக்கப்பட்ட, புலிகள் என்ற பெயரில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றாலும், பெரும்பாலானவர்கள் அடிப்படை வசதிகள் குறைவான நிலையிலும் பராமரிக்கப்பட்டார்கள். பிடிபட்ட புலிகள் பணத்தைக் கொடுத்து தப்பியோடும் அளவுக்கு நிலைமை இருந்ததே ஒழிய, விசவாயுக் கூண்டுக்குள் யாரும் கொல்லப்படவில்லை.

*(18ம் பக்கம் பார்க்கவும்)*

## ஒருபுறம்...
*(17ம் பக்கத் தொடர்ச்சி)*

இதற்கு சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்ததும் ஒரு காரணம். இலங்கையில் கடைசியாக நடைபெற்ற ஐந்து இனக்கலவரங்கள் ஐ.தே.கட்சி ஆட்சியிலேயே நடைபெற்றது. அதன் பின்னால் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னால், புலிகள் சிங்கள இடங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும், அரசாங்கம் ஒரு இனக்கலவரம் நடைபெறக் கூடாது என்பதில் அக்கறையாக இருந்தது.

சுதந்திரக்கட்சி தான் இனப்பிரச்சனைக்கான மூலமான சிங்களம் மட்டும் மசோதா, புதிய அரசியலமைப்பு, தரப்படுத்தல் என்பவற்றைக் கொண்டு வந்தது என்பது உண்மை. ஆனால், இடது சார்ந்த அதன் போக்கால், வடக்கில் வாழ்ந்த விவசாயிகளுக்குப் பயன்படும் விதத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் சட்டங்களையும் கொண்டு வந்தது அந்த அரசுகளே.

ஆனால், அரசியல் அமைப்பையே மாற்றக் கூடிய அளவுக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்ட ஜே.ஆரின் ஐ.தே. கட்சி என்ன செய்தது? இனிமேல் ஒருபோதுமே பிரச்சனை தீர்க்கப்பட முடியாதபடிக்கு, விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தி, நிறைவேற்று முறை ஜனாதிபதி முறையை விட்டுச் சென்றது. இன்று மகிந்த சர்வாதிகார ஆட்சி நடத்துகிறார் என்பதற்கு, ஒரு தனிமனிதனின் கையில் இத்தனை அதிகாரங்களைத் திணித்த ஜே.ஆரின் ஐ.தே.கட்சியும் காரணம் இல்லையா?

இன்று வரைக்கும் தமிழர் பிரச்சனையைத் தீர்க்க முடியாமல், அரசியலமைப்பில் மாற்றம் செய்ய முடியாமல் போனதற்கு அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒரு போதுமே சாத்தியமாக முடியாதபடி, சிறுகட்சிகள் அரசியல் பேரம் பேசும் நிலையை உருவாக்கிச் சென்றது அந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தானே.

கொள்கையில் உறுதியில்லாமல், குள்ளநரி வேலை செய்யும் ரணிலை நம்ப வேண்டுமா? அல்லது, தன்னுடைய சிங்கள ஆதிக்க உணர்வை வெளிப்படையாகவே காட்டும் மகிந்தவின் நேர்மையை மதிக்க வேண்டுமா?

மகிந்த இதுவரையும் தமிழர்களுக்கான தீர்வு ஒன்றை சரியான முறையில் முன்வைக்கவில்லை என்று எல்லோரும் தான் குற்றம் சாட்டுகிறோம். ஆனால், தன்னுடைய ஆட்சியின் ஸ்திரத்தன்மைக்கு அப்பட்டமான இனவெறியர்களான ஹெல உறுமய, ஜே.வி.பியில் தங்கியிருந்தால் எப்படி தீர்வை முன்வைக்க முடியும்? அப்படி ஒரு பேச்சு எழுந்தாலே, சிங்கள உணர்வைத் தட்டியெழுப்ப ரணில் ஓரமாய் காத்திருக்கிறார்.

மிகத்தீவிரமான இனவெறியர்கள் தான் பெரும் சமரசங்களுக்கு வந்திருக்கிறார்கள். இதற்கு சரியான உதாரணம், இஸ்ரேலின் முன்னைய பிரதமர் ஏரியல் ஷரோன். பெய்ரூட்டில் நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கான சூத்திரதாரி என்று குற்றம் சாட்டப்பட்ட அதே ஷரோன் தான் லிக்கட் கட்சி பாலஸ்தீனர்களுக்கான தீர்வுக்கு தடையாக இருக்கிறது என்று கூறி வெளியேறி புதிய கட்சியை அமைத்தார். தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் அரசு பெரும்பான்மை மக்களின் கைகளில் ஆட்சியை ஒப்படைத்தது. அதிதீவிரவாதிகள் எல்லாம் ஆட்சியின் போது, நடைமுறைச் சிக்கல்களை உணர்ந்து சமரசங்களுக்கு வந்திருக்கிறார்கள். இதைப் போல, மகிந்தவின் சிங்கள மேலாதிக்க உணர்வும் பாடங்களைக் கற்று சமரசங்களுக்கு வரக் கூடும்.

ஆனால், பச்சோந்தி ரணில் எந்தக் காலத்திலும் தமிழர்களுக்கான தீர்வு ஒன்றை முன்வைக்கப் போவதில்லை. காரணம், சிங்கள எதிர்ப்பலையை எதிர்த்து எந்தத் தீர்வையும் நடைமுறைப்படுத்தும் துணிச்சல் ரணிலுக்குக் கிடையாது.

**மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக, மாற்றத்தைக் கொண்டு வர நினைத்தால் மாற்றீடு அதை விட மோசமாக இருக்கக் கூடும்.**

இன்று பதின்மூன்றாம் திருத்தத்திற்கும் அப்பால் சென்று தீர்வு வழங்கத் தயார் என்று பகிரங்கமாகச் சொன்னது இதுவரைக்கும் மகிந்த மட்டுமே. மகிந்த ஒரு தடவையும் இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தம், தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்று மார் தட்டியதில்லை. வன்னிக்கு வந்தும் 'நாங்கள் ஒரு தாயின் பிள்ளைகள்' என்று தான் கூறிச் சென்றார்.

இன்று மீள் குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் குடியேற்றம், தடுத்து வைக்கப்பட்டோர் விடுவிப்பு என்றெல்லாம் மகிந்த செய்யும் போது, 'தேர்தலுக்காகச் செய்கின்றார்' என்று குற்றம் சாட்டுகிறோம். உண்மை. ஆனால், தேர்தல் முடிந்த பின்னால் மீண்டும் முகாம்களில் இவர்களை பிடித்து அடைத்து வைக்கவா போகிறார்கள்? கண்டி வீதி திறந்து விடப்பட்டு தங்குதடையின்றிய போக்குவரத்து மூலம் வடக்கில் பொருளாதார மேம்பாட்டுக்கான அத்திவாரம் ஒன்று இடப்பட்டிருக்கிறதே. தேர்தலின் பின்னால் இந்தப் பாதைகள் மூடப்பட்டு 'குடாநாட்டு மக்களை திறந்த சிறைச்சாலைக்குள் வைத்து பட்டினி போட்டுக் கொல்லவா' போகிறார்கள்?

தமிழனாக இருந்து கொண்டே, தமிழர்களுக்கு இத்தனை அநீதியும் அக்கிரமமும் அட்டூழியமும் அழிவும் இழைத்த பிரபாகரனை விட மோசமாகவா மகிந்த தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்திருக்கிறார்? வன்னி மண்ணில் வதை முகாம்களில் சித்திரவதை, திறந்த சிறையில் இருந்து தப்பிய மக்களைச் சுட்டுக் கொன்றது என புலிகள் செய்யாத எதைத் தான் சிங்கள அரசு செய்தது? வெள்ளைவான் கடத்தல், கொலைகள் பற்றிக் குமுறுகிறோம். 'உந்துருளியில் வந்த இனம் தெரியாதவர்கள்' எல்லாம் குடாநாட்டில் நடத்திய கொலைகள் யாருடையவை? மே 18ம் திகதிக்குப் பின்னால், எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டிக்கிறார்கள்? சிங்கள அரசைக் குற்றம் சாட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, முகாமில் விபசாரம் நடக்கிறது என்று அவலப்பட்டிருந்த எங்கள் மக்களையே அவமானப்படுத்தத் துணிந்தவர்கள் நாங்கள்.

எங்களுடைய எதிர்ப்பு அரசியலுக்கு நாங்கள் பெரிய விலை ஒன்றைச் செலுத்தியுள்ளோம். அந்த எதிர்ப்பு அரசியலை மீண்டும் தொடருவதா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும்.

இத்தனை மனித உரிமை மீறல்கள், ஊழல் குற்றச்சாட்டுக்களின் மத்தியிலும் தான் செய்யப் போவதைத் துணிச்சலாகச் சொல்லும் அளவுக்கு மகிந்தவுக்கு முதுகெலும்பு இருக்கிறது. தமிழர்களுக்கு ஒரு கதையும் சிங்களவர்களுக்கு ஒரு கதையும் சொன்னதும் கிடையாது.

தன்னுடைய கட்சிக்கு உள்ளேயே நடக்கும் கழுத்தறுப்பு, கால் வாரல், குத்துவெட்டுக்களை சமாளிக்க முடியாமல், தன் தலைமைப்பதவிக்கே அச்சுறுத்தல் ஏற்பட்ட நிலையில், இனப்பிரச்சனை பற்றி தெளிவான நிலைப்பாடு ஒன்றை சிங்களப் பெரும்பான்மைக்குப் பயந்து எடுக்க முடியாத அரசியல்வாதி தான் ரணில்.

ஐ.தே.கட்சியும், ஜே.வி.பியும் இன்று சரத்தை ஆதரிப்பது மகிந்தவை ஆட்சி கவிழ்க்கவே தவிர, வேறெந்த கொள்கை ஒருமிப்பிலும் அல்ல. சரத் ஜனாதிபதியாக வந்தாலும், சரத்துக்கு ஆதரவு வழங்க சொந்தக் கட்சி என்று எதுவும் இல்லை. தன்னுடைய திட்டங்களை நிறைவேற்ற தங்கியிருக்கப் போவது, இந்த சந்தர்ப்பவாதக் கூட்டணியைத்தான்.

இந்தக் கூட்டணி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது இருக்கட்டும். ஒரு அமைதியான ஆட்சியை நடத்த வழிவிடுமா? ஜே.வி.பி மகிந்தவின் அரசில் இருந்து கொண்டு நடத்திய கூத்துக்களை மறந்து விட முடியுமா?

மகிந்தவுக்கு வாக்களிப்பது என்பது இன்று நடைபெறும் ஊழல் ஆட்சிக்கோ, அடக்குமுறைக்கான அங்கீகாரம் அல்ல. அல்லது யுத்தக் குற்றங்கள் மீதான விடுவிப்பும் அல்ல. மனித உரிமை மீறல்களைக் கண்டு காணாமல் விடுவதும் அல்ல.

அன்று ஜே.வி.பியினர் கொன்றழிக்கப்பட்ட போது மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த மகிந்த அல்ல இவர். இவர் தமிழினத்தின் துயர் துடைக்க வந்த தெய்வமும் அல்ல. ஒரு மூன்றாம் தர அரசியல்வாதி. ஆனால், அந்த அரசியல்வாதிக்கு தனக்கு சரியென்றுபட்டதை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நிறைவேற்றத் தெரிந்திருக்கிறது. அந்த அரசியல்வாதியை தமிழினத்தின் நலனுக்காகப் பயன்படுத்துவது என்பது தமிழினத்தின் இன்றைய அரசியல் இயலாமையின் வெறும் வெளிப்பாடு மட்டும் தான்.

எங்களுக்குத் தெரிந்த நியாயப்படி, இது தான் இன்றைய அவல நிலையில் முன்னேற்றத்திற்கான ஒரு படியாக கருத முடிகிறது. மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக, மாற்றத்தைக் கொண்டு வர நினைத்தால் மாற்றீடு அதை விட மோசமாக இருக்கக் கூடும். அதிலும் சுயநலச் சந்தர்ப்பவாதக் கூட்டணி ஒன்று தன் தன் நலன்களுக்காகக் கூட்டுச் சேர்ந்து சரத்தின் முதுகில் சவாரி செய்கிறது. கூட்டமைப்பு உட்பட்ட அந்தக் கூட்டணிக்கு தமிழ் மக்களின் நலனில் எந்த அக்கறையும் இல்லை. முழுக்க முழுக்க தங்களின் தப்பிப் பிழைத்தலுக்காகவே (Survival) இந்தக் கூட்டம் சரத்தின் பின்னால் தொங்குகிறது.

இந்த தேர்தலில் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதை இந்தக் கோணத்தில் தான் பார்க்க முடிகிறது. ஆங்கிலப் பழமொழி போன்று, Known devils are better than unknown angels!

அதாவது, தெரியாத புனிதர்களை விட, தெரிந்த பேய் மேலானது!

இதற்கு சரியான உதாரணம், பிரான்சில் ஜாக் சிராக் ஜனாதிபதியாக தேர்தலில் நின்ற போது இருந்த நிலை. ஜாக் சிராக்கின் ஆட்சியில் சலிப்புற்ற மக்கள் இருபது வீதத்தினரே முதல் சுற்றில் வாக்களித்தாலும், இரண்டாவது சுற்றில் இனவாத தேசிய முன்னணியின் தலைவரை எதிர்கொண்ட போது, இனவாதத்திற்கு அங்கு இடமில்லை என் பதை நிரூபிக்க மீண்டும் சிராக்கிற்கே வாக்களிக்க வேண்டிய நிலை வந்தது. அப்போது பலரும் தாங்கள் விருப்பமில்லாவிட்டாலும் 'மூக்கைப் பிடித்துக் கொண்டே' வாக்களித்தார்கள்.

இதைப்போல, தமிழர்களும் தங்கள் தலைவிதியை நொந்து கொண்டு தலையில் கை வைத்துக் கொண்டே மகிந்தவுக்கு வாக்களிக்க வேண்டிய நிலை.

ஆனால், சமீபத்தியக் கருத்துக்கணிப்பு நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை. மகிந்தவை ஆதரிக்க வேண்டும் என்ற இந்த ஆதங்கத்துக்கு முரணானதாகத் தான் இருக்கிறது. வடக்குக் கிழக்கில் சரத்திற்கு ஆதரவு இருப்பதாகவும் நாடளாவிய அளவில் மகிந்தவுக்கே ஆதரவு இருப்பதாகவும் கருத்துக் கணிப்பு கூறுகிறது.

இதுதான் இன்னமும் பயத்தைக் கூட்டுகின்ற விடயமாக இருக்கிறது. அதாவது வடக்குக் கிழக்கில் சரத்திற்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தாலும், மகிந்த ஜனாதிபதியாகும் நிலை தமிழர் நிலையை இன்னமும் மோசமடையச் செய்யும்.

தனக்கு ஆதரவளிக்காத மக்களுக்கு தீர்வு வழங்க வேண்டிய தேவை எந்த அரசியல்வாதிக்கும் இல்லை. ஆதரவு வழங்காமல் எந்த முகத்தோடு தமிழ் மக்கள் எங்களுக்கு உரிமை தா என்று கேட்க முடியும்? தோற்றவனைத் தூக்கிக் கொண்டாடினால், வென்றவனிடம் கருணை காட்டு என்று கூடக் கேட்க முடியாது.

இது தான் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பயமூட்டும் விடயமாகத் தென்படுகிறது.

மகிந்தவை ஆதரிப்பது தான் தமிழர்களுக்கு தற்போதைய நிலையில் நியாயமானது என்றவுடனேயே, துரோக முத்திரைகளுடன் ஆளாளுக்கு இங்கே அலையக் கூடும். இது எல்லாம் பழைய பருப்பு. இது எல்லாம் கடந்து நாங்கள் எங்கேயோ வந்து விட்டோம்.

தற்போது ஆரம்பத்தில் கூறிய விடயத்திற்கு வருவோம். அதாவது தேர்தல் முடிந்த பின்பான நிலை. சரத் வென்று விட்டால் புலி ஆதரவாளர்கள் தேசியத் தலைவர் உயிர் பெற்றெழுந்த மகிழ்ச்சியோடு ஆரவாரமாய் கொண்டாடுவார்கள். மாற்றுக் கருத்தினர் யாழ்ப்பாணிகளைத் திட்டித் தீர்ப்பார்கள்.

மகிந்த வெற்றி பெற்றால், மாற்றுக்கருத்தினர் ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். படைப்பாளிகள் சங்கம் 'வடபகுதி மக்கள் தமிழினத்திற்கு துரோகம் இழைத்து விட்டார்கள்' என்று அறிக்கை விடும்.

இங்கே ஒரு விடயத்தை தெளிவாக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கட்டுரையே எழுதப்பட்டது.

தாயகம் ஆரம்பிக்கப்பட்ட காலம், புலிகளால் தமிழ் மக்களின் குரல் வளை நெரிக்கப்பட்டிருந்த காலம். சொந்த மண்ணில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த நாடுகளிலும் புலிக் காடையர்களின் அடாவடித்தனங்களும் அராஜகங்களும் தலை விரித்தாடிய காலம். 'ஊருக்கு வா, கவனிக்கிறம்' என்ற மிரட்டலையும் பொருட்படுத்தாமல், தமிழ் மக்கள் மீதான இந்த அடக்குமுறை அழிய வேண்டும் என்பதற்குக் குரல் கொடுப்பது தான் தாயகத்தின் நோக்கமாக இருந்தது. அந்த நேரத்தில், 'உங்கட தீர்வு என்ன?' என்பது தான் புலிகளின் கேள்வியாக, கேலியாக இருந்தது. (அன்றைக்கு எங்களிடம் தீர்வு கேட்டுக் கேலி செய்தவர்கள், இன்று தமிழ் மக்களுக்கு வழங்கிய தீர்வு தான் 'சரத்திற்கு ஆதரவு வழங்க எடுத்த முடிவு'.)

எங்களுடைய நோக்கம் தமிழ் மக்களுக்கு தலைமை வழங்குவதல்ல. தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற்கான தேவையை, அது புலிகளின் ஆக்கிரமிப்பிலும் தமிழ்த் தேசிய வெறியிலும் மறக்கப்பட்டுப் போகாமல் இருப்பதற்கான குரலை தொடர்ந்தும் எழுப்புவதும் தான் எமது நோக்கமாய் இருந்தது.

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ, இன்று மகிந்தவினால் அது சாத்தியமாகியிருக்கிறது. புலிகள் ஆயுத முனையில் மக்களை வாக்களிக்காமல் தடுத்ததைப் போலில்லாமல், இன்று ஜனநாயக முறையில் இலங்கையில் ஒரு ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கக் கூடிய வல்லமையை தமிழ் மக்கள் கொண்டிருக்கிறார்கள். ஒரு வளரும் நாட்டுக்குரிய தேர்தல் மோசடிகள் நடந்தாலும், இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது கிடை

(24ம் பக்கம் பார்க்கவும்)

# “70களில் பிரபாகரன் எமக்கெல்லாம் ஒரு ஹீரோ”

## ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் - ஐயர்

**ஐயர் அவர்களின் வரலாறு ஈழப்போராட்டத்தின் வரலாற்றின் பிரதான பகுதி! ஈழப் போராட்டத்தின் பரிணாமத்தை அவரின் சாட்சியிலிருந்தே புரிந்துகொள்ளலாம். சமூக வரம்பையும்,கொலைக் கரங்களையும் இன்னும் இன்னொரன்ன தடைகளையும் மீறி இறுதியில் இடதுசாரியத்தோடு தன்னை இணைத்துக் கொண்டவர். பிரபாகரனோடு இணைந்து ஈழப் போராட்டத்தை ஆரம்பித்தவர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE), தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT), தீப்பொறி என்று தனது சரணடைவிற்கும் விட்டுக்கொடுப்பிற்கும் அப்பாலான போராட்டத்தை இறுதிவரை நடத்தியவர். ஐயர் கூறும் உண்மைகள் வெளிச்சத்தில் கடந்த காலத்தின் ஒரு பகுதி குறித்த புரிதலைப் வந்தடையலாம் என நம்புவோம்.**

நடந்தவை எல்லாமே ஒரு கனவு போல் இன்றும் மறுபடி மறுபடி எனது நினைவுகளை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. வன்னி குறு நிலப்பரப்பில் ஆயரமாயிரமாய் மக்கள் பலியெடுக்கப்பட்ட போதெல்லாம், செய்வதறியாது திகைத்துப் போனவர்களுள், உணர்வின்றி, உணவின்றி உறக்கம் தொலைத்து அதிர்ச்சியடைந்த ஆயியமாயிரம் மனிதர்களுள் நானும் இன்னொருவன். தம்பி என்று அழைக்கப்பட்ட பிரபாகரனுடன் முதன் முதலில் உருவாக்கிக் கொண்ட அமைப்பின் மத்திய குழுவில் நானும் ஒருவன் என்ற வகையில் இழப்புக்கள் எல்லாம் இன்னும் இறுக்கமாய் எனது இதயத்தை அறைந்தது. 1970ஆம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்கவின் சுதந்திரக்கட்சியின் தலைமியிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வருகிறது. என்.எம்.பெரேரா என்ற ரொஸ்கிய வாத இடதுசாரி நிதியமைச்சராக நியமிக்கப்படுகிறார்.



தமிழகத்திலிருந்து வருகின்ற பெரியாரின் எழுத்துக்களைப் படித்ததில் எனக்கு நாத்திகவாததில் நாட்டம் ஏற்படுகிறது. பிராமணக் குடும்பத்தில் பிறந்த எனக்கு எனது சுற்றத்திலிருந்து எதிர்ப்புக்கள் வருகின்றன.

எனது இருபதுகளில் ஏற்படுகின்ற இளைஞனுக்கே உரித்தான நாட்டங்களிலிருந்தெல்லாம் விடுபட்டு புரட்சி போராட்டம் என்பன குறித்துச் சிந்திக்கிறோம். இடதுசாரியம் குறித்தும் மார்க்சியம் குறித்தும் அறிந்திராத நாம் தமிழ்ப் பேசும் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்து விட்டிருந்த அடக்குமுறைகளை எதிர்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது.

இந்த நிலையில் 1970 இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகின இணைந்து இலங்கையில் ஒர் அரசை அமைத்துக் கொள்கின்றன. 1972ஆம் ஆண்டு தமிழ் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதியை கட்டுப்படுத்தும் வகையில் இனவாரியான தரப்படுத்தல் சட்டமூலத்திற்கான மசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டுகிறது. இது 1973 இல் அமுலுக்கு வருகிறது. இதே வேளை 1971 இல் பௌத்த மதம் தேசிய மதமாகப் பிரகடனப் படுத்தப்படுகிறது. இதே வேளை 1972 இல் இலங்கை குடியரசாகவும் பிரகடனப்படுத்தப் படுகிறது. இந்தக் குடியரசில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்களுக்கு எந்த உத்தரவாதமும் வழங்கப்படவிலை என்பது தவிர இனவாரியான தரப்படுத்தல் என்பது திறமையுள்ள தமிழ் மாணவர்கள் கூட பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையை உருவாக்கின்றது. இதற்கு முன்னதாக 1958இல் தமிழ் பேசும் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களின் வடு இன்னமும் ஆறியிருக்கவில்லை.

இதனால் விரக்தியுற்ற தமிழ் இளைஞர்கள் தமிழ் மாணர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கின்றனர். சத்தியசீலன், சிவகுமாரன் போன்றோர் முன்னின்று உருவாக்கிய இந்த அமைப்பில் நானும் எனது ஊரைச் சேர்ந்தவர்களும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

பல ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் ஈடுபடுகிறோம். இதே வேளை 1972 இல் இலங்கை குடியரசு நாடாகிய போது நிகழ்ந்த எதிர்ப்புப் போராட்டங்களில் நானும் குலம் என்ற எனது நண்படும் தீவிரமாகப் பங்கெடுக்கிறோம். பெரும்பாலான இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் தமிழரசுக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. சத்தியாக்கிரகப் போராட்டங்கள், ஊர்வலங்கள், கறுப்புக்கொடிப் போராட்டங்கள் எனப் பல போராட்டங்களில் தீவிர பங்காற்றுகிறோம். இவ்வேளையில் தமிழரசுக் கட்சிக்கும் மாணவர் பேரவைக்கும் அடிப்படையிலிருந்த முரண்பாடென்பது, செயற்பாட்டுத் தளத்திலேயே அமைந்திருந்தது, மாணவர் பேரவை கூட்டணியின் செயற்பாடு தீவிரமற்றதாக இருந்ததாகக் குற்றம் கூறினர்.

இந்த நேரத்தில் நாமெல்லாம் தூய தேசியவாத சிந்தனையுடனேயே செயற்பட ஆரம்பித்தோம். எமக்குத் தெரிய சண்முகதாசனின் மாவோயிசக் கட்சி போன்றன தீவிர இடதுசாரிக் கருத்துக்களுடன் வெளிவந்திருந்தாலும், தேசியப் பிரச்சனையில் அவர்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. தமிழ் பிரச்சனைகள் பற்றிப் பேசுவதெல்லாம் அண்ணாதுரை, கருணாநிதி, தமிழர சுக்கட்சி என்பன என்பதே எமக்குத் தெரிந்திருந்தவை.

குடியரசு தின எதிர்ப்புப் போராட்ட நிகழ்வுகளை ஒட்டி சுமார் 42 பேர் சிறைப்படுத்தப்படுகின்றனர். சேனாதிராஜா, காசியானந்தன் வண்ணையானந்தன் உள்பட பலர் இலங்கை அரசால் சிறைப் பிடிக்கப்படுகின்றனர். அத்ற்கு முன்னதாக அரச சார்பானவர்களின் வீடுகள் முன்னால் குண்டெறிதல், பஸ் எரிப்புஇ அரச வாகன எரிப்பு போன்ற சிறிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இது தவிர குடியரசு தினத்தன்று தொடர்ச்சியாக மக்கள் ஆதரவுடனான ஹர்த்தால் கடையடைப்பு என்பன தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இடம்பெறுகின்றது.

இதே வேளை சிவகுமாரன் சோமவீர சந்திரசிறீ என்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை அவரின் தீவிர தமிழ் விரோத நடவடிக்கைகளுக்காக கொலை செய்வதற்கு பல தடவை முயற்சிக்கிறார். தவிர யாழ்ப்பாண முதல்வராக இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தரான துரையப்பாவைக் கொலைசெய்ய இரண்டு மூன்று தடைவைகள் முயற்சிசெய்கிறார். இவையெல்லாம் தோல்வியிலேயே முடிவடைகின்றன.

இவேளையிலெல்லாம் நான் ஒரு ஆதரவாளர் மட்டத்திலான செயற்பாடுகளையே மேற்கொண்டேன்.

அதே வேளை வட்டுக்கோட்டை எம்.பீ ஆகவிருந்த அரச ஆதரவாளரான தியாகராஜா என்பவரைக் கொலை செய்ய முயற்சித்த ஜீவராஜா என்பவர் தீவிரமாகத் தேடப்படுகிறார். அவர் எமது ஊரான புன்னாலைக் கட்டுவனுக்குத் தலைமறைவாகும் நோக்கத்தோடு வருகிறார். அப்போது நானும் குலம் என்பவரும் அவருக்கு பாதுகாப்பு ஏற்படுகளைச் மேற்கொண்டு தலைமறைவாக வாழ்வதற்கு உதவிபுரிகின்றோம். கிராமத்திற்குக் கிராமம் பொலிசாரும், உளவாளிகளும் தமிழ் உணர்வாளர்களை வேட்டையாடித்திரிந்த அந்தக் காலகடம் எதிர்ப்புணர்வும், வீரமும் நிறைந்த உற்சாகமான வாழ்க்கைப்பகுதி. அவரூடாக பிரான்சிஸ் அல்லது கி.பி.அரவிந்தனும் எமக்கு அறிமுகமாகிறார். ஜீவராஜா, பிரான்சிஸ், சிவகுமார், மகேந்திரன் ஆகியோர் எமது இடத்திலிருந்தே கோப்பாய் வங்கிக் கொள்ளையை மேற்கொள்ளப் போகிறார்கள்.

**தமிழ் நாட்டிற்கான போக்குவரத்து வசதிகளுக்காக பிரபாகரன் மட்டுமல்ல அனைத்து அரச எதிர்ப்பாளர்களும் குட்டிமணி, தங்கத்துரை போன்றோரைச் சார்ந்திருக்கவேண்டிய நிலையே ஏற்பட்டது.**

இந்தக் கொள்ளையின் போது பொலீசாருடன் ஏற்பட்ட போராட்டத்தில் சிவகுமாரன் சயனைட் வில்லைகளை அருந்தித் தற்கொலை செய்துகொள்கிறார். ஜீவராஜா கைது செய்யப்படுகிறார். பிரான்சிஸ் தப்பி வந்து விடுகிறார்.

இதே வேளை செட்டி, பத்மநாதன், சிவராசா, ரத்னகுமார் ஆகிய நால்வரும் அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து தப்பிவருகிறார்கள். அந்த நேரத்தில் இலங்கை அரச அமைச்சர்களை வரவேற்று அழைத்து வந்த அருளம்பலம் என்பவரின் ஆதரவாளரான குமாரகுலசிங்கம் என்பவரைக் கொலை செய்ததன் அடிப்படையிலேயே செட்டி உட்பட்ட இவர்கள் கைது செய்யப்பட்டனர். செட்டியை பொறுத்தவரை எதிர்ப்புப் போராட்ட, வன்முறைப் போராட்ட உணர்வுகளுக்கு அப்பால் தனிப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபாடுள்ளவராகவே காணப்பட்டார். பல தனிப்பட்ட திருட்டுக் குற்றச் செயல்களுக்காகத் தேடப்பட்டவர். அரசியலுக்கும் செட்டிக்கும் ஆழமான தொடர்புகள் ஏதும் இருந்ததில்லை. அவர் சிறுவயதாக இருக்கும் போதே சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டவர். அரசிய தொடர்பு என்பது வெறும் தற்செயல் நிகழ்வே.

செட்டியைப் பற்றி எமக்கு அப்போது பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை ஆனால் அவர் எம்மைப் பற்றி அறிந்து கொண்டு எமது ஊருக்கு எம்மைத் தேடி வருகிறார். எமது ஆதரவைக் கோருகிறார். அப்போது செட்டியும் ரத்னகுமாரும் அங்கு வருகின்றனர்.

அங்கு வந்தவர்கள் இலங்கை அரச படைகளுக்கு எதிராகப் போராடுவதற்குத் துப்பாக்கி தேவை என்றும் அது சாத்தியமாவதற்கு ஆயுதங்கள் தேவை என்றும் கூறுகின்றனர். செட்டி அந்த நோக்கத்திற்காக தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஒரு லட்ச ரூபாய்களைக் கொள்ளையிடுகிறார். அந்தக் கொள்ளைப் பணத்துடன் படகு மூலமாக அவர் இந்தியாவிற்குச் செல்கிறார்.

இதே வேளை பிரபாகரனின் சொந்த இடமான வல்வெட்டித்துறை இந்திய இலங்கைக்கு இடையிலான கடத்தல் வியாபாரத்தின் பிரதான மையமாக இருந்தது. இதன் காரணமாகவும் தமிழரசுக் கட்சி மற்றும் சுயாட்சிக் கழக நவரத்தினம் போன்றோரின் செல்வாக்குக் காரணமாகவும் இயல்பாகவே இப்பிரதேசம் அரச எதிர்ப்புணர்வுடையதாக அமைந்திருந்தது. இங்கு கடத்ததல் தொழிலில் முன்னணியிலிருந்த தங்கத்துரைஇ குட்டிமணி போன்றோர் மாணவர் பேரவையின் ஆதரவாளர்களாகச் செயற்பட்டனர். இவர்கள் கடத்தலை முழு நேரத் தொழிலாகக் கொண்டிருந்தாலும், அரசிற்கு எதிரான அரசியற் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்தனர்.

சிறுவனாக இருந்த பிரபாகரன் குடியரசு தினத்தை ஒட்டி ஒரு அரச பேரூர்ந்து ஒன்றை எரிப்பதற்கு முயற்சித்துத் தப்பித்ததால் அவரும் தேடப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறார். அப்போதெல்லாம் பிரபாகரனுக்கு பதினாறு அல்லது பதினேழு வயது தான் நிரம்பியிருக்கும். பிரபாகரன் கடத்தல் தொழிலில் ஈடுபடவில்லையாயினும் அரச எதிர்ப்பு விவகாரங்களில் குட்டிமணி, தங்கத்துரையுடன் தொடர்புகளைப் பேணிக்கொள்கிறார்.

குறிப்பாக தமிழ் நாட்டிற்கான போக்குவரத்து வசதிகளுக்காக பிரபாகரன் மட்டுமல்ல அனைத்து அரச எதிர்ப்பாளர்களும் குட்டிமணி, தங்கத்துரை போன்றோரைச் சார்ந்திருக்கவேண்டிய நிலையே ஏற்பட்டது.

தேடப்படும் நிலையில் குட்டிமணியைச் சந்தித்து அவருடன் பிரபாகரன் தமிழ் நாட்டிற்குத் தப்பிவருகிறார். இதேவேளை எம்முடன் தங்கியிருந்த செட்டியும் இந்தியா செல்கிறார். அவ்வேளையில் செட்டி பிரபாகரனைச் சந்திக்கிறார்.

பிரபாகரனைப் பொறுத்தவரை முழுநேரமாக அரச எதிர்ப்பு வன்முறை அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தை குட்டிமணி, தங்கத்துரையிடம் முன்வைக்க அவர்கள் கடத்தல் தொழிலைத் தொடர்ந்தவண்ணமிருந்தனர். இவ்வேளையில் செட்டியும் ஆயுதம் வாங்கி இலங்கை அரசிற்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார். அவ்வேளையில் தான் பிரபாகரன் செட்டியுடன் இணைந்து செயற்படும் முடிபிற்கு வருகிறார். சுமார் பதினெட்டுவயதாகும் போது தம்பி என்று அழைக்கப்பட்ட பிரபாகரன் இம்முடிபை எடுக்கிறார்.

அவ்வேளையில் உலகத் தமிழர் பேரவையைச் சார்ந்த ஜனார்தனனின் தொடர்பு பிரபாகரனிற்கு ஏற்படுகிறது.

*(20ம் பக்கம் பார்க்கவும்)*

## 70களில்...

*(19ம் பக்கத் தொடர்ச்சி)*

இதே வேளை தமிழ் நாட்டில் தங்கியிருந்த தமிழரசுக் கட்சியைச் சார்ந்த ராஜரட்ணம் என்பவரின் தொடர்பு பிரபாகரனுக்கு ஏற்படுகிறது. குடியரசு தின எதிர்ப்புப் போராட்டங்களின் போதான வன்முறை நிகழ்வுகளில் தேடப்பட்டவர்களுள் ராஜரட்ணமும் ஒருவர். அவர்தான் பிரபாகரனுக்கு கரிகால் சோழன், புலிக் கொடி போன்ற சரித்திர நிகழ்வுகளைப் போதிக்கிறார். அவர் தான் இந்த அடிப்படைகளிலிருந்து தமிழ் புதிய புலிகள் என்ற பெயரை முன்வைத்து அமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்குகிறார். பிரபாகரன் இந்த ஆலோசனைகளால் ஆட்கொள்ளப்படுகிறார்.

இதன் பின்னர் பிரபாகரன் இலங்கைக்கு செட்டியுடன் திரும்பவந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானிக்கிறார். இதனை தங்கத்துரை குட்டிமணியிடம் கூறியபோது, அவர்கள் செட்டி கொள்ளைக்காரன், கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் அவருடன் தொடர்புகளை வைத்திருக்க வேண்டாம் என அறிவுறுத்துகின்றனர். ஆனால், பிரபாகரனோ அவர்கள் தொடர்ந்து கடத்தல் தொழிலில் ஈடுபடுவதற்காகவே இவ்வாறு நியாயப்படுத்துகின்றனர் என்று கூறி செட்டியுடன் நாடு திரும்புகிறார். இலங்கைக்கு வந்த பிரபாகரன் சிலரைச் சேர்த்துக்கொண்டு யாழ்ப்பாண மேயராகவிருந்த துரையப்பாவைக் கொலைசெய்யவேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுகிறார்.

அவ்வேளையில் தான் இன்பம், செல்வம் போன்ற சில இளஞர்களைப் பிரபாகரன் இணைத்துக்கொள்கிறார். இன்பம் செல்வம் இருவரும் பின்னர் இராணுவத்தினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்கள்.

இவ்வாறு பிரபாகரன் துரையப்பாவை கொலைசெய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போதுஇ செட்டி பொலீசாரால் கைது செய்யப்படுகிறார். அவர் வைத்திருந்த கொள்ளைப் பணத்தில் கார் ஒன்றை வாங்கி தனது ஊரினுள்ளேயே உலாவித் திரிந்ததால் பொலீசாரின் கண்ணுக்குள் அகப்பட்டு விடுகிறார், இதனாலேயே கைதும் செய்யப்படுகிறார்.

இதன் பின்னர் பிரபாகரன் தனக்குத் தெரிந்தவர்களைச் சேர்த்துக்கொண்டு துரையப்பாவைக் கொலைசெய்யும் முயற்சியில் வெற்றி பெறுகிறார். இதில் ஈடுபட்டவர்கள், பிரபாகரன், கிருபாகரன், கலாவதி, நற்குணராஜா என்ற நால்வருமே. அவ்வேளையில் தமிழரசுக்கட்சியின் உணர்ச்சிகரப் பேச்சுகளால் உந்தப்பட்டுப் பல இளைஞர்கள் துரையப்பாவைக் கொலைசெய்ய வேண்டும் என்ற முடிபிற்கு வந்திருந்தனர். துரையப்பாவைப் பொறுத்தவரை உரிமைகளை விட அபிவிருத்தியே முதன்மையானது என்ற கருத்தைக் கொண்டிருந்தவர். இதனால் இலங்கை அரசின் அடக்குமுறைகளை கண்டுகொண்டதில்லை. இன்றைய டக்ளஸ் தேவானந்தாவின் அதேவகையான நிலைப்பாட்டை அன்றே கொண்டிருந்தவர். இந்த அடிப்படையில் பொலீசாரின் அடக்குமுறைகளுக்கும் துணை போனவர். பல்வேறுபட்ட இளைஞர்கள் இந்த முயற்சியில் தன்னிச்சையாக ஈடுபடலாயினர். இப்போதெல்லாம் இக்கொலைகளை நாம் நியாயப் படுத்துவதென்பது ஆயுதக் கலாச்சரத்தை அறிமுகப்படுத்துவதாகவே அமையும் ஆனால் அன்றோ நிலைமை மாறுபட்டதாக இருந்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த, மிகுந்த பாதுகாப்புடன் வாழ்ந்த துரையப்பாவைக் கொலைசெய்தல் என்பது ஒரு சமூக அங்கீகாரமாகவே கருதப்பட்டது.

பல இளைஞர்கள் இந்த முயற்சியில் குழுக்களாகவும் தனியாகவும் ஈடுபட்டிருந்த போதும் கொலையை வெற்றிகரமாக நிறைவேற்றியவர் இவர்கள் நால்வரும் தான். இவர்கள் நால்வருமே 20 இற்கு உட்பட்ட வயதுடையவர்களாகவே இருந்தனர்.

ஆனால் இக்கொலையை நிறைவேற்றியவர்கள் யார் என்பது வெளியுலகிற்கும் பொலிசாருக்கும் தெரியாத இரகசியமாகவே இருந்தது. பின்னதாக கலாபதியையும் கிருபாகரனையும் பொலீசார் கைதுசெய்துவிட்டனர். இவ்வேளையில் பிரபாகரன் தனது வீட்டில் தங்கியிராததால் தப்பிக்கொண்டார் என்றே சொல்லவேண்டும். இவ்வேளையிலேயே இதில் தொடர்பற்ற பலர் கைது செய்யப்படுகின்றனர், குறிப்பாக சந்ததியார் போன்ற இளைஞர் பேரவை முக்கியஸ்தர்களும் கைது செய்யப்படுகின்றனர். இந்த வேளையில் பிரபாகரனுடன் சார்ந்த அனைவரும் கைதுசெய்யப்படுகின்றனர். பழைய தொடர்புகள் அனைத்தையும் இழந்த தேடப்படும் நபராகவே காணப்படுகிறார்.

இவ்வேளையில் தான் எம்மைப்பற்றி அறிந்து கொண்ட பிரபாகரன் எம்மைத் தேடி எமது ஊருக்கு வருகிறார். முதலில் எமது ஊரைச் சேர்ந்த ராகவனைச் சந்திக்கிறார். அவரின் ஊடாக என்னையும் குலம் என்பவரையும் தொடர்புகொள்ள முயற்சிக்கிறார். செட்டி தான் எமது தொடர்புகள் குறித்துத் தெரியப்படுத்தியதாகவும் கூறுகிறார். இவ்வேளையில் செட்டி தொடர்பாக நாம் முழுமையாக அறிந்திருந்தோம். இதனால் செட்டியின் தொடர்பாளராகப் பிரபாகரன் அறிமுகமானதால் நாம் அவரைது தொடர்புகளை நிராகரித்திருந்தோம்.



**துரையப்பா கொலையில் தொடர்புடைய நால்வரில் கலாவதியும் கிருபாகரனும் கைதுசெய்யப்பட பற்குணம் என்பவர் தமிழ் நாட்டிற்குத் தப்பிச்சென்று விடுகிறார். பிரபாகரன் மட்டுமே இலங்கையில் இருக்கிறார்.**

அந்த வேளையில் பிரபாகரனுக்கு உணவிற்கும் தங்குவதற்கும் எந்த வசதியுமற்ற நிலையிலேயே காணப்பட்டார். சில நாட்களின் பின்னர் மறுபடி ராகவனுடன் வந்த பிரபாகரன், எம்முடன் பேசவிரும்புவதாகத் தெரிவித்தார்.

அப்போது தான் முதன் முதலாகப் பிரபாகரனைச் சந்திக்கிறேன். இங்கிருந்துதான் பிரபாகரனுடனான வரலாறு ஆரம்பமாகிறது.

பிரபாகரனைச் சந்தித்த போது, செட்டியிடம் சில பலவீனங்கள் இருந்தாலும் அவர் துணிச்சல் மிக்கவரும்இ வீரமுள்ளவரும் என்பதால் அவருடன் இணைந்து செயற்பட்டதாகக் கூறுகிறார். பலவீனங்களை நிவர்த்தி செய்துகொண்டால் செட்டியைத் தான் தனது தலைவனாக ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறுகிறார். நாமும் அவருடன் இணைந்து செயற்பட ஆரம்பிக்கிறோம். துரையப்பா கொலையில் தொடர்புடைய நால்வரில் கலாவதியும் கிருபாகரனும் கைதுசெய்யப் பட பற்குணம் என்பவர் தமிழ் நாட்டிற்குத் தப்பிச்சென்று விடுகிறார். பிரபாகரன் மட்டுமே இலங்கையில் இருக்கிறார்.

அவ்வேளையில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் இந்தியாவிலிருந்து மயிலிட்டி என்ற இடத்திற்கு வருகிறார். இவரும் தேடப்படுபவராக இருந்ததால் இந்தியாவில் தலைமறைவாகியிருந்தார்.

அவ்வேளையில் இளைஞர் பேரவையில் ஆதரவளாரான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் குமரகுரு என்பவர் பிரபாகரனை இந்தியாவிற்கு அனுப்புவதாக உறுதியளித்திருந்தார்.

ஆனால் காண்டீபன் இலங்கைக்கு வந்ததும், பிரபாகரனை இந்தியவிற்கு அனுப்புவதற்குப் பதிலாக காண்டீபனை இந்தியாவிற்கு அனுப்பிவைக்கிறார். கொலையில் நேரடியாக ஈடுபட்ட தன்னை அனுப்பாமல் காண்டீபனை அனுப்பிய இந்த நடவடிக்கை காரணமாக பிரபாகரன் கூட்டணியினர் மீது வெறுப்படைந்து மறுபடி எம்மிடம் வருகிறார். அதன் பின்னர் தான் இந்தியாவிற்கு இனித் தலைமறைவாகப் போவதில்லை என முடிபிற்கு வந்து எம்முடன் இணைந்து அரசியல் வேலைகளில் ஈடுபடப்போவதாகக் கூறுகிறார். பிரபாகரனுக்குத் தெரிந்தவர்கள் சிலர்இ நான், குலம், ராகவன், அனைவரும் இணைந்து சிலரது ஆதரவுடன் புத்தூர் வங்கிக் கொள்ளையில் ஈடுபடுகிறோம். பிரபாகரன், செட்டியின் உறவினரான செல்லக்கிளி, குமரச்செல்வம் ஆகியோர் நேரடியாக வங்கிக்குள் சென்று கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

அப்போது கிடைத்த பணம் எனது பொறுப்பிலேயே வைக்கப்பட்டிருந்தது. அதில் ஈடுபட்ட இருவர் தமக்குக் குடும்பச் சுமை இருப்பதாகவும் தமக்கு பண உதவி செய்தாலே முழு நேரமாக இயங்க முடியும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். அவர்களுக்கும் ஐந்தாயிரம் ரூபாய்கள் வழங்கப்பட்டன. அவ்வேளையில் நான்இ ராகவன் தவிர்ந்த ஏனையோருக்கு கடவுள் பற்று இருந்தது. குறிப்பாகப் பிரபாகரன் மிகுந்த கடவுள் பக்தி உடையவராகவும், சாஸ்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொண்டவராகவும் காணப்பட்டார். இதனால் பிரபாகரனின் முன்மொழிவின் பேரில் செல்லச்சன்னதி கோவிலில், வங்கிக்கொள்ளைப் பணத்தில் ஒரு அன்னதானம் வழங்கப்பட்டது. என் போன்றவர்களுக்கு மார்க்சிய தத்துவங்கள் குறித்துத் தெரிந்திராவிட்டாலும், கடவுள் மறுப்பு என்பது பெரியாரியக் கொள்கைகளூடான தாக்கத்தினால் ஏற்பட்டிருந்தது. இதனால் இந்தச் செல்லச்சனதிக் கோவில் நிகழ்வை முற்றாக மறுத்திருந்தேன். குலம், நான் இராகவன் மூவரும் தான் இதை முழுமையாக எதிர்த்தோம்.

வேடிக்கை என்னவென்றால் இவ்வேளையிலும் கூட நான் தொழில் ரீதியாக கோவிலில் பிராமணராக இருந்தேன் என்பதுதான்.

எது எவ்வாறாயினும் பிரபாகரன் அப்போது எமக்கெல்லாம் ஒரு ஹீரோ போலத் தான். துரையப்பா கொலையை வெற்றிகரமாக முடித்தவர் என்பது தான் இதன் அடிப்படைக் காரணம்.

ராகவன் புத்தூர் வங்கிக் கொள்ளையில் ஈடுபடவில்லை. இது கூட ஒரு கடவுள் மறுப்பின் காரணமாகத் தான். வங்கிக் கொள்ளைக்குத் தேவையான துப்பாக்கிரவைகளை வாங்குவதற்காக பிரபாகரன் ராகவனை வேறொரு இடத்திற்கு அனுப்பி வைக்கிறார். அவ்வேளையில் அங்கு கோவில் திருவிழா நடை பெற்றுக்கொண்டிருந்தது. அப்போது அங்கிருந்த ஒருவர் ராகவன் கடவுள் இல்லை என்று சொல்வதால் அவரைத் தீக்குளித்துக் காட்டுமாறு கேட்டிருக்கிறார். அவ்வாறு நடந்த வாக்குவாததிலெல்லாம் ஈடுபட்டதால் பிரபாகரன் ஆத்திரமடைந்திருக்கிறார். போன வேலையில் ஈடுபடாமல் வேறு வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று ராகவனை சில காலம் நீக்கி வைத்திருந்தார். இதனாலேதான் ராகவன் புத்தூர் வங்கிக் கொள்ளையில் கூடப் பங்குபற்றவில்லை. ஒரு சில நாட்களுக்கே விலகியி ருந்த ராகவன் மீண்டும் இணைந்து கொள்கிறார்.

இதன் பின்னர் இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிபிற்கு வருகிறோம். புளியங்குளம் காட்டில் ஒரு இடத்தையும் தேர்ந்து கொள்கிறோம். அங்குதான் எமது பயிர்சிகளை ஆரம்பிக்கிறோம். இந்த முகாமில் முழு நேரமாக பங்கெடுத்துக் கொண்டவர்கள் நானும் பிரபாகரனும் மட்டும்தான். மற்றவர்கள் பகுதி நேரமாக அங்கு பயிற்சிக்கு வந்து போவார்கள்.

அவ்வேளையில் எமது குழுவிற்கான மத்திய நிர்வகக் குழு ஒன்றை அமைத்துக் கொள்கிறோம். அக்குழுவில் நான், பிரபாகரன், குமரச்செல்வம், பட்டண்ணா, சின்னராசு என்கிற உதய குமார் என்ற ஐந்து பேரும் அங்கம் வகிக்கிறோம். அப்போது பருமட்டான திட்டம் ஒன்றினை முன்வைக்கிறோம்.

1. இலங்கை அரசிற்கு எதிரான ஆயுதப் போராடம்.
2. தமிழீழம் கிடைத்த பின்னர் தான் இயக்கம் கலைக்கப்படும்.
3. இயக்கதில் இருப்பவர்கள் காதலிலோ பந்த பாசங்களிலோ ஈடுபடக்கூடாது.
4. இயகத்திலிருந்து விலகி வேறு அமைப்பில் இணைந்தாலோ, அல்லது வேறு அமைப்புக்களை ஆரம்பித்தாலோ அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

இவையெல்லாம் அன்று எமக்கு நியாயமான சுலோகங்களாகத் தான் தெரிந்தன. இவற்றின் அடிப்படைகளே இன்று ஆயிரமாயிரம் உட்கொலைகளை உருவாக்கி ஈழப் போராட்டத்தில் இரத்தம் உறைந்த வரலாற்றை உருவாக்கும் என்று நாமெல்லாம் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஈழப் போராட்ட வரலாறு குறித்து வேறுபட்ட காலகட்டங்களில் வேறுபட்ட பிரசுரங்கள் வெளிவந்துள்ள போதிலும், அவை அனைத்தும் ஏதாவது ஒரு அரசியல் பின்புலத்தை நியாயப்படுத்தும் நோக்கிலேயே வெளிவந்துள்ளன. நான் சொல்லப் போவதெல்லாம் ஈழப் போராட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே. ஏனைய அமைப்புக்களும் போராட்டங்களும் கூட இன்னொரு கோர வரலாறைக் கொண்டிருப்பார்கள் என நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை நான் சாட்சியாக முன்மொழியத்தக்க அனைத்து அரசியல் நிகழ்வுகளையும், வரலாற்றையும் உண்மைச் சம்பங்களை முன்வைத்து எழுத்துருவாக்குவதை இன்றைய கடமையாக எண்ணுகிறேன். என்னோடு பங்களித்த ராகவன், குலம், கிருபாகரன், கலாபதி உள்ளிட்ட அனைவரும் இது முழுமை பெறத் தமது பங்களிப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

**(இரண்டாம் பகுதி)**

70 களின் நடுப்பகுதியில் எமக்குத் தெரிந்தவையெல்லாம் ஆயுதங்களைச் சேகரித்துக்கொள்வதும் எதிரியை அழித்துவிடுவதும் தான். சந்திகளும் சாலைத் திருப்பங்களும் இருள் சூழ்ந்து கோரமாய்த் தெரிந்த ஒரு காலம்! எங்காவது ஒரிடத்தில் ஒருசில மணி நேரத்திற்கு மேல் தரித்திருக்க முடியாத மரண பயம். மரணத்துள் வாழ்தல்

*(21ம் பக்கம் பார்க்கவும்)*

## 70களில்...

*(20ம் பக்கத் தொடர்ச்சி)*

என்பதைத் தமிழ் உணர்வுக்காக நாமே வரித்துக்கொண்டோம்.

மயானமும், கோவில்களும், பாடசாலைகளும், தோட்டங்களும், வயல் வரப்புக்களும் தான் எமது உறங்குமிடம். பல காத தூரங்களை நடந்தே கடந்திருக்கிறோம்! எங்கள் சைக்கிள்கள் கூட எம்மோடு உழை த்து உழைத்து இரும்பாய்த் தேய்ந்து போயின!! முட்களும், புதர்களையும், கற்களும் பல தடவைகள் எமது பாதணிகளாகியிருக்கின்றன. குக் கிராமங்கள், அடர்ந்த காடுகள் என்று எல்லா இடங்களுக்குமே எமது தமிழ் உணர்வு அழைத்துச் சென்றிருக்கிறது.

இவ்வேளையில் தான் எமது மத்திய குழு அமைக்கப்படுகிறது. அதன் பருமட்டான திட்டம் வழி முறை இதுதான்:

1. இலங்கை அரசிற்கு எதிரான ஆயுதப் போராடம்.
2. தமிழீழம் கிடைத்த பின்னர் தான் இயக்கம் கலைக்கப்படும்.
3. இயக்கதில் இருப்பவர்கள் காதலிலோ பந்த பாசங்களிலோ ஈடுபடக்கூடாது.
4. இயகத்திலிருந்து விலகி வேறு அமைப்பில் இணைந்தாலோ, அல்லது வேறு அமைப்புக்களை ஆரம்பித்தாலோ அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

நாம் உருவாக்கிய இந்த மத்திய குழு தமிழ்ப் புதிய புலிகள்(TNT) என்ற பெயருடனேயே இயங்குகிறது.

எமது சூழல், அரசியல் வறுமை, தமிழரசுக் கட்சியின் உணர்ச்சிப் பேச்சுக்கள், சிங்களப் பேரின வாததின் கோரம் என்று எல்லாமே எம்மை சுற்றி நிற்க எமக்கு நியாயமாகத் தெரிந்தவை தான்

இந்தக் கோஷங்கள். நீண்ட அனுபவங்களைக் கடந்து தொலை தூரம் வந்துவிட்ட பின்னர்இ இந்தச் சுலோகங்கள் கூட எனக்குக் கோரமாய்த் தான் தெரிகின்றன.

அரசியல் திட்டமென்று நாமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த இந்தச் சுலோகங்கள் எல்லாம் பின்னதாக ஆயிரமாயிரம் போராளிகள் கொன்று போடப்படுவதற்கு ஆதாரமாக அமையும் என்பதை நாமெல் லாம் எதிர்பார்த்திருக்கவில்லை. எவ்வாறாயினும் முதல் இயக்கப் படுகொலையை செட்டி தான் ஆரம்பித்து வைத்தார் எனலாம்.

அனுராதபுரம் சிறையிலிருந்து தப்பி, செட்டி, கண்ணாடி பத்மநாதன், சிவராசா, ரத்னகுமார் ஆகிய நால்வரும் காடுகள் வழியாக வந்து கொண்டிருந்த வேளையில் அவர்களிடையே ஒரு வாக்குவாதம் ஏற்படுகிறது. அதெல்லாம் அரசியல் விவாதமா என்ன? செட்டி இன்னும் கொள்ளையடித்துப் பணம் சேர்க்க வேண்டும் என்ற வகையில் நடந்து கொள்ள அதைப் பத்மநாதன் எதிர்த்திருக்கிறார். இதனால் அவர் காட்டிக் கொடுக்கலாம் என்ற பயத்தில் பத்மநாதனை ஏனைய மூவரும் செட்டியின் வழிநடத்தலில் காட்டுக்குள்ளேயே கொன்று போட்டுவிட்டு அங்கேயே பிணமாக்கி எரித்துவிட்டு வந்திருக்கின்றனர்.

கண்ணாடி பத்மநாதன் சற்று வேறுபட்டவர். அவர் இதற்கு முன்னதாக குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளியல்ல. வானொலி திருத்தும் கடைவைத்து நடத்தி வந்தவர். கண்ணாடி பத்மநாதன் கொலைகளுக்காக் கைது செய்யப்படவில்லை. அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களுக்காகக் கைதானவர். குற்றச் செயல்களிலிருந்து விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிபதை இவர் எதிர்த்திருக்கலாம். இவர் சகோதரப் படுகொலைகளைக் கூட எதிர்த்தவர் என்று நான் அறிந்திருக்கிறேன். பூநகரிக் காட்டுக்குள் நிகழ்ந்த இந்தக் கோரம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிக்கிறது என்பது தமிழினத்தின் சாபக்கேடு.

இந்தக் கொலை தொடர்பாகப் பிரபாகரனிடம் நான் கேட்டபோது கண்ணாடி பத்மநாதன் காட்டிக்கொடுக்கலாம் என்ற பய த்தின் அடிப்படையிலேயே கொன்றதாகத் தன்னிடம் செட்டி சொன்னதாக எனக்குச் சொன்னார்.

எங்கோ தெருக் கோடியில், உள்ளூரிலேயே அறியப்பட்டத மூலையில், கால்படாத கிராமங்களில் எல்லாம் இருந்த இளைஞர்கள், பெண்கள் எல்லாம் உலக வல்லரசுகளின் செய்திகளில் ஈழப் போராளிகளாகவும், உலகின் மிகப்பெரிய கெரில்லா இயக்கமாகவும் பேசப்படுகிற ஒரு சூழல் பிரபாகரனின் விட்டுக்கொடாத உறுதியில்ருந்தே கட்டியமைக்கப்பட்டது எனலாம். பல தடவை அவர் தனித்து யாருமற்ற அனாதையாகியிருக்கி



றார். நண்பர்களை இழந்து தனிமரமாகத் தவித்திருக்கிறார். உண்ண உணவும், உறங்க இடமுமின்றி தெருத் தெருவாக அலைந்திருகிறார்.

இவையெல்லாம் அவரைப் போராட்டத்திலிருந்து அன்னியப் படுத்திவிடவில்லை. இறுக்கமான உறுதியோடு மறுபடி மறுபடி போராட்டத்திற்காக உழைத்திருக்கிறார் என்பதை அறிந்தவர்களில் நானும் ஒருவன்.

துரையப்பா கொலை நிகழ்ந்து, எல்லாருமே கைது செய்யப்படுகின்றனர். பொலீசாரும் உளவுப் படையினரும் பிரபாகரனை வேட்டையாட அலைகின்றனர்.

துரையப்பா கொலையின் பின்னதாக காங்கேசந்துறையில் தான் தம்பி பிரபாகரன் தலைமறைவாக வாழ்கிறார். ஏனையோரின் கைதுக்குப் பின்னர் அவர் அங்கு வாழ முடியாத நிலை. அவரது ஊரான வல்வெட்டித்துறையோ வடமராட்சியோ அவர் கால்வைப்பதற்குக் கூட நினைத்துப் பார்க்க முடியாத நிலையிலிருந்தது. போலிசார் வலைவீசித் தேடிக்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தினூடே பயணம் செய்வதென்பதே முடியாத காரியமாக இருந்தது. இந்த நிலையில் தான் செட்டியிடம் முன்னர் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் எமது ஊரான புன்னாலைக்கட்டுவனை நோக்கி வருகிறார்.

அவ்வாறு அவர் வரும் போது அவரிடம் ஒரு சல்லிக் காசு கூட செலவுக்கில்லை. அன்று அவர் உணவருந்தியிருப்பார் என்பது கூடச் சந்தேகமே. அவருடைய சிறிய தொடர்பாளர்கள் கூடக் கைது செய்யப்பட்டுவிட்டனர். எந்த அடிப்படை வசதியுமின்றி அனாதரவான நிலையிலேயே நாம் அவரைச் சந்திக்கிறோம்.

எம்மிடம் வந்த பிற்பாடு முன்னைய தொடர்புகளைச் சிறிது சிறிதாக ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறோம்.

எமக்குத் தெரிந்தவர்கள் எல்லாம் இளைஞர்கள் மட்டும் தான். அவர்கள் அனைவருமே கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். பணம் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. நான் ஒருவன் மட்டும் தான் கோவிலில் பூசை செய்துகொண்டிருந்தேன். அப்போது எனது தொழிலை நிறுத்திவிட்டு முழுநேரப் போராளியாகத் தீர்மானித்திருந்தேன். பின்னர் எமது நடவடிக்கைகளுக்குத் தேவைபடும் பணத்தைச் சேகரித்துக் தற்காலிகமாகப் பெற்றுக் கொள்வதற்காக நான் எனது பிராமணத் தொழிலைத் தொடர்வதாகத் தீர்மானித்தேன்.

இதற்கு மேலாக எனது வீட்டிலிருந்த நகைகளை அடகு பிடித்தே போராளிகளின் போக்குவரத்துச் செலவு, புத்தூர் வங்கிக் கொள்ளைக்கான திட்டமிடல் பணம் போன்ற செலவுகளைச் சமாளித்துக் கொண்டோம். இதே போலஇ துரையப்பா கொலையின் திட்டமிடலை மேற்கொள்வதற்காக பற்குணம் தனது தங்கையின் நகைகளை அடகுபிடித்தே பணம் திரட்டிக்கொண்டார். சில வேளைகளில் பிரபாகரன் ஒரு வேளை மட்

**தமிழீழம் மட்டும் தான் ஒரே சிந்தனையாக் இருந்தது. அதற்கான இராணுவத்தைக் கட்டியமைப்பது தான் தனது கடமை என எண்ணினார். இதற்கு மேல் எதைப்பற்றியும் அவர் சிந்திதது கிடையாது.**

டுமே ஏதாவது உணவருந்தித் தான் வாழ வேண்டிய நிலை இருந்தது. எனது வரலாற்றுப் பதிவில் வருகிற இன்னொரு அத்தியாயத்திலும் பிரபாகரன் தனிமைப்பட்டுப் போ- கிற இன்னொரு சந்தர்ப்பமும் பதியவுள்ளேன்.

இந்த எல்லா இக்கட்டான சூழலிலும் பிரபாகரனின் உறுதி குலையாத மனோதிடம் கண்டு நான் வியப்படந்திருக்கிறேன். பலர் அவர் பின்னால் அணிதிரள்வதற்கும் இது காரணமாக அமைந்திருக்கிறது எனலாம். பிரபாகரனும் நானும் பெரிதாகப் படித் திருக்கவில்லை. பிரபாகரன் பழகுவதற்கு இயல்பானவர். ஒரு குறித்த இயல்பான தலைமை ஆளுமை கூட இருந்ததை மறுக்க முடியாது.

என்னை பொறுத்த வரை ஆரம்பத்தில் எம்மோடு இணைந்த பலர் மிகத் தவறான சொந்த நலனை முதன்மைப் படுத்தியவர்களாகவே காணப்பட்டனர். புத்தூர் கொள்ளைப் பணத்தில் ஜெயவேல் மற்றும் ராஜ் ஆகியோருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தாம் முழு நேரமாக இயங்குவதானால் தமது குடும்பதைப் பராமரிக்க இந்தப் பணத்தை அவர்கள் கோரினர். இவர்களில் ராஜ் என்னசெய்கிறார் எங்கிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. ஜெயவேல் மரணமடைந்திருக்க வேண்டும்.

20 வயது கூட நிரம்பாத இளஞன் தம்பி பிரபாகரன். மற்ற இளைஞர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவது, பெண்கள் பின்னால் அலைவது, சினிமாவுக்குச் செல்வது, புகைப்பிடிப்பது, மது அருந்துவது ஏன் தமது எதிர்காலம் குறித்துச் சிந்திப்பது போன்ற எல்லா இளம் பிராயத்தின் இயல்பான பழக்கவழக்கங்கள் எதிலுமே பிரபாகரனிற்கு நாட்டமிருக்கவில்ல்லை. சினிமாக் கூடப் பார்பதில்லை. கதைப் புத்தகங்கள் கூட வாசிப்பதில்லை. துப்பாக்கிகளும் ஆயுதங்களும் வருகின்ற படங்கள் என்றாலோ புத்தகங்கள் என்றாலோ மட்டும்தான் அவர் அவை பற்றிச் சிந்திப்பார். தமிழீழம் மட்டும் தான் ஒரே சிந்தனையாக் இருந்தது. அதற்கான இராணுவத்தைக் கட்டியமைப்பது தான் தனது கடமை என எண்ணினார். இதற்கு மேல் எதைப்பற்றியும் அவர் சிந்திதது கிடையாது. எப்போதுமே தனது சொந்த வாழ்க்கை குறித்தோஇ அரசியல் வழிமுறை குறித்தோ சிந்திதது கிடையாது.

*அடுத்த இடழில் தொடரும்*

*நன்றி: இனியொரு*


ACES TUTORING

Flexible and Affordable Tutoring Plans to Choose From

**Math, Science, Grades 6 to 12**

*Tutors follow school curriculum and use supplementary materials as well*

Offering the Following Locations: Brampton, Mississauga, Markham, Scarborough, & North York

**Call: (647) - 868 - 6475**
**(416) - 471 - 9136**

*Students improve and excel at school through tutoring. These students will be the* ***aces*** *of*



## மீண்டும்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கியிருந்த குடியிருப்புகளை அரசுடமையாக்கும் அரசு முடிவு என உள்நாட்டமைச்சிலிருந்து மறுநாள் இன்னொரு செய்திவந்தது. அக்குடியிருப்புகளில் குடியேற்றப்படப் போகின்றவர்கள் தமிழர்களல்ல மாறாக சிங்களவர்களாகத்தான் இருக்கப்போகிறார்கள் ஏனெனில் தமிழர் பிரதேசங்களில் இருக்கும் குடியிருப்புகளில் முன்னர் இருந்தவர்களான தமிழர்கள் மீளக் குடியமரத் தடையில்லையெனில் அவற்றை அரசுடமையாக்கும் தேவையும் இருந்திருக்காதே!

வடக்கு கிழக்கு மலையகம் என்று தமிழர் செறிந்து வாழ்ந்தால்த்தானே தனிநாட்டுக்கோரிக்கை எழ வாய்ப்பிருக்கும். அதில்லாது நாடு பூராகவும் சிங்களவர்கள் பரந்து வாழ்ந்தால் அது சிங்களநாடு என்றுதானே ஆகிவிடும் என்பதே சிங்களத் தேசியத்தின் அடிப்படை சிந்தனை! அதன்பின்னர் தமிழருக்கு தனிநாடென்ற கோசம் எப்படி எழும்? இலட்சக்கணக்காண தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள். இலட்சக்கணக்காணவர்களை அகதி முகாமுக்குள் முடக்கியாகிவிட்டது. சிங்களவர்கள் தமிழர் பிரதேசங்களில் குடியேறும் வரையில் அவர்களை அங்கு வைத்திருந்தாலே காரிய சித்தி என்பதே அவர்கள் இலக்கு! முகாம்களுக்குள் இருக்கும் முதியவர்கள் அதிகூடியது இன்னும் பத்து வருடங்களுக்குள் மாண்டுவிடுவார்கள். இனியோரு போராட்டம் எழாதவாறு இளைஞர்களாகப் பார்த்து கைதுசெய்து அவர்கள் உயிர்களைத் தட்டிவிட்டால், அடுத்தசந்ததி எழுந்து வருவதற்கு இன்னும் எழுவது வருடமாவது இடைவெளி இருக்கிறது. பிறகென்ன இனி இலங்கை தனிச் சிங்களதேசந்தான்! இதுதான் இவர்களின் கணக்கு, இதுவே தொடரும் நடவடிக்கைகள் சொல்லும் சொல்லாத சேதி!

இதனை முறியடிப்பதுதான் எம்முன்னேயுள்ள முதன்மையான செயற்பாடாக இருக்கவேண்டும். சுயாட்சியையும் சுய நிர்ணயத்தையும் அடையமுன் எமது புராதன வாழ்விடங்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்திட வேண்டும். அதற்கு பிரதானமாகத் தேவைப்படுவது எமது ஒற்றுமையே! சிங்கள அரசில் இணைந்துள்ள தமிழர்களை எமது அழுத்தங்களால் விழித்தெழச் செய்யவேண்டும். தமிழர் பகுதிகளில் இடம்பெறப்போகும் சிங்கள குடியேற்றங்களை தடுத்திடவேண்டும். முகாங்களுக்குள்ளிருந்து இளையோர் காணாமல் போவதை தடுத்திட வேண்டும். இடைவிடாத கோரிக்கைகள் மூலம் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தி முகாங்களுக்குள் சர்வதேச கண்காணிப்பாளர்கள் செல்வதை அனுமதிக்கச் செய்திட வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாம் பழைய கொள்கை பேதங்களை மறந்து ஒன்றுபடவேண்டும். இதன் மூலந்தான் எம் தயாக பூமியை ஆக்கிரமிப்பிலிருந்து காவாந்து பண்ணலாம். ஒன்றுபடுவதெனில் பழைய கசப்பான அனுபவங்களை முதலில் மறக்கவேண்டும். அதனை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் புலிகளின் சுவடுகளை குறிப்பாக விடுதலைப்புலிகளின் புலிக்கொடியை மறக்கவேண்டும். இதன்மூலமாகத்தான் விடுதலைப்புலிகள் ஒதுக்கி வைத்தவர்களை இணைத்துக் கொள்ளமுடியும். கொடியல்ல அதைவிட ஒற்றுமைதான் முக்கியமானது. எல்லாவற்றையும் புதிதாய் ஆரம்பிக்கவேண்டும். புலிகளின் தொடர்ச்சியாக எதுவும் இல்லாதிருப்பதாய் பார்த்துக் கொண்டாலே பலரும் இணைவர். புலிகளின் ஆதரவாளர்களும் இணைவர். ஏனென்றால் அவர்களின் இழப்பின் வேதனையை ஆற்றுப்படுத்த ஒரு தலைமையின் தேவை இருக்கிறது. கே.பி.யின் கைதிற்குப் பின்னர் அதன் தேவை இன்னும் வலுவடைந்திருக்கிறது. இத் தருணந்தான் நமக்கான தலைமையைத் தேர்ந்தெடுக்கச் சரியான தருணம். தாமே முன்வந்த தலைமைகளை ஆதரித்து ஏற்றுக்கொண்டோம். தோற்றுப்போனோம். இனி தலைமையை நாமே தேர்வுசெய்வோம். நூறு தலைமைகளை தெரிவு செய்வதாயினும் தெரிவுசெயயுங்கள் தவறில்லை ஆனால் அவர்கள் அடிப்படையில் ஒருவரோடொருவர் நட்புள்ளவர்களாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். பல முனைகளிலலிருந்தும் தாக்குதல் இருந்தால் பகைவனின் குறியும் பல முனைகளில் சிதறும். இதுவும் புலிகள் செய்துவிட்ட தவறே. அதை இனிமேலும் ஆரம்பிக்கக்கூடாது. எல்லோரும் செல்ல வேண்டிய குறி ஒன்றே. ஆதலால் ஆளையாள் பகைத்தே எல்லாமே அழிந்தது எனக் கற்றுக்கொண்ட பாடத்தின் பெறுபேறாய் ஒற்றுமையாய் இருப்பதை உறுதி கொள்வோம். ஒன்றன்கீழ் அணிதிரள்வோம் அல்லது காலம் கனியும்போது ஒன்றாகக் கை-கள் கோர்ப்போம். ஆதலால் ஒற்றுமையே பிரதானமானது.

விடுதலைப் புலிகளை ஒழிந்துவிட்டதாக சிங்கள் அரசு அறிவித்திருக்கிறது. அதுதான் உண்மையும். ஆதனால் புதிய தலைமைக்கான வெற்றிடம் துலாம்பரமாகத் தெரிகிறது. அதை நிரப்புவதே இப்போதய தேவை. அதைவிட்டுவிட்டு பழையதை விமர்சித்துக் கொண்டிருப்பதும், குதூகலிப்பதும் தமிழரின் கடமையாக இருக்க முடியாது! அவர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ அவர்களின் கதை முடிந்துவிட்டது இனி நடக்கப் போவதை நல்லவையாக அமைத்துக் கொள்வதே ஆரோக்கியமானதாக இருக்கும் என்ற எண்ணத்துடன் தவறில்லாத தலைமையை உருவாக்க ஒன்றுபடுங்கள்! நொந்துபோய், இரணமாகிக் கிடப்பவர்கள் புலிகளல்ல. எமது அப்பாவி மக்கள்! கையிழந்து, காலிழந்து, கண்ணிழந்து, தாயை, தந்தையை, கணவனை, மனைவியை, தனையனை, மகளை, தங்கையை தம்பியை, அக்காவை, உற்றாரை, ஊரவரை இழந்து சிறை முகாமுக்குள் நிற்பது அந்த அப்பாவி மக்கள்தான். அவர்கள் எங்கள் சகோதர சகோதரிகள்தான், எங்கள் தமிழ் உறவுகள். தங்கள் முன் நடந்த கொடுமைகள் கண்டு அவர்களில் எத்தனையோபேர் புத்திசுவாதீனமாக இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்ப்போம். இவர்களை இன்னமும் சித்திரவை செய்த கொண்டிருக்கும் சிங்கள கொடுங்கோண்மை அரசை எதிர்த்துநிர்ப்போம். பழையனவற்றுகான விமர்சனங்களைவிட இதுவே இப்போது பிரதானமானது. பழையதை மறந்து அதன் மூலம் ஒன்றுபடுவோம்! புதிய தலைமையை உருவாக்குவோம்!

அடுத்தது, மூன்று வருடங்களுக்கு முன்னர் வைகறையில் எழுதியதொரு கட்டுரையில் சொன்னதுதான், அதை மீண்டும் சொல்ல விளைகிறேன். எங்கள் மீதான சிங்கள ஆக்கிரமிப்பு, அதனாலெழுந்த எங்கள் குமுறல்கள், ஆதங்கங்கள், எங்கள் இழப்புகள், எங்கள் வேதனைகள் எலலாமே எங்களுக்குத் தெரிந்தவைதான். எங்களுக்கு மட்டும் தெரிந்தவைதான். அவற்றை நாங்களே குறிப்பாக புலம்பெயரந்து பிறதேசங்களில் வாழும் நாங்களே பெருந்திரளாக ஒன்று கூடி எங்களுக்கே கேட்கக் கூடியதாக வாய்கிழியக் கத்துவதால் ஆவது ஒன்றுமே இல்லை. அவை வெளி உலகிற்குத் தெரியவரவேண்டும். பிற நாட்டவரின் அனுசரனையும், ஆதரவும் எங்களுக்குத் தேவை. புலிகள் செய்திட்ட இத் தவறுகளை இனி மேலும் செய்யாது எமது பிரச்சனைகளுக்கான ஆதரவை சர்வதேச ரீதியில் திரட்டுவதற்கு எம்மாளானவற்றை நாம் செய்திட வேண்டும். முதலில் இதேபோன்ற ஆக்கிரமிப்புகளுக்கு முகங்கொடுத்துப் போராடும் இனத்தவர்களுடன் நல்லுறவைப் பேணவேண்டும். அவர்கள் மேற்கொள்ளும் கவனஈர்ப்பில் நாங்களும் கலந்துகொள்ளவேண்டும். அதன்மூலம் அவர்களின் நட்பையும் எமக்குத் துன்பம் வரும்போது அவர்களிடமிருந்து ஆதரவையும் பெற்றுக்கொள்ளமுடியும். அடுத்தது பல நாடுகளின் பன்முக ஆதரவு. எமது வளம் மற்றவர்களுக்கு தேவையாக இருக்கின்றபோதுதான் அவர்கள் எமக்குத் தோள்கொடுப்பார்கள். எந்த நாடும் தமக்கு தேவைகள் இருக்கின்ற இனக் குழமத்துக்கே அனுசரனையாக இருப்பார்கள். பிற நாடுகள் குறிப்பாக வல்லரசு நாடுகள் எதிர்பார்க்கும் அல்லது தங்கியிருக்கும் எந்த மூலவளமும் எம் தாயகப்பூமியில் இல்லை. அதனால் எமது மூளைவளத்தைக் கொண்டே வல்லரசுகளின் அன்பையும் ஆதரவையும் பெறவேண்டிய யுக்தி எமது அடுத்த தேரிவு. யூதர்களும் இதே வழிமுறையிலேயே தமது கனவை நனவாக்கினர். யூதர்கள் செய்த அடாவடித்தனங்களுக்கு வக்காலாத்து வாங்குவதற்கல்ல, அந்த வழிமுறை எமக்கும் கைகொடுக்கும் என்றே சொல்லவருகிறேன். எமக்கான சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு எம்மால் திரட்டக்கூடிய ஆயுதங்கள் அறிவும், கலையும், பணமுமே. குறிப்பாக பூமிப் பந்தெங்கும் பரந்து புலம்பெயர்து வாழும் எமக்கே இது இலகுவானது என்பதுடன் விரைவானதும் சாத்தியமானதுமாகும். யூதர்களிடம் இருந்த செல்வமும் கல்வியறிவும் கிற்லருக்கு மானப் பிரச்சனையாக இருந்திருக்கலாம் ஆனால் அவர்கள் வாழ்ந்து வந்த ஏனைய நாடுகளுக்கு அவை தேவையாக இருந்ததால்தான் இஸ்ரேல் என்ற நாட்டை அங்கிகரிக்க வல்லரசுகள் முன்வந்தன. நாங்களும் அதே நிலைமையைக் கொண்டுவரவேண்டும். காசு மட்டும் கொடுத்துவிட்டால் அங்கு எல்லாமே நடந்துவிடும் என்ற போக்கிலிருந்து நாம் மாறவேண்டும். ஒவ்வொரு தமிழனும் தனது மன உடல் வளத்தை அர்பணிக்கவேண்டும். அதன் தேவையே அதிகம்.

"தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் நாங்கள்" என்ற ஒற்றுமைதான் புதிய தலைமையின் அடிப்படைச் சிந்தனையாக இருக்கட்டும். எப்போது முசுலீம் தமிழர், யாழ்ப்பாணத்து தமிழர், மட்டக்களப்புத் தமிழர், மலையகத் தமிழர்,

**காசு மட்டும் கொடுத்துவிட்டால் அங்கு எல்லாமே நடந்துவிடும் என்ற போக்கிலிருந்து நாம் மாறவேண்டும்.**

திருமலைத் தமிழர், மன்னார்த் தமிழர், வன்னித் தமழர் என்பது போன்ற பேதம் இல்லாது எழுத, கதைக்க, நினைக்கப் போகிறோமோ அப்போதுதான் எமது விடுதலையின் முதலடியை நாம் வைத்தவர்களாவோம். இந்து, முசுலீம், கிருத்தவம், சமயமில்லமை என்ற பேதங்கள் இனித் தேவையில்லை. பிரதேச பேதங்கள் தேவையில்லை. ஆண் பெண் பேதம் தேவையில்லை. அத்தகைய பேதம் எதையும் கொண்டிராத எம் இளையோரால்தான் முடியும். இதனை இலங்கையில் இருந்து செய்வதிலும் பிற நாடுகளில் இருந்து செய்வதுதான் இலகுவானதும் உறுதியானதுமான இருக்கும். குறிப்பாக புலம்பெயர்து வாழும் இளையோரே இதற்கு மிகத் தகுதியானவர்கள். அவர்களிடந்தான் பல்நாட்டு அரசியல் நெறியை உள்வாங்கும் மனப்பாண்மையும், பேதமற்ற பரந்த உள்ளமும் இருக்கிறது. அவர்களிடம் சாதி, மத, பால் பேதமில்லை என்ற மனப்பான்மை இருக்கிறது. ஏனென்றால் புலம்பெயர் சூழல் அதற்கான வழியை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. அவர்கள் தமிழர்களைத் தமிழர்களாக மட்டுமே பார்க்கிறார்கள். அதுதான் சரியான தேவையுங்கூட. அதனால் அவர்கள் தலைமை தாங்கட்டும். ஏனையோர் அவர்களுக்கு பக்க பலமாயும் உறுதுணையாகவும் இருக்கட்டும். குறுகிய மனப்பான்மையை அவர்களுள் புகுத்தாமல் முதியவர்களே வழி விடுங்கள்! முடிந்தால் அவர்களுக்கு பக்க துணையாக இருங்கள். அதுதான் முதிய ஈழத் தமிழர்களின் கடமையாக இருக்கட்டும்!

புலம் பெயர்ந்தவர்களால்தான் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதல்ல அவர்களால்தான் சர்வதேச கவனத்தையும் சர்வதேச ஆதரவையும் இலகுவாகத் தேடித்தரமுடியும் என்பதே எனது கருத்து. அதேபோல் இலங்கைவாழ்த் தமிழர்களும் தமக்கான வேலைத்திட்டத்தை சமாந்தரமாக நடத்தவேண்டிய பொறுப்புடையவர்கள். இலங்கை உள்நாட்டு அரசியலில் சாதிக்க வேண்டிய பலவும் அவர்கள் கைகளிலேயே இருக்கின்றது. அயல்நாடான இந்தியாவிற்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வல்லமையும் பொறுப்புங்கூட அவர்களுக்கே இருக்கின்றது. இந்திய அரசியல்வாதிகளுடனல்ல இந்திய பொதுமக்களுடன், குறிப்பாக தென்னிந்திய மக்களுடன், அதிலும் தமிழ்நாட்டுப் பொது மக்களுடன், சுக துக்கங்களில் பங்களிப்பதன்மூலமான நட்புறவையும், பிரச்சனைகள் பற்றிய தெளிவை பரிமாறிக்கொள்வதன் முலம் பரஸ்பரபுரிந்துணர்வையும், இதனால் இந்திய பொதுமக்கள் உண்மை நிலமையை விளங்கிக் கொள்வததும் இத்தெளிவினால் இந்திய பொதுமக்கள் தம் மாநில, மத்திய அரசுகளின் மீது கொடுக்கும் அழுத்தத்தையும் அதன்மூலமான அவ்வரசுகளின் தமிழர் ஆதரவை நோக்கிய கொள்கைமாற்றத்தையும் இலங்கைத் தமிழர் சாதகமாக்கிக்கொள்ளமுடியும். இது இலங்கையில் இருக்கும் அரசியல் வாதிகளது குறிப்பாக தமிழ் அரசியல் வாதிகளது மனமாற்றத்திற்கு நிச்சம் வழிகோலும் அல்லது தமிழர் நலன் சார்ந்த தமிழ் அரசியல் வாதிகள் மட்டுமே நிலைத்திருக்கத் தக்கதாக நிலைமை மாறும். இதையே விடுதலைப்புலிகள் செய்திருக்க வேண்டும். தவறிவிட்டதால்தான் எமது பிரச்சனைகள் சாதாரண இந்திய மக்களை எட்டியிருக்கவில்லை. இதனலேயே இந்திய அரசு தனது பொருளாதார நலன் கருதிய பாதையில் தமிழர்களை பலியிடவைத்தது. ஆதலால் இந்த வேலைத்திட்டம் இலங்கை வாழ் தமிழர்களின் பிரதான திட்டமாகிறது. அதிலும் பிரதானமாக சிங்கள மக்களிடம் எமது நியாயங்களையும் எமது பலத்தையும் எடுத்துச்சொல்லும் கடமை இலங்கையில் வாழும் தமிழர்களைிடமே இருக்கிறது. அதற்கான முதல்ச் சந்தர்ப்பமாக, வரவுள்ள யனாதிபதித் தேர்தல் அமையவுள்ளது. இத் தேர்தலில் போட்டியிடும் 22 வேட்பாளர்களில் 21 பேர் சிங்களவர்கள். இதனால் சிங்களவர்களின் வாக்குகள் 21 பேர்களுக்கு பங்கிடப்படப் போகின்றன. 50 சத வீதத்திலும் அதிகமான வாக்குகள் பெற்றால்த்தான் யனாதிபதியாக ஆகலாம் எனும் நிலையிருக்கையில் இதற்கான வாய்ப்பு எல்லா வேட்பாளர்களுக்குமே மிகவும் அரிதானதாக இருக்கப்போவது கவனிக்கத்தக்கது. இந்நிலையில் வேட்பாளர்களில் முன்னணியில் இருப்பதாக பலரும் கருதிக்கொள்ளும் மகிந்த ராயபக்ச, சரத் பொன்சேகா ஆகியோரில் எவருக்கு தமிழர்கள் தமது வாக்குகளை அளிக்கப்போகிறார்கள் என்ற கேள்வியை பலரும் முன் வைக்கிறார்கள். ஆனால் தமிழர்களை வழி நடத்தவேண்டிய தமிழ்த் தலைமைகள் மௌனமாகவே இருப்பது வேடிக்கையானதும் கேலிக்குரியதுமாகும். இவ்விருவரில் எவருக்கு என்பதல்ல இவர்கள் இருவருக்குமே தமிழர்கள் வாக்களிக்கக்கூடாது என்பதைக் கூறுவதே சரியான தமிழ்த் தலைமையாக இருக்கும். அண்மைய தமிழர் அழிவுக்குப் பிரதான காரண கர்த்தாக்கள் இவ்விரு வேட்பாளர்களுந்தான். இவர்களில் எவருக்கு வாக்களித்தாலும் அது தமிழின அழிப்பை தமிழர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதையே சொல்லாது சொல்லிக்கொள்ளும். தமிழர்கள் இவர்களுக்கு வாக்களிக்காது தவிர்க்கின்ற போது இவர்கள் இருவருக்கும் இடையிலான போட்டி அதிகரிப்பதுடன் இருவருமே 50 சத வீதத்தை எட்டும் வாய்ப்பும் பாரதூரமாகக் குறையும். அதனால் தமிழர்களின் இருப்பும் பலமும் அத்தியாவசியமா

(23ம் பக்கம் பார்க்கவும்)

## அவநம்பிக்கையில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து துல்லியமாக தெரி கிறது. ஆனால் பாராளு மன்றத்திலும் மக்களிடத்திலும் புலிகள் பற்றிய பிரமையொன்றை அவர் கள் கட்டிக்கொண்டே இருந்தனர். இதே வேளை புலிகளின் ஜனனாயக மறுப்பாலும் மாற்று இயக்கங்களின் மேலான திட்டமிட்ட தாக்குதலின் காரணமாகவும் அரசிடம் பாது காப்பு வாங்கிய மற்றய அமைப்புகள் பலவும் மகிந்த அரசை புலிகளிடமி ருந்து ஜனனாயகத்தை மீட்ட நல்லரசாக புகழ்ந்து மகிந்த அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குமாறு குரல் கொடுக்கின்றன. அவர் களுக்கும் மகிந்த அரசு இனப் பிரச்சனைக் கான தீர்வை வழங்கும் என்பதில் நம்பி க்கை இல்லை. இதனை தனிப்பட்ட ரீதியில் தெரிவிப்பார்கள். ஆனால் மக்கள் மத்தியில் வெளிப்படையாக இதனை கூறும் தைரியம் அவர்களுக்கு இல்லை. சமீபத்தில் ஒரு கட்டுரையில் வந்த உப கதை ஞாபகத் துக்கு வருகிறது. ஒரு விஞ்ஞானி தனது வீட்டு வாசலில் குதிரை லாடனொன்றை தொங்கவிட்டிருந்தாராம். குதிரை லாடனை வாசலில் தொங்கவிட்டால் கெட்ட ஆவிகள் கிட்ட வராது என்பது ஐதீகம். அவரது வீட்டுக்கு வந்த இன்னொரு விஞ்ஞானி லாடனை கண்டு ஆச்சரியமுற்று உங்களுக் கும் மூட நம்பிக்கை இருக்கின்றது என் பதை நம்பமுடியாமல் இருக்கிறது என்றா ராம். உடனே அந்த விஞ்ஞானிக்கு கோபம் பொத்திக்கொண்டு வந்தது. வந்த வரை பார்த்து அவர் சொன்னார்: எனக்கும் இதில் நம்பிக்கையில்லை ஆனால் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் இது வேலை செய் யும் எனவே நான் அதை தொங்கப் போட்டி ருக்கிறேன். இந்த விஞ்ஞானியின் நிலை யில் தான் சிறு பான்மை இனங்களின் அரசி யல் கட்சிகள் இன்று இருக்கின்றன.

தமிழர் தேசிய கூட்டணியின் அரசியல் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஒத் தோடி அரசியலாகவே இருக்கிறது. விடு தலை புலிகள் பலமாயிருந்த காலத்தில் தனிப்பட்ட ரீதியாக புலிகளை விமர்சனம் செய்யும் அதேவேளை மக்கள் மத்தியில் புலிகளே நாடு காப்போர். புலிகளை விட் டால் தமிழருக்கு கதியில்லை என முழக் கம் போட்ட பழக்கத்தால் இன்று காத்திர மான ஒரு முடிவை எடுக்க முடியாதவர்க ளாகவே இருக்கிறார்கள். மகிந்தவை ஆத ரித்தால் தமக்கு மக்கள் ஆதரவு கிடைக் குமா அல்லது சரத்தை ஆதரித்தால் தம்மை மக்கள் தெரிவு செய்வார்களா என்பதில் இவர்கள் தமது காலத்தை வீணடிக்கிறார்கள்.

இறுதியாக ஜனவரி நாலாம் திகதி 20 10 இல் தமிழ் தேசியக்கூட்டணியினர் சரத் பொன்சேகாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந் தத்திற்கு வந்து அவருக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை திரிவிக்க முடிவு செய்த னர். சரத் பொன்சேக கையொப்பமிட்ட அந்த ஒப்பந்தத்தின் சாராம்சமானது அடிப் படையில் சிவில் நிர்வாகத்தை சீரமைப்பது அதியுயர் பாதுகாப்பு வலையங்களை நீக் குவது. தமிழ் பேச தெரிந்த அதிகாரிகளை பொலிசில் நியமிப்பது. அனைத்து ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைவது. இடம் பெயர்ந்தோரை துரிதமாக மீள் குடி யமர்த்துவது. கன்னி வெடி அகற்றுவதை துரிதப்படுத்துவது. சட்டவிரோதமாக காணி கள் வீடுகளில் குடியிருப்போரை அகற்றி சொந்தக்காரரிடம் காணிகளை ஒப்படைத் தல். விவசாயத்தை ஊக்கிவிக்க விசேட மானியங்கள். மீன் பிடிப்போர் சந்திக்கும் தடைகளை முற்றாக நீக்குதல். சகல பொருளாதார போக்குவரத்து தடைகளை நீக்குதல். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனை வருக்கும் (ராணுவத்தினர் உட்பட) நிவார ணம் வழங்குதல். தடுப்புக்காவலில் இருக் கும் அனைவரையும் விடுதலை செய்தல். அவர்களுக்கு புனருத்தாரண வசதிகளை செய்தல். அவசரகாலச்சட்டத்தை நீக்குதல் ஆகிய அம்சங்களை கொண்டிருக்கின்றது.

அடிப்படை ஜன நாயகத்தை மீள்கட்ட மைப்பது அவசியமென்பதும் மேற்கண்ட விடயங்கள் அதற்கொரு உந்து சக்தியாக விளங்குமென்பதும் யதார்த்தமெனினும் ஆச் சரியத்துக்கு உரிய விடயமென்றால் சிறு பான்மை இனங்களின் அடிப்படை உரிமை கள் சம்பந்தமாக எதுவும் பேசப்படவில்லை என்பதே. மறு புறம் ராஜபக்ச அரசும் முகா ம்களை திறந்து மக்களை மீழ்குடிஜமப்பது. கிழக்கு மாகாணத்தில் மீன்பிடித்தடையை முற்றாக நீக்குவது. போக்குவரத்து தடை களை நீக்குவது. யாழ்ப்பாணத்தில் கேர்பி யுவை நீக்குவது போன்ற நடவடிக்கை களை மேற்கொண்டுதான் வருகிறது. மேல் கண்ட நிகழ்ச்சி நிரலில் பெரும்பாலான வையை தாங்கள் செய்வதாக மகிந்த அரசும் ஒத்துக்கொண்டிருக்கின்றது. அது மட்டுமல்ல 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல் படுத்துவதென மகிந்த சரத் இருவ ரும் ஒத்துக்கொண்டிருக்கும் போது சரத்திற் கான ஆதர்வு பற்றி கேள்வியெழுகிறது. தமிழ் தேசிய அமைப்பானது நிபந்தனையு டன் கூடிய ஆதர்வு என்று கூறிக்கொண்டா லௌம் அடிப்படையில் இது நிபந்தனை அற்ற ஆதரவே. மகிந்த யுத்தத்திற்கு பச்சை கொடி காட்டியவர் சரத் யுத்தத்தை நடத்தியவர் என்பதை தவிர இருவரும் யுத் தத்தை முன்னின்று நிகழ்த்தியவர்களே. இதனை தவிர சமீபத்தில் அவசரகால சட் டத்தை நீடிப்பது சம்பந்தமான பாராளுமன்ற வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும் போது சரத்தை பொது வாக்காளராக தேர்ந்தெடுத்த ஐக் கிய தேசிய கட்சியும் ஜே வி பியும் அமை திகாத்தனர். தேசிய கூட்டமைப்பு இதுவ ரையும் மதில் மேல் பூனைகளாக இருந்து விட்டு அரசியல் தீர்வெதிலும் உடன் பாட்டி ற்கு வராமல் சரத்திற்கு நிபந்தனையுடன் கூடிய ஆஅதரவு என சொல்வது அடிப்ப டையில் நிபந்தனை அற்ற ஆதரவே

மகிந்தவுக்கு ஆதரவு கொடுத்தாலோ சரத்துக்கு ஆதரவு கொடுத்தாலோ இலங் கையின் ஜனனாயக பிரச்சனைகளோ சிறு பான்மை மக்களின் அரசியல் பிரச்சனை களோ தீர்ந்து விடாது என்பதை அவர்கள் நம் புகிறாரகள். ஆனாலும் இருவரில் ஒருவருக்கு தாங்கள் ஆதரவு கொடுத்து லொட்ரி அர சியலுக்கு தம்மை தயாராக்குகிறார்கள். இந்த அவநம்பிக்கை மேலான நம்பிக்கையே இவர்க ளிடம் இன்றிருக்கும் பிரச்சனை.

சிறுபான்மை இனங்களின் அரசியல் அதிகார பங்கீட்டுக்கான போராட்டமானது இலங்கையில் இருக்கும் குறைந்த பட்ச ஜனனாயக சூழலுக்குள் முயற்சி செய்து பார் க்கக்கூடியதே. சாத்வீக ரீதியான சகல போரா ட்டங்களும் முடிவுக்கு வந்தபின் ஆயுதம் தூக் கினோம் என்பது அவசரப்பட்ட முடிவே. அதன் அனர்த்தத்தை நாம் அனுபவித்தோம். சகல சாத்வீகரீதியான ஜனனாயகப்போராட்டங் கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவி ல்லை என்பதே யதார்த்தம். சீர்திருத்தம் என்பது கேத்தலில் படிந்திருக்கும் கல்சிய த்தை சுரண்டி தண்ணீரை துரிதமாக கொதி க்கவைப்பது போன்றது. தண்ணீரை துரித மாக கொதிக்கவைக்கவேண்டுமெனெ முட் டாள் தனமாக கைக்குண்டொன்றை கேத்த லுக்கடியில் போட்டால் பானையும் உடை ந்து தண்ணீரும் பறந்து அருகிலிருப்பவரும் காயமடைய நேருமென்றார் ஆனந் டும் பிள்டே எனும் அரசியல் அறிஞர். அவசரப் பட்டு பானையை உடைத்த நிலை இன்று தமிழ் மக்களுக்கு.

தமிழ் மக்களும் மற்றைய சிறு பான் மையின மக்களும் தமது அரசியல் அதிகா ரங்களை வென்றெடுப்பதற்கு பெரும் புரட்சி கர சொல்லாடல்கள் தேவையில்லை. நாடு கடந்த தமிழீழமும் வட்டுக்கோட்டை தீர்மா னங்களும் இலங்கை அரசின் பயங்கர வாத பூச்சாண்டிக்கு இன்னும் உரமேற்றும் செயல்கள். உடைத்த பானை போதா தென்று உருவாகிவரும் பானையயும் உடைக்க காத்தி ருக்கும் செயல்கள்.

சிறு பான்மையினங்கள் தமது அரசியல் அதிகாரத்திற்கான முன்னெடுப்புகளை சிங் கள மக்களின் ஆதரவில்லாமல் எடுப்பதெ ன்பது சாத்தியமற்றது. சிறு பான்மை மக்க ளின் ஜனனாயக உரிமை போராட்டமானது சிங்கள மக்களின் ஜனனாயகத்துக்கான போராட்டத்துடன் பின்னி பிணைந்திருக்கி றது என்ற யதார்த்தம் சிங்கள மக்களுக்கு உணர்த்தப்படுவதில் தான் சிறு பான்மை இனங்ளின் அரசியல் வெற்றி தங்கியிருக்கி றது. தமிழ் தேசியவாத அணுகுமுறை சிங் கள மக்களை மட்டுமல்ல மற்றைய சிறு பான்மை இனங்களையும் அன்னியப்படுத்தி விடும. இதுவரைகாலமும் சிங்கள தேசிய வாதத்திற்கு பதிலாக எழுந்த தமிழ் தேசிய வாத கருத்தியல் அடிப்படையில் மற்றைய இனங்களை புறம்தள்ளுவதாயும் ஜனநாயக மற்றதாயும் உருவகமெடுத்து பேரழிவொ ன்றை எமக்கு தந்து விட்டு போயிருக்கிறது.

தமிழ் அரசியல் அமைப்புக்கள் இந்த தேசி யவாத சிந்தனை முறையிலிருந்து விடு தலை பெற்று புதிய சிந்தனைமுறைகளை நோக்கி தம்மை நகர்த்துவது அவசியம

சிறு பான்மை இனங்களை பிரதி நிதுத் துவப்படுத்தும் கட்சிகள் அய்க்கிய தேசிய கட்சிக்கோ சுதந்திரகட்சிக்கோ நிபந்தனை அற்ற ஆதரவு வழங்குவதை தவிர்த்து சிறுபான்மை இனங்களுக்கான அனைவ ரும் குறைந்த பட்சம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை முன்மொழியுமாறு வற்புறுத்தி எந்த கட்சி அதனை முன்னெடுக் கிறதோ அதற்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்கு வது ஒரு நிலைப்பாடு. இது ஒரு குறுகிய கால நிலைப்பாடு. ஜனாதி பதி தேர்தலிலும் இந்த நிலைப்பாடே அவசியம்.

நீண்ட கால நிலைப்பாட்டிற்கான வேலை முறைகளுக்கு நாம் நீண்டதூரம் பயணிக்க வேண்டும்.

நீண்டகால யுத்தத்தினால் இராணுவமய மாக்கப்பட்ட சமூகமாக இலங்கை உருவா கியிருக்கின்றது. விடுதலை புலிகளின் ராணுவ சர்வாதிகாரம் தமிழ் மக்களின் ஆன்மா வையே கொன்று விட்டது. வட கிழக்கில் சிவில் அமைப்புக்கள் சீரழிந்து மனிதர்க ளின் அடிப்படை ஜனனாயக உரிமைகள் மீறப்படுகின்றன. ஜனாதிபதி தேர்தலில் யார் வருகின்றார் என்பதை விட சமூகத்தை ஜன நாயக விழுமியங்களை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கொண்டுவரல் அவசியம். தென் னிலங்கை மக்களின் ஜன நாயக உரிமை யானது சிறுபான்மை இன மக்களின் ஜன நாயக உரிமைகளை அங்கீகரிப்பதன் மூல மாகவே வென்றெடுக்கப்படமுடியும் என்ற கருத்தி ய லை சிறு பான்மை இனங்களை பிரதினிதுத்துவபடுத்தும் கட்சிகள் முன்னெடு க்கவேண்டும். வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ் கட்சிகளை பொறுத்தவரை நீண்ட கால விடுதலை புலிகளின் பேராதிக்கத்தின் காரணமாக மக்கள் மத்தியிலிருந்து அன்னி யப்பட்ட நிலையே தொடர்கிறது. 30 வருட காலமாக ஒரு புறம் புலியாதரவாகவும் மறு புறம் புலி எதிர்ப்பாகவும் இருந்த இந்த அமைப்புகள் அடிப்படையில் ஒரே குணாம்ச த்தை கொண்டிருக்கின்றன. புலிகளை நிபந் தனையற்று ஆதரித்த தமிழ் தேசிய கூட் டணி தனது ஆன்மாவை இழந்து தனக் கென ஒரு தனித்துவத்தை பேண தவறி யதே இன்று அதற்குள் ஏற்பட்டிருக்கும் நெ ருக்கடி. அது மட்டுமல்ல புலிகளின் நிழ லில் வாழ்ந்ததால் இவர்கள் மக்கள் மத் தியிலிருந்து அன்னியப் பட்டிருக்கிறார்கள். அதே வேளை புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி அரசின் பாதுகாப்பை தேடிய அமை ப்புகளும் கடந்த 30 வருடங்களாக மக்களி டமிருந்து அன்னியப்பட்டு போயிருக்கிறார் கள். அவர்களுக்கு மக்கள் மத்தியில் வேலை செய்வதற்கான வாய்ப்புகள் அரிதா கவே இருந்தன. இன்று இன்னிலை சற்று மாறியிருக்கின்றது. ஆனால் இந்த அமைப்பு கள் ஜன நாயகத்தை பேசிக்கொள்ளினும் கடந்த கால நிகழ்வுகளால் ராணுவமயமாக் கப்பட்டிருக்கின்றன. இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டு இவர்கள் தமது இதுவரை கால அரசியலை மீளாய்வு செய்வதும் தமது அமைப்புகளை ஜன நாயகமயப்படுத்துவ தும் அவசியமாகிறது.

ஜன நாயகம் என்பது தேர்தலால் மட் டும் தீர்மானிக்கப்படுவதில்லை. சமூக கலா ச்சாரம் ஜன நாயகப்பண்பு கொண்டதாக மாற வேண்டும் .

சிறு பான்மையினங்களின் கட்சிகள் நம்பிக்கை மேல் நம்பிக்கை வைக்கவும் மக்கள் சார்ந்த அரசியல் செய்யவும் தம்மை தயார் படுத்துவார்களா என்பதிலேயே ஜன நாயகத்துகான - சிறு பான்மை இனங்களின் அரசியல் உரிமை சம்பந்தமான -அரசியல் போராட்டமும் தங்கியிருக்கிறது. ■

> **நாடு கடந்த தமிழீழமும்**
> **வட்டுக்கோட்டை தீர்மானங்களும்**
> **இலங்கை அரசின் பயங்கர வாதப்பூச்சாண்டிக்கு**
> **இன்னும் உரமேற்றும் செயல்கள்.**
> **உடைத்த பானை போதாதென்று**
> **உருவாகிவரும் பானையயும்**
> **உடைக்க காத்திருக்கும் செயல்கள்.**

## மீண்டும்...

(22ம் பக்கத் தொடர்ச்சி)

னதான தோற்றப்பாட்டை ஏற்படுத்தும். இதுவே சர்வதேச நாடுகளுக்கு தமிழர்கள் சொல்லவேண்டிய சேதியாக இருக்கும். இந் நிலையில் தமிழர்கள் இவ்விருவருக்கும் வாக்களிக்காவிடின் எவருக்கு வாக்களிப்பது என்ற கேள்வி எழத்தான் போகிறது. தனி த்துப் போட்டியிடும் தமிழரான சிவாயிலிங்க த்திற்கே வாக்களிப்பதைத் தவிர வேறு தெரிவில்லை என்பதே பதிலாக அமையும். முழுத் தமிழர்களும் அவருக்கு வாக்களி த்தாலும் அவர் யனாதிபதியாவதற்கான 50 சத வித வாக்குகளைப் பெறப்போவதில்லை என்பது உண்மையெனினும், அதைவிட மகிந்தாவோ சரத்தோ யனாதிபதியாவதற் கான வாய்ப்பை குறைப்பதற்காகவும் தமிழ ரின் தனித்துவத்தைக் காட்டவும் சிவாயிலி ங்கத்திற்கே தமிழர்கள் வாக்களிக்கக் கட மைப்பட்டவர்கள். இது எவ்வளவுக்குச் சாத் தியம் என்பதே இப்போதுள்ள கேள்வி. ஏனெ னில் எமக்குள் இருக்கும் ஒற்றுமையின்மை அத்தகையது! இதிலும் எமது ஒற்றுமையீ னம் தொடர்ந்து, தமிழரின் ஆதரவு சிவா யிலிங்கத்திற்கு இல்லாது போயின் அது தமிழினம் சந்தித்த இன்னொரு தோல்வியா கத்தான் இருக்கும். தோல்விகள் எமக்கு புதிதல்லவே. எங்களிடம் எப்போது ஒற்று மையும் தேசிய உணர்வும் மொழிப்பற்றும் ஏற்படுகிறதோ அப்போதுதான் எமது தோல் விகளுக்கும் முடிவுவரும். அதுவரை எத்த னைமுறை விழுந்தாலும் அத்தனைமுறை யும் எழுவோம் இளம் சந்ததியரிடம் ஒற்று மைக்கான தெளிவு தெரிகிறது என்ற நம்பி கையுடன். ■

## ஒருபுறம்...

(18ம் பக்கத் தொடர்ச்சி)

க்காத வாக்குரிமையை தமிழ் மக்கள் பயன் படுத்தக் கூடிய வலிமை கிடைத்திருக்கின்றது.

இதற்காகத் தான் வெளிநாடுகளில் இருந்து நாங்கள் கொலைப் பயமுறுத்தல்களுக்கும் அடி பணியாது, துரோகிப்பட்டங்களுக்கும் பயப் படாது குரல் எழுப்பிக் கொண்டிருந்தோம்.

அந்த உரிமை இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது அவர்களுடைய உரிமை. தங்கள் அறிவுக்கு எட்டியபடி அந்த முடிவை எடுக்க வேண்டியது அவர்கள் கடமை. நாங்கள் இங்கிருந்து எங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்த முடியுமே தவிர, அவர்களுக்கு கட்டளையிட நாங்கள் புலிகளும் அல்ல. சுய நலத்திற்கு அவர்களைப் பகடைக் காய்களாக்கி ஏமாற்ற நாங்கள் கூட்டமைப்பும் அல்ல.

அவர்கள் எந்த முடிவை எடுத்தாலும் அதன் பயனை அனுபவிக்கப் போவதும், அதன் பாதிப்பை எதிர் கொள்வதும் அவர்கள் மட்டுமே. வெளிநாடுகளில் உள்ள நாங்கள் அல்ல.

வெளிநாடுகளில் உள்ள யாராவது அவர்களுக்கான அரசியல் தலைமையை வழங்க

**இங்கே இருந்து அறிக்கை விடுவதோ. தேர்தல் நடத்துதோ எந்த விதத்திலும் அந்த மக்களுக்குக் பயன்படப் போவதில்லை. அரசியல் ரீதியாக அவர்களின் இனப்பிரச்சனைக்குத் தீர்வோ, விடுதலையோ காண இவை எந்த விதத்திலும் உதவாது.**

வேண்டும் என்று நினைத்தால், அதற்காகச் செயற்படுவதற்கான சூழல் அங்கே உருவாகியிருக்கிறது. பலர் அங்கே சென்று செயற்படுகிறார்கள்.

ஆனால், எல்லாராலும் அவ்வாறு செய்ய முடியாவிட்டாலும், எங்கள் எல்லாராலும் செய்யக் கூடிய விடயம் ஒன்றுள்ளது.

இன்றைய நிலையில் அரசியல் என்பது ஒரு ஆடம்பரப் பொருள். இன்று அத்தியாவசியமானது பொருளாதாரப் பிரச்சனை. அதிலும் வெளிநாடுகளில் உறவினர்களைக் கொண்டிராத, நாளாந்தக் கூலிப் பிழைப்பில் ஈடுபட்டிருந்த பலரின் நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அவர்களுடைய பொருளாதார நிலைமையை மேம்படுத்த தனிப்பட்ட ரீதியிலோ, கூட்டாகவோ பல செயற்பாடுகளைச் செய்ய முடியும்.

இங்கே இருந்து அறிக்கை விடுவதோ, தேர்தல் நடத்துவதோ எந்த விதத்திலும் அந்த மக்களுக்குக் பயன்படப் போவதில்லை. அரசியல் ரீதியாக அவர்களின் இனப்பிரச்சனைக்குத் தீர்வோ, விடுதலையோ காண இவை எந்த விதத்திலும் உதவாது.

எனவே, தேர்தல் முடிவு வந்ததும் எதிர்பார்த்த முடிவு வந்தால் துள்ளிக் குதிப்பதோ, எதிர்பாராத முடிவு வந்தால் கருணாநிதி போல திட்டுவதோ சரியானது அல்ல.

ஒரு புறம் வேடம், மறுபுறம் நாகம் என்ற நிலையில்... தமிழ் மக்களின் குரல் வளையை நசித்துக் கொண்டிருந்த புலியை வேடன் கொன்று விட்டான். தமிழ் இனம் இன்று வேடனுக்கும் நாகத்திற்கும் இடையில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது. நாகத்தின் மிருகத்தனத்தை விட, வேடனிடம் மனிதத் தன்மை இருக்கும் என்பது எங்கள் நியாயமான எதிர்பார்ப்பு.

ஆனால், யாழ்ப்பாணப் பாரம்பரியங்கள் எங்களுக்கு நம்பிக்கை தருவனவாக இல்லை. தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக சரத்தை ஆதரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. யாழ்.மாநகரசபைத் தேர்தலின் முடிவுகளை நாங்கள் நினைவு படுத்திக் கொள்வது நல்லது. அமெரிக்கா, ஐ.தே.கட்சி என்றவுடன் எங்களவர்களுக்கு தனியான பிடிப்பு.

தலைவர் வானத்திலிருந்து வந்திறங்குவார், அப்போது வரைக்கும் சம்பந்தன் இந்த ஈழத்தை வைத்திருந்து தலைவரின் காலடியில் ஒப்படைப்பார் என்று அவர்கள் நம்பினால் நாங்கள் ‘மக்கள் தீர்ப்புக்கு தலைவணங்கியே ஆக வேண்டும்’. ‘தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்’ என்று தந்தை செல்வாவை எல்லாம் சாட்சிக்கு அழைக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஜனநாயக முறையில் தேர்தலின் போது தவறிழைத்தாலும், தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண் டாலும், தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள நாலைந்து வருடங்களின் பின்னால் இன்னொரு சந்தர்ப்பம் வந்து கொண்டே இருக்கும்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கால் நூற்றாண்டிலும் கிடைக்காத அந்தச் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றியை நாங்கள் கொண்டாட வேண்டும்.

அந்தச் சுதந்திரம் கிடைத்ததற்கான காரணம் புலிகள் அல்ல, மகிந்த தான் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ள மறந்தாலும்!

**நன்றி: தாயகம்**


# பன்முக வெளி

23 ஜனவரி 2010

நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் மீதும்
நிகழ்தப்படுவதற்காகத் தயார் நிலையில்
திட்டமிடப்பட்டுக் கொண்டிருக்கும் வன்முறைகள் மீதும்
நாம் தொடர்ந்தும் எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கிறோம்.
நிறுவனமயப்பட்ட சமூக அதிகாரங்களுக்கெதிராக
கதைகளாகவும் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும்
நாடகங்களாகவும் திரைப்படங்களாகவும்
பதிவை முன்வைத்து தொடர்ந்து இயங்கிவரும்
சகலரும் ஒன்றிணைந்து விவாதங்களை உருவாக்கும்
ஒரு புள்ளியே இந்த பன்முகவெளி.

* காலை உணவு, பதிவுகள், சுய அறிமுகம்.
* பன்முகவெளி அறிமுகமும் தேவையும். - கற்சுறா
* இடம் பெயர்வும் பெண்களும். - விஜி

தேனீர் இடைவேளை

* தமிழ் குறுந்தேசியவாதத்தின் தவறுகளுக்கு அப்பால்... - சபேசன்.
* சந்தோசம். ஆனால் யாருக்கும் தெரியாமல். - டன்ஸ்ரன்

மதிய உணவு

* வன்னி- ஓர் விமர்சனப்பார்வை. - அகங்கிளறி
* இந்துக் கலாசராத்தில் வேர்கொண்ட சாதியம். - அசுரா
* துருவத்தின் சொந்தக்காரர்கள். - வின்சன்ற்
* Brown Like me குறுந் திரைப்படம்.

ஆரம்பம்: காலை 9.00மணி
இடம்:
5225 Finch Av East,
wood said point, scarborough,ont,canada.
panmukaveli@gmail.com